

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2023 பிப்ரவரி 05 - பிப்ரவரி 11 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 44




## ஒன்றிய அரசின் தொழிலாளர் விரோத கொள்கைகளை அம்பலப்படுத்த

# ஆண்டு முழுவதும் போராட்ட இயக்கங்கள்

## தொழிலாளர்களின் தேசிய மாநாடு அறைகூவல்!

தொழிலாளர்களின் தேசிய மாநாடு புதுடெல்லியில் உள்ள கான்ஸ்டிடியூசன் க்ளப் அரங்கத்தில் 2023 ஜனவரி 30 அன்று நடைபெற்றது.

இந்த மாநாட்டின் தொடக்க நிகழ்வாகப், பல்வேறு சமய நம்பிக்கைகள் மற்றும் பண்பாட்டு வழக்கங்களைக் கொண்ட மக்கள், ஒற்றுமையுடன், நல்லிணக்கத்துடன் வாழ்ந்திடுவதற்காக உயிர்த் தியாகம் செய்திட்ட மகாத்மா காந்தியடிகளின் நினைவுநாளை முன்னிட்டு, காந்தியடிகளுக்குப் புகழஞ்சலி செலுத்தப்பட்டது.




அமித் யாதவ்(INTUC), பினாய் விஸ்வம்(AITUC), ராஜா ஸ்ரீதர்(HMS), கே ஹேமலதா(CITU), ஆர்.பராசர்(AI-UTUC), ஜி.ஆர்.சிவ்ஷங்கர்(TUCC), லதா பென் (SEWA), கே.கே.போரா(A-ICCTU), ரஷித் கான்(LPF), ஷத்ருஜித் சிங் (UTUC) ஆகியோரைக் கொண்ட குழு இம்மாநாட்டிற்குத் தலைமையேற்றது.

அனைத்து தொழில்களைச் சார்ந்த தேசிய சம்மேளனங்களின் தலைவர்களும் இந்தமாநாட்டில்பங்கேற்றனர். அமைப்புசாரா தொழிலாளர், சுயதொழில் புரிவோர் என்று அனைத்து தரப்பு தொழிலாளர் பிரதிநிதிகளும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

ஏஐடியுசி பொதுச் செயலாளர் அமர்ஜீத் கவுர் உள்ளிட்ட மூத்த தொழிற்சங்க தலைவர்கள் இம்மாநாட்டில் பங்கேற்று உரையாற்றினர். தலைவர்கள் ஆற்றிய உரையின் சாராம்சம் பின்வருமாறு:

தொழிலாளர் விரோத சட்டத் தொகுப்புகள், பொதுத்துறையைத் தனியார்மயமாக்குவது, தேசத்தின் இயற்கை வளங்கள் மற்றும் சொத்துக்களை இந்திய மற்றும் அந்நிய கார்ப்பரேட் நிறுவனங்களிடம் தாரை வார்ப்பது, தேசத்தின் இறையாண்மை, சுயச்சார்பு, சுதந்திரம் ஆகியவற்றுக்குப் பேரபாயம்

தொடர்ச்சி 4ம் பக்கம்



கட்சிக் கடிதம்

# ஈரோடு இடைத் தேர்தல்



ஆணையத்தின் இடைத் தேர்தல் அறிவிப்பு வெளியானதும். திமுகழகத் தலைவரும், தமிழ்நாடு அரசின் முதலமைச்சருமான .மு.க.ஸ்டாலின் உடனடியாக தோழமைக் கட்சித் தலைவர்களுடன் கலந்து பேசி, ஈரோடு (கிழக்கு) சட்மன்றத் தொகுதியில் காங்கிரஸ் கட்சி போட்டியிடும் என அறிவித்தார்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கொள்கை வழியிலான இயல்பான உறவில் உருவானது என்பதால், காங்கிரஸ் கட்சி போட்டியிடும் என்பதில் எந்தச் சிக்கலும் ஏற்படவில்ல.

காங்கிரஸ் கட்சியும் மக்களின் உள்ளம் கவர்ந்த தலைவர் ஈ.வி.கே. எஸ்.இளங்கோவன் ஈரோடு ( கிழக்கு) சட்மன்றத் தொகுதி வேட்பாளர் என அறிவித்தது.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் தேர்தல் பணிகளை தொடங்கி விட்டன. வீடு வீடாக வாக்கு சேகரிக்கும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. வரலாறு காணாத வெற்றி பெறும் என்பது உறுதி.



**பேரன்புமிக்க தோழர்களே!**

**ஈரோடு (கிழக்கு) சட்டமன்றத் தொகுதியின் உறுப்பினர், .தந்தை பெரியாரின் கொள்ளுப் பேரனும், காங்கிரஸ் கட்சியின் முன்னணி தலைவர் ஈ.வி.கே. எஸ்.இளங்கோவன் அவர்களின் மகனுமான திருமகன் ஈவெரா ஜனவரி 4, 2023ல் காலமானார். அவரை இழந்த துயரமும், வேதனையும் நமது இதயத்தில் இருந்து விலகவில்லை. அவரை இழந்து கதறி அழுத தொகுதி மக்களின் கண்ணீர் ஈரம் இன்னும் காயவில்லை. காலம் ஆற்றுப் படுத்தும் முன்பாக...**

இந்தியத் தேர்தல் ஆணையம் ஈரோடு (கிழக்கு) சட்டமன்றத் தொகுதிக்கு வரும் 27.02. 2023 ஆம் தேதி இடைத் தேர்தல் நடைபெறும் என ஜனவரி 22, ல் அறி வித்துவிட்டது.

இங்கு மட்டுமல்ல மேகாலயா, நாகாலாந்து மற்றும் திரிபுரா மாநில சட்டமன்றங்களுக்கு பொதுத் தேர்தலும், லட்சத்தீவு மக்களவை தொகுதி மற்று ம் தமிழ்நாடு உட்பட மேற்குவங்கம், ஜார்கண்ட், மகாராஷ்டிரா மாநிலங்களில் ஆறு சட்டமன்றத் தொகுதிகளுக்கும் இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் எந்தவொரு நாடாளுமன்ற, சட்டமன்றத் தொகுதியிலும் மக்கள் பிரதிநிதி இல்லாமல் இருக்கக் கூடாது என்ற மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தை பேணுவதில் தேர்தல் ஆணையம் அக்கறை காட்டுகிறது.

கடந்த 2021ல் நடந்த சட்டமன்றத் தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில், ஈரோடு (கிழக்கு) சட்மன்றத் தொகுதியில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக களம் இறக்கப்பட்ட திருமகன் ஈவெரா மாபெரும் வெற்றி பெற்றார்.

நாற்பத்தி நான்காவது வயதில் சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பேற்ற இளைஞர் திருமகன் ஈவெரா, ஈரோடு மக்களின் உணர்வறிந்து செயல்படும் நல்ல தலைவராக வளர்ந்து வந்தார். அவரது பொதுவாழ்வு பணி கண்டு, ஒவ்வொரு நாளும், பெருமைப்பட்டு மகிழ்ந்து வந்த நேரத்தில்...

பொது வாழ்வில் முத்திரை பதித்த தந்தை, அவருக்கு வாழ்விணையராகி, பெற்ற குழந்தைகளும், உற்றார், உறவினர்களுமே உலகம் என வாழ்ந்த தாயை, உடன் பிறந்த சகோதரனை மட்டும் அல்ல, காலமெல்லாம் சேர்ந்து வாழ வந்த இணையை, இருவரும் ஈன்றெடுத்த பிள்ளைக் கனியமுதை , ஏன்? ஒட்டு மொத்த கிழக்கு தொகுதி மக்களையும் பிரிந்து, நீடுதுயிலுக்கு போன இளம் தலைவரின் இழப்பு எந்த வகையிலும் ஈடு செய்ய இயலாத பேரிழப்பாகும்.

ஈரோடு மாநகரில் வாழும் குடும்பங்கள் அவரவர் இல்லங்களில், இழப்பு ஏற்பட்டது போல் தேம்பி அழுவதை இன்றும் காண முடிகிறது.

இந்த துயரம் கப்பிய நிலையில் தேர்தல்

ஆனால், எதிர்தரப்பு எப்படி இருக்கிறது? தெருமுனைகளில் உடைக்கபடும் தேங்காய் போல் சிதறிக் கிடக்கிறது.

அஇஅதிமுக தலைமை யாருக்கு? என்ற ‘‘மல்லுக்கட்டும்‘‘ தலைவர்களின் மோதல் செய்திகள் நாளேடுகளை நிரப்பி வருகிறது.

அந்தக் கூட்டணியில் இருந்த பாட்டாளி மக்கள் கட்சி, இடைத் தேர்தலில் நாங்கள் யாரையும் ஆதரிக்கவில்லை, போட்டியிடுவதும் இல்லை என்று அறிவித்து விட்டது.

வேறு இடம் கிடைக்குமா? அங்கு ‘‘பாய்’’ விரிக்கலாம் என ஒதுங்கிக் கொண்டது.

ஒன்றிய அரசின் அதிகாரத்தில் உள்ள பாஜக, ஐம்பத்தாறு இஞ்ச் அகலம் விரியும் மார்பு கொண்ட பிரதமரின் ஆதரவு பெற்ற மாநிலத் தலைவர் கே.அண்ணாமலை தொடை தட்டி, ‘‘தேர்தல் களம் காண வருகிறேன்’’ என கித்தாப்பு காட்டினார்.

தமிழ்நாடு பாஜகவில் தனக்கென ஒரு அடையாளம் பெற்று, பல பொறுப்புகளில் செயல்பட்டு வந்த பெண்மணி ‘‘பாஜகவில்பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை’’ எனக் கூறி வெளியேறியவர்.

ஈரோடு இடைத் தேர்தலில் அண்ணாமலை போட்டியிட்டால், அவரை எதிர்த்து ‘‘சுயேச்சை’’ யாக களமிறங்குவேன் என்று அறிவித்தார்.

இந்த அறிவிப்பிற்கு பின்னர் அண்ணாமலையார் எங்கு இருக்கிறார் என தேடும் அளவிற்கு அமைதி நிலவுகிறது.

கடந்த தேர்தலில் ஐயா, மூப்பனாரின் அருந்தவப் புதல்வர் ஜி.கே.வாசன் கரம் பற்றி நின்ற, அஇஅதிமுக ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் த.மா.க. வேட்பாளர் போட்டியிட அனுமதித்தது. இப்போதும் அவர்களைத் தானே களம் இறக்க வேண்டும்.

ஆனால், என்ன நடந்தது. ஐயா ஜி.கே. வாசனை அழைத்து, இடைதேர்தலை சந்திக்கும் ‘‘ஆற்றல்’’ தங்களுக்கு போதாது என இழிவு படுத்தி, அஇஅதிமுக போட்டியிடும் என அறிவித்து விட்டது.

அறிவிக்கப்படும் அஇஅதிமுக வேட்பாளருக்கு கட்சியின் சின்னம் தருவது யார்? எடப்பாடியாரா? ஒ பி எஸ் சா? இருவருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் உச்ச நீதிமன்றத்தின் கதவை தட்டிக் காத்திருக்கிறது. .

மக்கள் மனதில் வாழும் தலைவர் எம்.ஜி.ஆர். கண்ட ‘‘இரட்டை இலையை ‘‘ ஆளுக்கொன்றாக பிய்த்து எடுத்து வருவார்களா? அந்த ஹனுமானுக்குதான் தெரியும்.

இதற்கிடையில் அ.ம.மு.க. தனது வேட்பாளரை அறி வித்துவிட்டது. ஆக மொத்தம் எதிர் தரப்பில் அணி என்று ஒன்றும் இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

அம்மையார் ஜெ.ஜெயலலிதா மறைவுக்கு பிறகு அஇஅதிமுக அதன் கொள்கைகளை இழந்து, சந்தர்ப்பவாத கூட்டணியில் கரைந்து வருகிறது.

.நமது அணி, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி, வகுப்புவாத, மதவெறி சக்திகளை முறியடிக்கும் கொள்கை சார்ந்த கூட்டணி. அது நிலைத்து, நீடித்து, நாளும் வலுப் பெற்று வருகிறது.

சென்ற 2021 தேர்தலில் தனித்து போட்டியிட்ட மக்கள் நீதி மய்யம், ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வேட்பாளரை ஆதரிப்போம் என அறி வித்துள்ளது.

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் எதிர் தரப்பு இல்லை என்பதால் அலட்சியம் காட்டப்போவது இல்லை.

கொள்கை சார்ந்த விவாதங்ககளை முன்வைப்போம். கூட்டாட்சி கோட்பாடுகளை தகர்த்து வரும் ஒன்றிய அரசின் ஜனநாயக விரோதச் செயல்களை தோலுரித்து, தோரணம் கட்டி, தொங்க விடுவோம்.

நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்திற்கு புறம்பாக, மதச்சார்பின்மை கொள்கைக்கு மாறாக, மாநில உரிமைகளுக்கும், நலன்களுக்கும் எதிரான ஒன்றிய பாஜக அரசின் செயல்பாடுகளை, ஆதாரங்களுடன் அடுக்கடுக்காக எடுத்து வைப்போம்.

பாஜக தலைவர்கள் மட்டுமல்ல நாட்டின் குடியரசுதுணைத் தலைவர், மற்றும் ஆளுநர்கள் உட்பட அரசியலமைப்பு அதிகாரம் கொண்ட, கடமைப் பொறுப்புகளில் உள்ளோர், அதிகார அத்துமீறலில் ஈடுபட்டு வருவதால் ஏற்படும் பேரபாயத்தை மக்களுக்கு உணர்த்தி, விழிப்புணர்வு ஏற்படுத்துவோம்.

நாளுக்கு, நாள் வழக்கொழிந்து வரும் ‘‘சமஸ்கிருத‘‘ மொழிக்கு ஆக அதிகப்பட்ச நிதி ஒதுக்கீடு செய்வதும், உலகெங்கும் வாழ்ந்து வரும் பத்துக் கோடிக்கும் அதிகமான மக்கள் வாழ்வில் கலந்து வாழும் உயர் தனிச் செம்மொழியாம் ‘‘தமிழ் மொழி’’ வளர்ச்சிக்கு தேவையான நிதிஒதுக்க மறுத்து பாரபட்சம் காட்டுவதை மக்கள் மன்றத்தில் எடுத்து வைப்போம்..

திருவாளர் மோடி, முன்னர் குஜராத் மாநில முதலமைச்சராக நீடித்த காலத்தில், 2002 ஆம் ஆண்டில் நடந்த சிறுபான்மை முஸ்லீம் இன அழிப்பு தாக்குதலில் இரத்தக் கறை படிந்தவர் என்று குற்றம் சாட்டும் ஆவணப் படம் கூறும் சாட்சியத்தை வீட்டுக்கு வீடு எடுத்துச் சொல்வோம்..

நமது மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தேர்தல் களத்தில் முன்வைக்கும் கருத்துக்களை எதிர்தரப்பு, கொள்கை ரீதியாக எதிர் கொள்ளுமா?

அங்கு கொள்தையும் இல்லை, கூட்டணியும் இல்லை, அதிகாரத்தின் துணையோடு, அகப்பட்டதை சுருட்டிக் கொள்ளும் சுயநல விருப்பங்களே மேலோங்கியுள்ளது.

நாம் தொகுதியில் உள்ள வாக்காளப் பெருமக்களை அவர்களது இல்லங்களில் சந்தித்து உரையாடுவோம்.

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் தலைவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனுக்கு வழங்கும் வாக்கு, வெறுப்பு அரசியலை வேரோடு பிடுங்கி எறியும் வீரியம் கொண்ட வாக்கு என்பதை உணர்த்திடுவோம்.

பல்லாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில், அவர் வெற்றி பெற வேண்டும். எதிர்த்து நிற்போர் கட்டிய காப்புத் தொகை இழந்து நிற்கும் அளவிற்கு வாக்காளர் உணர்வுகளை ஒன்று திரட்டுவோம்.

நமது அணியில் உள்ள தோழமைக் கட்சிகள் அனைத்தும் இணைந்து செயல்பட்டு அரசியல் கடமைகளை நிறைவேற்றிடுவோம்...

மீண்டும் சந்திப்போம்.

வணக்கம்.

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்



து.ராஜா Ex M.P.
பொதுச் செயலாளர், CPI

**1950 ஜனவரி 26 அன்று இந்தியக் குடியரசாக நமது தேசம் அதனை உருவமைத்துக் கொண்ட போது, வெகுமக்களின் விடுதலைக்கான நமது தேசத்தின் பயணத்தில், அது ஒரு மாபெரும் வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றம் ஆகும்.**

# இந்திய அரசியலமைப்பின் குடியரசும் மோடியின் இந்தியாவும்



காலனியாதிக்கத்தின் கோரப் பிடியில் இருந்து விடுவித்துக் கொண்ட பிறகு, நமது விடுதலைப் போராட்ட வீரர்கள் எத்தகையதொரு சமுதாயம் அமைய வேண்டும் என்பதற்காகத் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்தார்களோ, அத்தகையதொரு சமுதாயத்தை அமைத்திடுவதற்கான பயணத்தை இந்தியா மேற்கொண்டது.

நமது அரசியலமைப்பின் முகப்புரையில் ஒளிரும் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் நீதி ஆகிய இலட்சியங்கள் மீது அத்தகையதொரு இந்தியச் சமுதாயம் அமைந்திட வேண்டும்; பரந்து விரிந்த நமது தேசத்தின் பலதரப்பட்ட குடிமக்களிடையே அரசியல் சமத்துவத்தை ஸ்தாபித்து, சமுதாயத்தின் விளிம்புநிலை மக்களுக்கான பாதுகாப்பு அம்சங்களை நிறுவிய இந்திய அரசியலமைப்பின் உருவாக்கம் என்பது ஒரு மிகப்பெரிய சாதனை ஆகும். அரசியல் சமத்துவ அடித்தளத்தின் மீது நிலைகொண்டு, பின்னர் சமூக மற்றும் பொருளாதார சமத்துவத்தை நோக்கி முன்னேற வேண்டிய மாபெரும் பணியை இந்திய அரசியலமைப்பு தேசத்தின் முன் வைத்தது.

துரதிர்ஷ்டவசமாக, நமது அரசியலமைப்பை எப்போதும் இகழ்ந்துரைக்கும், சமத்துவத்தை வெறுத்து ஒதுக்கும் ஒரு சித்தாந்தத்தின் ஆட்சியின் கீழ், ஏற்றுக்கொண்ட உறுதிமொழியில் இருந்து நமது அரசியலமைப்பு பின்னோக்கிச் சென்று கொண்டிருப்பதை நமது தேசம் பார்த்து வருகிறது.

ஒரு தேசமாக, சமத்துவத்தை நமது வாழ்வின் முக்கியமான ஓர் அம்சமாக அரசியலமைப்பின் ஷரத்து 14 வடிவமைத்துள்ளது. சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் அனைவருக்கும் சட்டத்தின் சம பாதுகாப்பு ஆகிய அடிப்படை உரிமைகளை உத்தரவாதப்படுத்தியதன் மூலமாக, மதம், சாதி, வர்க்கம், பாலினம், மொழி மற்றும் பிராந்தியம் ஆகிய கட்டுமானங்களைச் சட்டத்தின் முன் தகர்த்தெறிந்து, அரசியல் சமத்துவம் எனும் சகாப்தத்திற்குள் தேசம் அடியெடுத்து வைத்திருப்பதை அரசியல் நிர்ணய சபை உலகிற்குப் பறைசாற்றியது. இப்போது, உண்மை நிலைதான் என்ன? சட்டத்திற்கு விரோதமான முறையில், சமுதாயத்தின் சில பிரிவினருக்குச் சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் அனைவருக்கும் சட்டத்தின் சம பாதுகாப்பு ஆகிய அடிப்படை உரிமைகளை மோடி ஆட்சி சூழ்ச்சிகரமாக மறுத்து வருகிறது.

ஒரு மதத்திற்கு எதிராக, வெளிப்படையாகப் பாரபட்சம் காட்டும் வகையில், மதத்தின் அடிப்படையில் குடியுரிமைவழங்குவதை அறிமுகப்படுத்திய குடியுரிமை திருத்தச் சட்டம் இதற்கு ஒரு மிகப்பெரிய எடுத்துக்காட்டு ஆகும்.

''இப்போதைய அரசியலமைப்பை உருவாக்குபவர்கள், 'ஒற்றைத் தேசியம்' என்னும் நமது ஆழமான நம்பிக்கையில் ஆழங்கால்பட்டு நிற்கவில்லை'' என்று ஆர்.எஸ்.எஸ்ன் முன்னாள் தலைவர் எம்.எஸ்.கோல்வால்கர் அப்போது புலம்பினார். இந்து தேசியத்தின் மற்றொரு பெயர்தான் 'ஒற்றைத் தேசியம்'. இந்த ஒற்றைத் தேசியத்தை ஸ்தாபிக்க ஆர்.எஸ்.எஸ்–பா.ஜ.க முயன்று வருகிறது. இந்த முயற்சியில், சிறுபான்மையினருக்கு எதிராக அதிகரித்து வரும் வெறுப்புணர்வும், குற்றச் செயல்களும், நமது விடுதலைப் போராட்ட வீரர்களின் அளப்பரிய தியாகம் மற்றும் கனவை உடைத்தெறியும் வகையில் அரசியல் சமத்துவம் எனும் உன்னத இலட்சியத்தைத் தகர்த்து வருகிறது.

அரசியலமைப்பின் முன்வடிவை அரசியலமைப்பு நிர்ணய சபையில் வாக்கெடுப்பிற்காகச் சமர்ப்பித்த போது, வருங்கால குடியரசின் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க முரண்பாடு ஒன்றை டாக்டர் அம்பேத்கர் சுட்டிக்காட்டினார். அந்த முரண்பாடு இது தான்: "1950 ஜனவரி 26 க்குப் பிறகு, அரசியல் தளத்தில் சமத்துவமும், சமூக மற்றும் பொருளாதார தளங்களில் சமத்துவமின்மையும் நிலவும்''.

'ஒரு நபருக்கு ஒரு வாக்கு' என்பதைச் சாத்தியப்படுத்திய அரசியல் ஜனநாயகத்திற்கும், சமூக மற்றும் பொருளாதார ஜனநாயகத்திற்கும் இடையிலான பெருவெளி டாக்டர் அம்பேத்கரைக் கவலைக்குள்ளாக்கியது. ஒரு நபர், ஒரு வாக்கு, ஒரு மதிப்பு என்னும் இலக்கை நாம் அடைந்திடும் வரையில், இன்னும் எவ்வளவு காலத்திற்கு இந்த முரண்பாடு தொடர நாம் அனுமதிக்கப் போகிறோம் என்று அரசியலமைப்பு நிர்ணய சபையில் அவர் கேள்வி எழுப்பினார்.

பொருளாதார ஏற்றத்தாழ்வைப் போன்றே, சாதிய மற்றும் பாலின அடிப்படையிலான சமூகப் பாகுபாடுகளும் டாக்டர் அம்பேத்கரின் உன்னதமான இலட்சியத்தை (ஒரு நபர், ஒரு வாக்கு, ஒரு மதிப்பு) மூடி மறைத்தன; முட்டுக்கட்டைகளாய் இருந்தன. மறுபுறத்தில், சமூகப் பிரிவினையை உண்டாக்கிய நான்கு வர்ண முறையை ஆர்.எஸ்.எஸ் உயர்த்திப்பிடித்தது; உழைப்பவர்களை அடிமைகளாக்கியது; பெண்களை அடிமைகளாய் வீட்டிற்குள்ளே அடைத்தது. ஆர்.எஸ்.எஸ்–பா.ஜ.க ஆட்சியில் பொருளாதார ஏற்றத்தாழ்வும், செல்வக் குவிப்பும் பன்மடங்கு அதிகரித்துள்ளது. நமது விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழிகாட்டியாக விளங்கிய சமூக மற்றும் பொருளாதார சமத்துவம் என்னும் இலட்சியம் இந்துத்துவ முதலாளித்துவத்தின் கீழ் சிதைந்து வருகிறது.

இந்தியா போன்ற ஒரு பரந்து விரிந்த நாட்டிற்கான நிர்வாகக் கட்டமைப்பையும் நமது அரசியலமைப்பு வழங்கியுள்ளது. அதற்கான ஷரத்துகள் குறித்து அரசியலமைப்பு நிர்ணய சபை மிக விரிவாக விவாதித்ததுடன், நமது நாட்டின் வளமான பிராந்திய மற்றும் மொழிவாரி பன்மைத்துவத்திற்கு ஏற்ப ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பையும் உருவமைத்தது. எனினும், ஒற்றுமைக்குப் பதிலாக, ஆர்.எஸ்.எஸ் அமைப்பு ஒற்றைத் தன்மையையே எப்போதும் வலியுறுத்தி வருகிறது. மக்களிடையேயான ஒற்றுமை பன்மைத்துவதை மதித்துப் போற்றுகிறது; கொண்டாடுகிறது. விடுதலைப் போராட்ட இயக்கத்தின் போது, காலனியாதிக்கத்துக்கு எதிரான தேசிய உணர்வு பல்வேறு பின்புலங்கள் கொண்ட மக்கள்திரளை ஓரணியாகத் திரட்டியது. பல்வேறு மொழிகள், சமய நம்பிக்கைகள், உணவு வகைகள், உடை நாகரிகங்கள், பழக்க வழக்கங்கள் அனைத்தையும் மட்டுப்படுத்தத் துடிக்கும் ஆர்.எஸ்.எஸ் அமைப்புக்கு, வேற்றுமையில் ஒற்றுமை என்பதைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. எனவே தான், ஆர்.எஸ்.எஸ்–பா.ஜ.க ஆட்சிக்கு கூட்டாட்சி முறை ஏற்புடையதாக இல்லை; அதன் விளைவாக, மாநில அரசுகளின் அதிகாரங்களில் வரம்புமீறி ஆக்கிரமிப்பு செய்து வருகிறது. அது போலவே, இந்திய அரசின் வெவ்வேறு அங்கங்களான சட்டமன்றம், நிர்வாகம் மற்றும் நீதித்துறைகளுக்கு இடையிலான அதிகாரப் பிரிவினை என்ற ஏற்பாடும் எதேச்சதிகார அமைப்பான ஆர்.எஸ்.எஸ்சின் சித்தாந்தத்திற்கு எதிரானதாக இருக்கிறது. இந்த ஆட்சி நாடாளுமன்றத்தை, நிர்வாகம் மற்றும் நீதித்துறையை வலுவிழக்கச் செய்து வருகிறது. ஆர்.எஸ்.எஸ்–பா.ஜ.க ஆட்சியின் கீழ் ஏற்பட்டுள்ள அமைப்பு ரீதியிலான சிதைவுகள் அரசியலமைப்பிற்கு நேர் எதிரானவை மட்டுமல்ல, ஒட்டுமொத்த தேசத்திற்கும் மோசமான விளைவுகளை உண்டாக்கக்கூடியவை ஆகும்.

இறுதியாக, அரசியலமைப்பின் முகப்புரை இந்தியாவை ஒரு இறையாண்மைமிக்க, சமதர்ம, மதச்சார்பற்ற, ஜனநாயகக் குடியரசு என்று பிரகடனம் செய்கிறது. மோடியின் ஆட்சியில், முகப்புரையில் குறிப்பிடப்பட்டிருக்கும் எந்தவொரு அரசியல் விழுமியத்திலும் இந்தியா நின்று ஒளிரவில்லை. அதிகரித்து வரும் அமெரிக்கச் சார்புநிலை பொருட்டு நமது இறையாண்மை சமரசத்திற்கு உள்ளாகியிருக்கிறது. பிரதிநிதித்துவம், சமூக நீதி, வலுவான பொதுத்துறை ஆகிய சமதர்ம விழுமியங்கள் அழிந்து வருகின்றன. ஒரு குறிப்பிட்ட மதத்திற்கு, நடைமுறையில் அதிகாரப்பூர்வ சிறப்புநிலை வழங்கப்படுவதன் மூலம் மதச்சார்பின்மை ஒழிக்கப்படுகிறது. ஜனநாயகம் என்று சொல்லும் போது, அதன் முக்கியமான குறியீடுகளான, கருத்துச் சுதந்திரம், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல், எதிர்கருத்து வெளியிடுவதற்கான உரிமை ஆகியவை நசுக்கப்படுகின்றன.

"ஜனநாயகம் என்பது ஓர் அரசாங்க வடிவம் மட்டுமன்று. அது பிரதானமாக, அனைவரும் இணைப்புற்று வாழும் முறை ஆகும்.'' என்று டாக்டர் அம்பேத்கர் கூறியுள்ளார். ஜனநாயகம், அதன் சாராம்சத்தில், சகமனிதர்களிடையே நிலவும் மரியாதை மற்றும் மாண்பாகும். மோடி ஆட்சியில், சகமனிதர்களிடையே நிலவ வேண்டிய மரியாதை மற்றும் மாண்பு ஆகியவற்றை வெறுப்புணர்வு கொண்டு வேரறுக்க முயற்சிகள் நடைபெறுகின்றன.

நமது குடியரசைக் காத்திட ஒற்றுமை அவசியமாகிறது. எதேச்சதிகார, ஒற்றைத்தன்மைமிக்க, சுதந்திரமற்ற இந்தியா என்னும் கருத்தாக்கத்தை எதிர்கொள்ள நாம் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப வேண்டியிருக்கிறது.

நாம், நமது நாட்டை ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்திக் கொண்ட 1950 ஜனவரி 26 அன்று ஏற்றுக்கொண்ட உறுதிமொழியைப் பாதுகாத்திட வேண்டும் என்றால், இந்துத்துவ முதலாளித்துவத்தை ஒழித்தாக வேண்டும். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் நீதி நிலைபெற வேண்டுமென்றால் இந்துத்துவ முதலாளித்துவம் ஒழிக்கப்பட வேண்டும்.

தமிழில்: அருண் அசோகன்

**ஜனசக்திக்கு கட்டுரைகள், செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு...**

கட்டுரைகள் மிகச் சுருக்கமாக 800 வார்த்தைகளுக்கு மிகாமல் ஏ 4 சைஸ் பேப்பரில் ஒன்றரை பக்கத்திற்குள் இருக்க வேண்டும்.

பெரும்பாலும் தற்போதைய அரசியல், பொருளாதார, சமூக நிகழ்வுகளாக இருக்க வேண்டும்.

மறைந்த தலைவர்கள் பற்றிய விபரங்கள் மற்றும் வரலாற்றுக் கட்டுரைகள் ஜனசக்தி பத்திரிகையில் அரை பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

செய்திகள் அனுப்புவோர் பெயருக்கு முன்னால் இருக்கும் முன்னெழுத்தை (இனிசியலை) தமிழிலேயே எழுத வேண்டும்.

கட்டுரைகள் மற்றும் செய்திகள் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமைக்குள் ஜனசக்திக்கு கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

janasakthieditor@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு மட்டுமே கட்டுரைகள், செய்திகள் அனுப்ப வேண்டும். வாட்ஸ் அப்பில் அனுப்பக் கூடாது.

– ஆசிரியர் குழு

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 44

## சரிவது அதானி மட்டுமா?!

இந்தத் தலையங்கம் படிக்கப்படும் போது, என்னவெல்லாம் நிகழ்ந்திருக்கும் என்று ஊகிக்க முடியாது!

பங்குச் சந்தையில், கௌதம் அதானிக்கு தனிப்பட்ட வகையில் மூன்று லட்சம் கோடி ரூபாயும், அதானி குடும்பத்துக்கு ஏழு லட்ச கோடி ரூபாயும் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இன்னும் அதிகரிக்கலாம்.

உலகின் இரண்டாவது மிகப்பெரிய பணக்காரர் என்ற நிலைக்கு வேகமாக உயர்ந்த அதானி, பதினைந்தாவது இடத்திற்கு மூன்று நாட்களுக்குள் சறுக்கியிருக்கிறார்.

ஹிண்டன்பர்க் என்ற அமெரிக்க நிறுவனம், அதானி குழுமத்தின் கணக்கியல் மோசடி, பங்குச் சந்தைச் சதிகள், கார்ப்பரேட் நிர்வாக முறைகேடுகளைப் பற்றி குற்றம் சாட்டி அறிக்கை வெளியிட்டது.

சாமானியர்களுக்கு பங்குச்சந்தையின் நுட்பங்கள் புரிவது சிரமம் தான். ஒரு சந்தைக்கு பத்துக் கூடை தக்காளி வந்தால், எல்லோரும் தக்காளி வாங்க, அதன் விலை கிலோ 100 ரூபாயைத் தாண்டிக் கூட உயர்ந்துவிடும். அதே நேரத்தில் ஆயிரம் கூடை தக்காளி வந்தால், எல்லா கடைகளிலும் தக்காளி இருக்கும். வாங்குவதற்கு ஆள் இருக்காது. விலை பத்து ரூபாய்க்கு கீழே கூட குறைந்து விடும்.

பங்குச் சந்தையும் இவ்வாறேதான். சந்தையில் ஒரு நிறுவனத்தின் பங்குகள் ஏராளமாக விற்பனைக்கு வந்தால் பங்கின் மதிப்பு சட சடவென விழுந்து விடும். ஆனால் அதே நிறுவனத்தின் பங்குகள் மிகக் குறைவாகவே விற்பனைக்கு வந்தால், நிறைய பேர் வாங்கப் போட்டி போடுவதால் அதன் விலை எகிறிவிடும். நஷ்டம் அடையும் நிறுவனம் என்றால் அதன் பங்குகளை கிடைத்த விலைக்கு விற்று, போட்ட பணத்தில் ஓரளவுக்காவது எடுக்க முயல்வார்கள்.

உண்மையிலேயேநஷ்டத்தில் இயங்குகிற தனது நிறுவனங்களின் பங்குகளை, சந்தையில் விற்பனைக்கு வராமல் தடுத்து, பெரும் லாபம் அடைவது போல் மோசடி செய்திருக்கிறார் அதானி என்கிறது அந்த அறிக்கை. ஒரு பப்ளிக் லிமிடெட் கம்பெனியின் உரிமைதாரர் அதிகபட்சமாக 75% பங்குகளை வைத்துக் கொள்ளலாம். மீதி 25% சதவீதம் சந்தைக்கு வர வேண்டும். ஆனால் அதானி 85 சதத்துக்கு மேற்பட்ட பங்குகளை, தன் பெயர்களும் தன் குடும்பத்தார் பெயரிலும் வைத்திருந்தார் என்பது குற்றச்சாட்டு. அதாவது தக்காளியைப் பதுக்கி வைத்து விலை ஏற்றுவதை போல!

எஞ்சிய இரண்டு அல்லது மூன்று சதவீத பங்குகள் சந்தைக்கு வந்த போது, எல்ஐசி நிறுவனமும், ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவும் போட்டி போட்டு வாங்கி இருக்கின்றன. எல்ஐசி மட்டும் 78 ஆயிரம் கோடி ரூபாயை இந்த டப்பா கம்பெனிகளில் போட்டிருக்கிறது. எல்ஐசியே வாங்குகிறது என்பதால், பங்கு மதிப்பு வேகமாக உயர்ந்திருக்கிறது.

அது மட்டும் இல்லாமல், வெளிநாட்டில் இருந்த தனது சகோதரர் வினோத் அம்பானியின் 1500க்கு மேற்பட்ட நிறுவனங்களுக்கு, இங்கு வசூலித்த பணத்தை அனுப்பி, அதே தொகையை மீண்டும் வெளிநாட்டு நேரடி முதலீடாக அதானி வாங்கி இருக்கிறார். வெளிநாட்டு முதலீட்டை வங்கிகளில் வைத்து, பல்லாயிரம் கோடிகள் கடன் வாங்கி இருக்கிறார். தனியார் துறை வங்கிகளை விட, பொதுத்துறை வங்கிகள் இரண்டு மடங்குக்கும் அதிகமாக கடன் கொடுத்திருக்கின்றன.

எனவே அதானி குழுமத்தின் பங்கு மதிப்பு விழும் போது, எல்ஐசி மற்றும் கடன் தந்த வங்கிகளின் மதிப்பும் விழுகிறது.

இப்படிப்பட்ட ஒரு உப்புமா கம்பெனிக்கு எல்ஐசி யும் பொதுத் துறை வங்கிகளும் தாராளமாக கடனை வழங்க யார் காரணம் என்பதே கேள்வி? பிராவிடண்ட் பண்ட் பென்ஷன் நிதியை, வங்கியில் போட்டு வைத்தால் வட்டி குறைவு, எனவே பங்குச் சந்தையில் போட்டே ஆக வேண்டும் என்று ஒன்றிய அரசின் நிதித்துறை கடுமையாக வாதாடி, பங்குச் சந்தையில் போட வைத்ததை நாம் நேரடியாகவே அறிவோம்.

அதானி விழுந்தால் இந்தியாவே விழுந்து விடும் என்று சங்கிகள் ஒப்பாரி வைக்கிறார்கள். சூதாடியின் வருமானத்தை நம்பி குடும்பம் நடத்த முடியுமா? இப்படிப்பட்ட ஒரு மோசடிக்காரரை நம்பி, துறைமுகங்கள், விமான நிலையங்கள், எண்ணெய் நிறுவனங்கள் என ஏராளமான பொதுத்துறை நிறுவனங்களை, ஆர்எஸ்எஸ் பிஜேபி அரசு தாரை வார்த்து கொடுத்துக் கொண்டிருக்கிறது.

ஹிண்டன்பர்க் நிறுவனத்தின் மீது வழக்கு போடுவோம் என்று மிரட்டினார் அதானி. ‘அதைத்தானே எதிர்பார்க்கிறோம், வந்து வழக்கு போடு, இன்னும் ஆவணப்பூர்வமாக நிரூபிக்கிறோம்‘ என்று ஹிண்டன்பர்க் பதில் சொல்கிறது.

அதானி மட்டுமல்ல, பொது சொத்துக்களை அவருக்கு அள்ளித் தந்த மோடி அரசும், நாட்டு மக்களுக்குப் பதில் சொல்லியே தீர வேண்டும்.

# மாணவர் பெருமன்ற மாநாட்டை முன்னிட்டு முன்னாள் பொறுப்பாளர்கள் கலந்துரையாடல்; நிதியளிப்பு கூட்டம்

அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநில மாநாடு பிப். 5,6,7 ஆகிய தேதிகளில் வடசென்னை மாவட்டம், தண்டையார் பேட்டை வாணிமஹாலில் நடைபெறுகிறது. இதனை முன்னிட்டு மாணவர் பெருமன்றத்தின் முன்னாள் பொறுப்பார்கள், முன்னணி தோழர்கள் சந்திப்பு, உணவு உபசரிப்பு, மாநாட்டு நிதியளிப்பு கூட்டம் மாணவர் பெருமன்ற முன்னாள் வடசென்னை மாவட்டத் தலைவர் இரா.மோ.சந்தோஷ்குமார் தலைமையில் வியாசர்பாடி டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக்கல்லூரி அருகில் உள்ள வீராமஹாலில் நடைபெற்றது.

அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் முன்னாள் மாநில செயலாளர் க.சந்தானம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு கடந்தகால நிகழ்வுகள் குறித்துப் பேசினார். அப்போது திருமண மண்டபத்தில் வசூலிக்கப்பட்ட ரூ.30 ஆயிரம் மாநாட்டு நிதியாக வழங்கப்பட்டது.

நிறைவாக அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் முன்னாள் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன், மாணவர் இளைஞர் பெருமன்ற நிகழ்வுகள் குறித்துப் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி, வடசென்னை மாவட்டச் செயலாளர் த.கு.வெங்கடேஷ், மாணவர் பெருமன்ற முன்னாள் துணைச் செயலாளர் லி.உதயகுமார், பெரம்பூர் தொகுதி செயலாளர் கோட்டி சுரேஷ், மாணவர் பெருமன்ற முன்னாள் முன்னணி தோழர்கள் வழங்கறிஞர் செந்தில்வேலன், கணேச மூர்த்தி, எஸ்.பெருமாள் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர்கள் ஜி.சுப்பிரமணி, எம்.ஜெய்சங்கர், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் ஆ.சுப்பிரமணி எக்ஸ்.எம்.சி. உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# அதானி குழும தில்லுமுல்லுகள் குறித்து முழு விசாரணை நடத்தப்பட வேண்டும்!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

அதானி குழும தில்லுமுல்லுகள் குறித்து முழு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வலியுறுத்தியுள்ளது. இது குறித்து கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி யிருப்பதாவது:

நரேந்திர மோடி தலைமையிலான ஆர்.எஸ்.எஸ்–பா.ஜ.க அரசாங்கம் கார்ப்பரேட் ஆதரவு மற்றும் பெருநிறுவன ஆதரவு கொள்கைகளைக் கடைபிடித்து வருகிறது என்றும், அதன் விளைவாக, அதானி உள்ளிட்டோர் இயற்கை வளங்களையும், தேசத்தின் செல்வ வளங்களையும் சூறையாடுகிறார்கள் என்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டி வருகிறது.




அதானி நிறுவனங்களின் பங்குகளில் எல்.ஐ.சி உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்கள் முதலீடு செய்ய வேண்டும் என்று மோடி அரசாங்கம் வற்புறுத்தி வருகிறது.

துறைமுகங்கள், விமான நிலையங்கள் மற்றும் இலாபமீட்டும் பொதுத்துறை நிறுவனங்களை அதானி குழுமம் தற்போது கட்டுப்படுத்தி வருகிறது. மோடி ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு ஏற்பட்டுள்ள அதானி குழுமத்தின் இத்தகைய திடீர் வளர்ச்சிக்கு அரசாங்கத்தின் ஆதரவு தான் அடிப்படை என்பது நிரூபணமாகியுள்ளது.

அதானி குழுமத்தின் தில்லுமுல்லுகள் காரணமாக பொதுத்துறை நிறுவனங்கள், சாமானிய இந்திய முதலீட்டாளர்கள் உள்பட அனைத்து முதலீட்டாளர்களும் பெரும் இழப்புகளைச் சந்தித்து வருகிறார்கள். இனிவரும் காலங்களில் இழப்புகள் ஏற்படாமல் தவிர்த்திட, அதானி குழுமத்தின் அனைத்து தொழில் நடவடிக்கைகளையும் உரிய அமைப்புகளின் மூலம் முழுமையாக விசாரிக்க வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது.

இயற்கை வளங்களையும், தேசத்தின் செல்வ வளங்களையும் சூறையாடுவோருக்கு கடும் தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது.

இவ்வாறு கட்சியின் தேசிய செயற்குழு விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

1 ம் பக்கத் தொடர்ச்சி

விளைவிக்கக்கூடிய சர்வதேச நிதி மூலதனத்திடம் இந்தியப் பொருளாதாரத்தை அடிபணியச் செய்வது ஆகியவற்றை எதிர்த்துப் போராடுவதில் மேலும் தீவிரமாகச் செயல்பட வேண்டும் என்பதைத் தலைவர்கள் வலியுறுதிப் பேசினார்கள்.

தங்களது உரையின் போது, அரசாங்கத்தின் முதலாளித்துவ ஆதரவுப்போக்கை அம்பலப்படுத்திய தொழிற்சங்க தலைவர்கள், ஹிண்டன்பெர்க் ஆய்வு அறிக்கை மற்றும் அதானி குழும நிறுவனங்கள் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து விரிவான விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். ஆக்ஸ்பெம் அறிக்கையைச் சுட்டிக்காட்டிப் பேசிய அவர்கள், அதிகரித்து வரும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், சாமானிய மக்களின் அன்றாட வாழ்க்கை நிலையை மிகவும் துன்பத்திற்கு உள்ளாக்குவதாகத் தெரிவித்தார்கள்.

அனைத்து துறைகளிலும் தோல்வியடைந்துள்ள இந்த அரசாங்கம், தங்களது வாழ்வாதார பிரச்சனைகளை முன்வைத்து ஒன்றுபட்டுப் போராடி வரும் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவு மக்களின் கவனத்தை மடைமாற்றம் செய்திட வகுப்புவாதத்தையும், வெறுப்புணர்வையும் தூண்டும் சக்திகளை தற்போது அனுமதித்து வருகிறது.

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிரான குரல்களை அரசாங்க அமைப்புகளைக் கொண்டு நெரிப்பதன் மூலம் நமது சமுதாயத்தின் மதச்சார்பற்ற ஜனநாயக விழுமியங்களைக் குழிதோண்டிப் புதைக்கிறது.

தேச ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தைப் பாதுகாத்திட, தேசநலன் கருதி இந்த அரசாங்கத்தின் தொழிலாளர் விரோத, மக்கள் விரோத மற்றும் தேச விரோத கொள்கைகளை முறியடித்திட, தொழிலாளர்கள் அவரவர் தொழிற்சங்கத்தின் கீழ் ஒன்றிணைந்து, அனைத்து சக்திகளையும் ஒன்றுதிரட்டிப் போராடுவது என்று இம்மாநாடு தீர்மானம் ஏற்கிறது.

நவீன தாராளமய கொள்கைகளுக்கு எதிரான மாற்றை முன்வைக்கும் 14 அம்ச கோரிக்கைகளைத் தொழிலாளர்களின் இந்த தேசிய மாநாடு மீண்டும் வலியுறுத்துகிறது. அதன் அடிப்படையில், பின்வரும் போராட்ட இயக்கங்களை நடத்துவதென தீர்மானிக்கிறது.

2023 மார்ச் மாதம் தொடங்கி மே மாதம் வரையில் மாநில, மாவட்ட மற்றும் சம்பந்தப்பட்ட தொழில்துறை மாநாடுகளை/கூட்டங்களை நடத்துவது.


மாநாட்டு முடிவுகளின்படி, ஜூன் மாதம் தொடங்கி நடைபயணம், இருசக்கர வாகனம் மற்றும் ஜீப் வாகன ஊர்வலங்கள் நடத்துவது.

இந்தப் போராட்ட இயக்கங்கள் அனைத்தும், வெள்ளையனே வெளியேறு இயக்க தினமான ஆகஸ்ட் 09 முதல் மாநில அளவிலான இயக்கத்தில் சங்கமிக்கும்.

டெல்லியில் நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தின் போது வலுப்பெற்ற விவசா யிகள் தொழிலாளர்கள் ஒற்றுமை மேலும் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்.

மாநாட்டுப் பிரகடனம் ஒருமனதாக ஏற்கப்பட்டது. இந்த ஆண்டின் இறுதியில் நாடு தழுவிய வேலைநிறுத்தம் மேற்கொள்ளுவது என்று இம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது.

# அரசியல் பழகுவோம்: அணி திரள்வோம்!



பா.தினேஷ், க.இப்ராகிம்



மாணவர்கள் அரசியல் பயின்று விடக்கூடாது என்பதில் பலர் மிகவும் உன்னிப்பாக செயல்படுகின்றனர். குறிப்பாக மாணவன் அரசியல் பயின்றால் கேள்வி கேட்பான். இதனால் சட்டத்தை மீறி லாபத்தை மட்டும் நோக்கமாகக் கொண்டு செயல்படும் கல்வி நிறுவனங்கள் இழப்பை சந்திக்கும் என்பதால், கல்வி வளாகங்களுக்குள் தடுக்கப்பட வேண்டிய, தடை செய்யப்பட்ட பல்வேறு வகையான போதைப் பொருட்களை தாராளமாக உலவ விட்டுவிட்டு, வாழ்வின் அடிப்படையான அரசியலை பேச கடும் நெருக்கடியை கொடுக்கின்றனர்.

இதன் வெளிப்பாடுதான் மக்கள் நலனுக்கு எதிரானவற்றை அதிகாரத்தை தனது கைக்குள் வைத்திருக்கக்கூடிய நபர்கள் எளிதாக செய்கின்றனர். இது மட்டுமல்லாது கல்வி, மொழி, கலை, பண்பாடு, கலாச்சாரம், பொருளாதாரம், அடிப்படை உரிமைகள், அன்றாட தேவைகள், அத்தியாவசிய பொருட்கள் என்று அனைத்தையும் மக்களிடமிருந்து பிடுங்க தொடங்கி விட்டனர்.

இந்திய ஒன்றியத்தை ஆளும் அரசு கல்வியை கார்ப்பரேட் கைகளில் கொண்டு சேர்க்கும் மகத்தான பணியை செய்து வருகின்றது. அதன் விளைவாக தான் 2020ஆம் ஆண்டு உலக நாடுகள் கொரோனா என்னும் கொடிய நோயால் பாதிக்கப்பட்டு, அனைவரும் தங்கள் வாழ்வாதாரத்தை பாதுகாத்துக் கொள்ள போராடி வந்த வேளையில், ஒரு வேளை உணவுக்கு கூட வழியின்றி தவித்த தருணத்தில் அவற்றை பற்றி கவலையின்றி நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்கின்ற பணிகளை செய்வதை விட்டு விட்டு, தங்களுக்கு தேர்தல் செலவுகளுக்காக கோடான கோடி ரூபாயை வாரி வழங்கிய கார்ப்பரேட் முதலாளிகளுக்கு கைமாறு செய்கின்ற வகையில்,

இந்திய ஒன்றியத்தின் நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு எதிராக, நாடாளுமன்ற அவைகளை கூட்டாமல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை கேட்காமல், ஒட்டுமொத்த இந்திய மக்களை புறக்கணிக்கும் வகையில், அவசர அவசரமாக அமைச்சரவையை கூட்டி தேசிய கல்வி கொள்கை 2020 என்ற கல்வி கொள்கையை அளித்தனர். அந்த கல்வி கொள்கை இந்திய கல்வியில் புரட்சியை ஏற்படுத்தி விடும் என்ற வகையில் பேசுகின்றனர்.

கல்வியுடன் கூடிய தொழிலை கற்பிக்கும் தொழில் கல்வியை ஊக்குவிக்குகிறோம் என்று பேசி வருகின்றனர். மாணவர்கள் அனைவரும் தேசிய கல்வி கொள்கை 2020 பற்றி படிக்க வேண்டும். அதன் மூலம் கல்வியில் ஏற்படும் பிரச்சனைகள், மாணவர்கள் சந்திக்க இருக்கும் பிரச்சனைகள் குறித்து மாணவர்களிடம் கொண்டு செல்வது என்ற தலையாய கடமை நம் முன் காத்திருக்கிறது.

தொழில் கல்வி என்று கூறுவது மறைமுகமாக குலக்கல்வியை கொண்டு வருகிற பணியை ஒன்றிய அரசு செய்து வருகிறது. தன் அப்பன் எந்த வேலையை செய்கிறாரோ அந்த பணியை தான் பிள்ளைகளும் செய்ய வேண்டும் என கூறும் கல்வி கொள்கை தான் குலக்கல்வியாகும். மாணவர்கள் கல்வி கற்க கூடாது என்பதை வெளிப்படையாக கூற முடியாத நிலையில் அவற்றை மறைமுகமாக செயல்படுத்தும் வேலையாக 3 மற்றும் 5ம் வகுப்புகளில் பொது தேர்வு எனவும், 8ம் வகுப்பில் இருந்து 12ம் வகுப்புவரை பருவத்தேர்வு நடைமுறையில் உள்ள தேர்வு அப்படியே நடைபெறும் என்று கல்வி கொள்கை 2020 கூறுகிறது.

மேலும் மாற்றத்திற்கான முதல் முயற்சி கல்வி என்பதாலேயே ஆண்டாண்டு காலமாக கல்வியில் இருந்தே அடக்கு முறையை தொடங்குகின்றது. அதோடு கல்வியில் தனியார் மயம் புகுத்தப்பட்ட பிறகு, கல்வி கட்டமைப்பு என்பது சிறுக சிறுக மாற்றி அமைக்கப்பட்டு தற்போது முற்றிலும் சுயநலம் சார்ந்த ஒன்றாக சிதைக்கப்பட்டு விட்டது. மாணவர்கள் ஒன்று கூடாமல் பார்த்துக் கொள்வதில் பெரும் முதலாளிகளும், அதிகார மையங்களும் ஒன்றிணைந்து பயணிக்கின்றனர்.

வருங்கால தலைமுறைக்கு அரசியல் என்பது சாக்கடை என்று சொல்லி பழக்கபடுத்திவிட்டு, ஊடகங்கள் வழியாக விளம்பரங்களையும், ஆடம்பரங்களையும், கவர்ச்சிகளையும், பொய் புளுகுகளையுமே அதிகம் காட்சிப்படுத்துகின்றனர். நிராகரிக்கப்பட வேண்டியவர்களை அதிகம் பார்த்தும் படித்தும் வந்த மக்கள் அரசியலையே அபத்தம் என்று எண்ண தொடங்கி விட்டனர்.

இதன் காரணமே அறம் சார்ந்த அரசியல் மக்களிடம் இருந்து அந்நியப்பட்டு விட்டது.மேலும் மாணவர்கள் அரசியல் பேசி விட்டால் வேலைக்கு செல்வது கடினமாக மாறிவிடும், அதிகார வர்க்கத்துடன் நேரடி பகை ஏற்படும், பிரச்சனையை சந்திக்க வேண்டிய சூழல் ஏற்படும் என்ற பிம்பம் சித்தரிக்கப்பட்டு மாணவர்களு அரசியல் வேறு, கல்வி வேறு என்ற எண்ணத்தை புகுத்தி விட்டனர்.

கல்வியையும் அதன் வரையறையில் இருந்து அப்புறப்படுத்தி விட்டனர். இதனால் மகிழ்ச்சியை தருவதாக, கற்றுக் கொடுப்பதாக, சிந்திக்கத் தூண்டுவதாக, கற்பனையை நினைவாக்குவதாக, இன்பம் பொருந்தியதாக, வாசிப்பை பழகுவதாக, சமத்துவம் போதிப்பதாக, ஏற்றத்தாழ்வை நீக்குவதாக, அனுபவத்தை போதிப்பதாக, நிறை குறைகளை ஆராய்வதாக, மனிதநேயத்தை கற்பிப்பதாக, ஒற்றுமையை உணர்த்துவதாக, விவாதங்களை எழுப்புவதாக, பாலினம் சார்ந்த புரிதலை ஏற்படுத்துவதாக, சுதந்திரமானதாக, தேவைக்கேற்ப, அறிவுச் சார்ந்ததாக, பாதுகாப்பு அளிப்பதாக, அரசியல் தெளிவு, சட்டம் அறிய, கேள்வி எழுப்புவதாக, சூழலியல் தெளிவாக, எளிமையானதாக, விஞ்ஞானபூர்வமானதாக, இப்படி ஒழுக்கம் சார்ந்த கற்பித்தலை கொண்டிருக்க வேண்டிய கல்வி, பகுத்தறிவுக்கு எதிரான அடிப்படைவாத கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்லும் கருவியாக மாறிவிட்டது.

அதோடு லாபப் பொருளாக மட்டுமே கருதப்படுவதால் மதிப்பெண்ணுக்காக மனப்பாடம் செய்ய மட்டுமே மாணவர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றனர் இதனால் தேர்வு சுமையாக மாறிப்போனது. இதன் உடனடி வெளிப்பாடாக இடைநிற்றல், தாழ்வுமனப்பான்மை, ஏற்றத்தாழ்வு, குழந்தைத் தொழிலாளர் அதிகரிப்பு அதிகரித்துவிட்டது.

அரசியல் பழகுவோம்!

வாழ்வியலின் அங்கமாய் மாறிப்போன அரசியலை தவிர்த்து விட்டு வாழ்க்கையை அமைத்துக் கொள்வது என்பது நோய் இருக்கிறது என்று தெரிந்தும் மருந்து மாத்திரை எடுத்துக் கொள்ளாமல் உயிரை விடுவதற்கு சமமாகும். அரசியல் என்பது உணவு, உடை, இருப்பிடம் என்று அடிப்படையான வாழ்வின் அனைத்து அங்கங்களையும் தீர்மானிக்கும் காரணியாக மாறிப்போன வாழ்வியல் முறையில், அரசியலை தவிர்த்து வாழ்வை நடத்துவது சாத்தியமற்றது. புரட்சியாளர் லெனின் கூறுவது போல அரசியலில் நாம் தலையிடாவிட்டால், அரசியல் நமது வாழ்க்கையில் தலையிடும். நாம் அரசியலை நிராகரித்ததால் நம்மால் நிராகரிக்கப்பட வேண்டியவர்கள் அதிகார மையமாக மாறிவிடுகின்றனர்.

தேவையும், அடுத்த மனிதனைப் பற்றிய அக்கறையும், எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனையும் தான் அரசியல் என்று சொல்லித் தரவேண்டிய கல்வி நிலையங்கள், மாணவர் பேரவை தேர்தலை நடத்தக்கூட முன் வருவது கிடையாது. மேலும் சாதி, மதம், இனம், மொழி, நிறம், நிலம் என்ற எவ்வித ஏற்றத்தாழ்விற்குள்ளும் அகப்படாமல் அனைவரும் சமம் என்று புரிதலை உருவாக்குவதே கல்வி. இதுவே அரசியல்.

அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் அறிவோம்!

நாடு முழுவதும் இருந்த மாணவர்களையும் ஓர் அமைப்பாய் திரட்டி இந்தியா முழுவதும் பூரண விடுதலைக்காக போராட வேண்டும் என்ற நோக்குடன், 1936 ஆகஸ்ட் திங்கள் 12ஆம் நாள் உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் தொடங்கப்பட்ட இந்தியாவின் முதல் மாணவர் அமைப்பு அனைத்திந்திய மாணவர் பெருமன்றம். இந்திய நாட்டின் சுதந்திரத்திற்கு மிக முக்கிய பங்கு வகித்ததோடு, சுதந்திரத்திற்கு பிறகும் அனைவருக்கும் ஆரம்பக் கல்வி முதல் ஆராய்ச்சி கல்வி வரை கட்டணமில்லா கல்வி, அனைவருக்கும் வேலை ஏற்படுத்த வேண்டும் என்ற உயரிய முழக்கங்களோடு இன்று வரை எவ்வித சமரசம் இன்றி இந்திய நாட்டின் கல்வி வளாகங்களில் தன்னுடைய கிளையை பரப்பி மாணவருக்கான அரசியல் ஆயுதமாக செயல்பட்டு வருகிறது.

மேலும் கல்வி வளாகங்களில் மாணவர் சந்திக்கும் பல்வேறு வகையான பிரச்சனைகளில் இருந்து மாணவர்களை பாதுகாக்கும் கருவியாகவும், தீர்வாகவும் உள்ளது. உலகில் நடைபெறும் எல்லாவிதமான அநீதிகளுக்கு எதிரான முழக்கமாகவும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும் சாதி, மத, இன, மொழி, நிற, பாலின பேதமற்ற சமத்துவ அரசியலைக் கொண்டு மாணவர்கள் மத்தியில் படிப்போம்! போராடுவோம் என்று உயரிய முழக்கத்துடன் களமாடி வரக்கூடிய பேரமைப்பு மாணவர் பெருமன்றம்.

தற்போது ஆட்சியில் உள்ள ஒன்றிய மோடி அரசால், கல்வி வளாகங்களில் உருவாக்கப்பட்டு வரும் மதவெறி கலாச்சாரத்திற்கு எதிராகவும், தனியார்மய கல்வி முறைக்கு எதிராகவும், பல்வேறு வகையான கல்வி விரோத செயல்களுக்கு எதிராகவும், ஜனநாயகம், சமதர்மம், விஞ்ஞான சோசலிசம் என்ற மாற்றுக் கருத்துகளை எழுப்பி வீரமிக்க போராட்டங்களை முன்னெடுத்து நடத்தி வருகிறது.

இந்திய மக்கள் தொகையில் 60 விழுக்காட்டினர் இளைஞர்களும், மாணவர்களும் உள்ள நாட்டில் அரசியல் பழகி அமைப்பாய்த் திரளா விட்டால் வருங்கால தலைமை என்பது கேள்விக்குறியாகிவிடும். அரசியலில் பிழைகள் மட்டுமே தொடருமே தவிர, அறம் கூற்றாக மாற வாய்ப்பு ஏற்படாது.

இந்த நிலையில் கட்டணமில்லா கல்வி, மதவெறிக்கு இடம் இல்லா கல்வி வளாகம் என்ற உயரிய முழக்கத்தோடு பிப்ரவரி 5,6,7 ஆகிய மூன்று நாட்கள் தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னையில், அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநில மாநாடு நடைபெறுகிறது. மாநாட்டில் பல்வேறு விதமாக கல்வி வளாகங்களில் நடைபெறும் அடக்குமுறைகளையும், ஆதிக்கங்களையும், அநீதிகளையும் பற்றி விவாதிப்பதோடு, அதற்கான தீர்வு பற்றியும் ஆலோசிக்கப்படுகிறது. மாநாட்டில் மாணவர் நலன், மக்கள் நலன், நாட்டின் நலன் சார்ந்த பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட உள்ளது. மேலும் மாநாட்டில் முதல் நாள் பிப்ரவரி 5 மாலை 3 மணி அளவில் வடசென்னை தண்டையார் பேட்டை பகுதியில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பங்கேற்கும் பிரம்மாண்டமான பேரணி, பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. இதில் ஆயிரம் ஆயிரமாய் அணி திரள்வோம். அமைப்பாய்த் திரள்வோம்.

படிப்போம்!

போராடுவோம்!!



சி.பாஸ்கர்

**வரலாறு தனக்கு தேவையற்றதையும், தன்னோடும் தன் இயங்கியல் நியதியோடும் தொடர்ந்து வர சக்தியற்ற கருத்தியலை ஆழ குழி தோண்டி புதைத்து விட்டு முன்னேறிக் கொண்டிருக்கும். தொடர்ந்து இரண்டு தேர்தல் வெற்றிகளை ப.ஜ.க. பெற்றதால் அதுவே நிரந்தரமாகி விட்டது போன்ற மாயையில் உள்ளனர்.**



# அரசியலில் அறியாமைத் தலைவர் அண்ணாமலை

மரித்துப்போன சித்தாந்தத்திற்கு உயிர் கொடுத்து உலவ விட கனவு காண்கிறது. வரலாற்று அறிஞர்கள் இதை 'புத்துயிர்ப்பு வாதம்' என்ற சொல்லாடலில் வரையறுக்கிறார்கள்.

அவர்களின் பல்வேறு அபத்தமான அரசியல் தந்திரங்களில் ஒன்று 'திடீர்' தலைவர்களை உருவாக்கி மக்கள் தொடர்பில்லாமல் ஊடக வெளிச்சத்திலேயே அவர்கள் பிம்பத்தை வளர்த்தெடுக்க முயற்சிப்பது.

அந்த தந்திரோபாய வழித்தடத்தில் பாஜகவின் மத்திய தலைமையால் தள்ளி விடப்பட்டு குத்தாட்டம் போடுபவர் தான் பாஜக தமிழக தலைவர் 'அறியாமை அண்ணாமலை' இந்தியாவிலேயே சாணக்கியர்கள் என்ற வடபுலத்தில் பெயரெடுத்தவர்களெல்லாம் தமிழகத்தில் அரசியல் சவுக்கடியை தாங்க முடியாமல் 'போதும்டா சாமி' என்று ஓடிய கதைதான் ஏராளம்.

தமிழகத்தின் நெடிய அரசியல் வரலாற்றை அறியாமல் அவர் சில தினங்களுக்கு முன் ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார்.

பா.ஜ.க. தமிழகத்தின் ஆட்சி பொறுப்பேற்றதும் முதல் கையெழுத்திட்டு "அறநிலையத்துறையைக் கலைக்கும்" என்றார். அவரின் ஒட்டு மொத்த அரசியல் வாழ்வில் இது எவ்வளவு மூடத்தனமான கருத்து என்பதை வரலாறு கற்பிக்கும். எதிர்காலத்தில் அந்தக் கட்சி நிலைத்து நிற்காமல் மறைந்து போவதையும், மக்களே அதற்கு முடிவு கட்டுவதையும் நிச்சயம் பார்ப்பார்.

திராவிட இயக்கத்தின் பிதாமகர்கள் என்றும், ஈடு இணையற்ற தலைவர்கள் என்றும் போற்றப்படுபவர்கள் டி.எம். நாயர், சர்.பி.டி. தியாகராயர், டாக்டர் சி.நடேசனார், பனகல் அரசர் பனங்கன்டி ராமராயநிங்கார் ஆகிய நான்கு பேரும் மிகப்பெரிய ஆற்றல்மிக்க ஆளுமைகளாக அஞ்சாநெஞ்சம் கொண்ட தீரர்களாக, மிகப்பெரிய செல்வந்தர்களாக, அரசியலில் மேதைகளாக விளங்கியவர்கள்.

இரண்டாயிரம் ஆண்டு நெடிய சமுதாய வரலாறு கொண்ட கட்டமைப்பை உலுக்கி தகர்த்து காட்டியவர்கள். ஆனால் அதை அடுத்த கட்டமாக மேலும் வளர்த்தெடுக்க முடியாமல் இந்தியா தடுமாறி வருகிறது. அவர்களின் அற்புதமான பணியை தமிழகம் மட்டுமே, பழைய சென்னை 'ராஜதானியில்' மிகப்பெரிய நிலப்பரப்பை கொண்டது என்ற வகையில் பயனடைந்தது.

அவர்கள் உருவாக்கிய பிராமணரல்லாத தென்னிந்திய நல உரிமை சங்கம்தான் பின்நாளில் 'நீதிக் கட்சியாக' வடிவம் எடுத்தது. அப்போது காங்கிரஸ் கட்சியின் தலைவராக பெரியார் பணியாற்றி வந்தார்.

அவர்களின் ஆதர்சனத்தால் ஈர்க்கப்பட்ட அவர் காங்கிரசில் இருந்து விலகி நீதிக் கட்சியில் இணைந்தார். பெரியார், திரு.வி.க., வ.உ.சி. போன்றவர்கள் அவர்களின் சமுதாயக் கண்ணோட்டத்தில் காங்கிரசில் நிலைத்திருக்க மாட்டார்கள் என்று டி.எம். நாயர் தொலைநோக்கோடு குறிப்பிட்டார். அப்படியே நடந்தது.

'திராவிடத்து லெனின்' டி.எம்.நாயர் என்று பெரியாராலும், அனைவராலும் போற்றப்பட்டவர். இங்கிலாந்து நாட்டின் உலகப் புகழ்பெற்ற எடின்பரோ மருத்துவப் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி கற்ற மிகப்பெரிய மருத்துவ மேதை. கேரளத்தில் மிகப் பெரிய செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தார். மருத்துவராக அயல்நாடுகளில் பணியாற்றி பெரும் பொருளீட்டினார்.

அவர் திருமணம் செய்து கொள்ளவில்லை. இந்திய சமுதாயத்தை முன்னேற விடாமல் தடுக்கும் பிராமணிய வருண அமைப்பு முறை, ஜாதியை ஒடுக்குமுறை, மூடநம்பிக்கைகள், பெண் அடிமை முறை, அனைவரும் கல்வி பெற முடியாமை, வாட்டும் வறுமை நிலை ஆகியவற்றுக்கு எதிராக, அவற்றை ஒழிக்க தனது வாழ்வையே அர்ப்பணித்தார். தனது செல்வம் அனைத்தையும் இயக்கத்திற்காக செலவிட்டார்.

களப்பணியில் இறங்கி போராடிய மாவீரன் என்ற முறையில் பெரியாருக்கும், அம்பேத்கருக்கும், இன்றைய சமுதாய புரட்சியாளருக்கும் முன்னோடியானவர்.

கம்யூனிஸ்ட் பேரியக்கத்தின் சித்தாந்த தத்தை காரல் மார்க்ஸ் போல, திராவிட இயக்கத்தின் சித்தாந்த தத்தை டி.எம். நாயர். அவருடைய அரசியல் மாணவனாக, அடியொற்றி வந்த பனகல் அரசருக்கு மூன்று முறை சென்னை ராஜதானியின் முதலமைச்சராக நீதி கட்சியின் சார்பில் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது.

தன் குருநாதரைப் போலவே அச்சம் என்பதே அறியாத எஃகு இதயம் படைத்த புரட்சிக்காரர் பனகல் அரசர். மக்கள் நலன் பயக்கும் முடிவுகளையும், சமுதாயத்திற்கு தீங்கிழைக்கும் நச்சு வேர்களையும், மூட நம்பிக்கை கொண்ட மூர்க்கர்களை அப்புறப்படுத்தும் தீரப் பணிகளையும் நெஞ்சுரத்தோடு செயல்படுத்தினார்.

ஐரோப்பா கண்டமே மார்க்சின் சிந்தனையால் தீப்பிழம்பாய் மாறி ஆளும் அரசர்களை நடுங்க வைத்துக் கொண்டிருந்தது. அப்போது அவர் "லண்டன் மாநகரத்திலேயே மிகப்பெரிய அச்சுறுத்தலுக்கும் – அவதூறுகளுக்கும் ஆளாகி நிற்கிறேன்" என்று ஏங்கல்ஸ்க்கு கடிதம் எழுதினார்.

அதைப்போலவே தென்னிந்தியாவில் பகையும், அவதூறும் சூழ்ந்து நின்று பனகல் அரசரை தாக்கியது. சனாதன சக்திகள், பத்திரிகைகள், கட்சிக்குள்ளேயே குழி பறிக்கும் துரோகிகள் என அவர் சந்தித்த துயரங்கள் எண்ணில் அடங்காதவை.

இப்படிப்பட்ட சூழலில்தான் திராவிட இயக்கத்தின் இலட்சியக் கொள்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றினார். அவற்றை விரிவாக எழுதினால் இடம் போதாது. அவற்றில் ஒன்றுதான் வரலாற்றுச் சிறப்புமிக்க அவர் உருவாக்கிய அறநிலையத்துறை.

சோழப்பேரரசு காலத்தில் துவங்கி ஆங்கில காலனிய ஆட்சி காலத்திலும், கோவில் நிர்வாகம், அதன் விலை மதிப்பற்ற ஆபரணங்கள், அதன் அசையா சொத்தான விளைநிலங்கள், கட்டிடங்கள், மனைகள், கோயில் நில குத்தகை, உண்டியல் வருமானம், நேர்த்திக்கடன் வருமானம் என அனைத்தும் பிராமண குருக்கள் மற்றும் அறங்காவலர்கள் எனும் உள்ளூர் பிரமுகர்கள் வசம் இருந்தது.

சமுதாயத்தின் பொது சொத்தும், வருமானமும் கூட்டுக் கொள்ளையர்களால் களவு போவதை மக்கள் சொத்தாய் மாற்ற பனகல் அரசர் முடிவு செய்தார். அந்த வருவாய் செல்வத்தை ஏழை எளிய மக்களுக்கும், நலன் பயக்கும் திட்டங்களுக்கும் மடைமாற்றம் செய்ய உறுதி பூண்டார்.

அறநிலைய பாதுகாப்பு சட்டத்தை மிகப்பெரிய எதிர்ப்புகளுக்கிடையே நிறைவேற்றி திருக்கோயில் அசையும், அசையாச் சொத்துக்களை அரசின் அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார். இதனால் பனகல் அரசர் கடவுளை எதிர்க்கிறார், மதத்தை அழிக்கிறார், அதன் புனிதத்தை களங்கப்படுத்துகிறார் என்று பிராமணிய தலைவர்கள் அவதூறு கிளப்பி கடும் எதிர்ப்பு தெரிவித்தார்கள்.

அன்றைய பிரபல ஏடுகளான 'இந்து' 'சுதேச மித்திரன்' ஆகியவை பனகல் அரசரை கண்டித்து தலையங்கங்கள் தீட்டின. ஆங்கிலேயர்களே இதை பார்த்து தங்களுக்கு சங்கடம் வருமோ என்று பயந்தார்கள். கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாகத்தை இந்தியாவில் முடிவுக்கு கொண்டு வந்து இங்கிலாந்து அரசி விக்டோரியா மகாராணி அந்த பொறுப்பை தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார். அப்போது இந்தியாவின் 'மத விவகாரங்களில் தலையிட மாட்டோம்' என்று இந்திய மக்களுக்கு பகிரங்கமாக வாக்குறுதி கொடுத்தனர்.

இதற்கு எதிராக ஆங்கில அரசும், பனகல் அரசரும் செயல்படுவதாக பெரும் எதிர்ப்பு கிளம்பியது. ஆனால், மிகுந்த சாதுரியமாக பனகல் அரசர் வைஸ்ராய் இர்வினை சந்தித்து அந்த சட்டத்தில் மக்களுக்கு நலம் பயக்கும் தன்மையை அவரிடம் கூறிய அவரின் ஒப்புதலையும் பெற்றார். அதன் பின்னரும் பெரிய போராட்டங்களையும், எதிர்ப்புகளையும் சந்தித்தார். இந்த சர்ச்சையால் பின்னர் வைஸ்ராய் ரீடிங் என்பவருக்கும், சென்னை மாகாண கவர்னர் வெலிங்டனுக்குமே பெரிய மனக் கசப்பு ஏற்பட்டது.

இறுதியில் அனைத்து தடைகளையும் வென்று 1925 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அறநிலையப் பாதுகாப்பு மசோதா சட்டமாக இயற்றப்பட்டு பனகல் அரசர் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி பெற்றார்.

இத்தனை பெரிய புகழ்பெற்ற வரலாற்றுப் பின்னணியை கடந்து வந்த, மக்கள் நல வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ள அறநிலையத்துறையை ஒரு கையெழுத்தால் கலைத்து விடுவேன் என்று சொன்னால் பேராற்றலோடு இயங்கும் மின்கம்பியில் கை வைக்கும் விபரீதத்தில்தான் போய் முடியும்.

இனியாவது தம்பி அண்ணாமலை தமிழக வரலாறை சரியாக புரிந்து கொண்டு பேசுவது அவருக்கு மரியாதையாக இருக்கும்.

தொடர்புக்கு: 96007 23726

# குறு, சிறு தொழில்களுக்கு ஏமாற்றம் அளிக்கும் பட்ஜெட்

## டாக்ட் சங்கம் அறிக்கை

தமிழ்நாடு கைத்தொழில் மற்றும் குறுந்தொழில் முனைவோர்கள் சங்க கோவை மாவட்டத் தலைவர் ஜே.ஜேம்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

மத்திய அரசு 2023 –2024 க்கான பட்ஜெட்டில் பல்வேறு துறை சார்ந்து அறிவிப்புகள் செய்துள்ள நிலையில் இந்தியாவின் வளர்ச்சிக்கு மிகப்பெரும் தூண்களாக இருந்து வரும் குறு, சிறு தொழில்களுக்கான அறிவிப்பில் எதிர்பார்ப்புகள் ஒன்றும் பெரிய அளவில் இல்லாதது வருத்தம் அளிக்கிறது. நாங்கள் வரவேற்கும் அம்சத்தில் கீழ்கண்ட நிதி ஒதுக்கீடுகளை வரவேற்கிறோம், ரெயில் துறைக்கான ரூ.2,40,000 யிரம் கோடி நாட்டின் உள்கட்டமைப்புகளை மேம்படுத்திட ஒதுக்கீடு செய்து உள்ளது. ரூ.10 லட்சம் வரை தனி மனித வருவாய்க்கு ரூ.2.5 லட்சத்தில் இருந்து ரூ.3 லட்சம் வரை வரி விலக்கு மற்றும் தனி மனித வருமான வரி ரூ.5 லட்சத்தில் இருந்து ரூ.7 லட்சமாக உயர்த்தியது வரவேற்கிறோம்.

குறு, சிறு தொழில்களுக்கு என வங்கியில் வாங்கப்படும் கடன்களுக்கு உத்திரவாதம் அளிப்பதுக்காக ரூ.9,000 யிரம் கோடி மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது அது போதுமானதாக இல்லை, மேலும் இந்த பட்ஜெட் என்பது குறு, சிறு தொழில்களுக்கு பெரும் எதிர்பார்ப்பு இருந்த நிலையில் அது சம்மந்தமாக எவ்விதமான அறிவிப்பும் இல்லை, மேலும் குறு சிறு தொழில்களுக்கான கடன் வழங்குவதில் வட்டி சதம் குறைப்பும் அறிவிக்கப்படவில்லை.

ஜி.எஸ்.டி. யில் குறு, சிறு தொழில்களுக்கு உள்ள பிரச்சனைகளை தீர்க்கப்படும் என்ற அறிவிப்பும் இல்லை, குறு, சிறு தொழில்களுக்கான தனி அமைச்சகம் அறிவிப்பு எதிர்பார்த்தோம் அதுவும் இல்லை, மூலப்பொருள்களின் விலை நிர்ணயம் கமிட்டி அறிவிப்பு வரும் என்று எதிர்பார்த்தோம் இல்லை, 2020 முதல் 2022 வரை ஏற்பட்ட தொழில் நெருக்கடியில் இருந்து குறுந்தொழில்கள் மீண்டுவர வங்கியில் கடன் பெற்ற குறு சிறு தொழில் முனைவோர்களுக்கு அபராத வட்டி மற்றும் கொரோனா காலத்துக்கான வட்டிகள் தள்ளுபடி எதிர்பார்த்தோம் இல்லை, தனி கடன் திட்டம் எதிர்பார்த்தோம் இல்லை, பொதுவாக இந்த பட்ஜெட்டில் குறு சிறு தொழில்களை மேம்படுத்த எவ்விதத்திலும் தனி கவனம் செலுத்தப்படவில்லை என்பதே எங்களின் கருத்து. இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# சிவப்பும் - சமூக ஊடக நுட்பமும்!



மணிமாறன்

**ஜனசக்தி1937 ல் தொடங்கப்பட்டு, பாட்டாளி வர்க்கத்துக்காக குரல் கொடுத்து வருகிறது. தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப டிஜிட்டல் ஊடகமாக ஜனசக்தி பரிணமித்திருக்கிறது. கருத்துப் போராட்டத்தை மெய்நிகர் வெளியிலும் (Virtual Space) முன்னெடுத்துச் செல்ல முயன்று வருகிறது. இப்பணிகள் குறித்து ஒரு பார்வை..**

அச்சடிக்கப்பட்ட பத்திரிகைகளாக இருந்த அச்சு ஊடகம் (Print Media), காட்சி ஊடகமாக (TV Media) வளர்ந்தது. செயற்கைக்கோள்களை (சேட்டிலைட்) விண்ணுக்கு அனுப்பியதும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியும் தொலைக்காட்சிகளையும் கைப்பேசிகளையும் பல்கிப் பெருகச் செய்தன. இவற்றுடன் இணையம் எனப்படும் இன்டர்நெட் தொழில்நுட்பமும் சேர்ந்தவுடன் டிஜிட்டல் ஊடகமாகப் பரிணாமம் பெற்றுள்ளது.

இந்த டிஜிட்டல் தொழில்நுட்பம் சமூகத்தின் போக்கை, மக்களின் உழைப்பை, உபரியை கார்ப்பரேட்டுகள் உறிஞ்சுவதை எளிமையாக்கி உலகு தழுவிய பெரும் நிறுவனங்களாக ஊதிப் பெருகச் செய்து வருகின்றன. இவற்றில் டிஜிட்டல் ஊடகம் குறித்துப் பார்க்கலாம்.

அச்சு ஊடகமோ; காட்சி ஊடகமோ ஒரு வழிப் பாதை ஆகும். ஆசிரியர் குழு எழுதுவதை மக்கள் படிக்க வேண்டும். ஆசிரியர் குழு ஒளிபரப்புவதை மக்கள் பார்க்க வேண்டும். இந்த ஒரு வழி பாதையை டிஜிட்டல் ஊடகங்கள் புரட்டிப்போட்டு விட்டன. அவற்றை இருவழிப் பயணமாக; பரஸ்பர செயல்பாடாக மாற்றிவிட்டன.

செய்திகளைப் பார்ப்பவர், காட்சிகளைக் காண்பவர், ஒலித்தொகுப்புகளைக் கேட்பவர் என ஒவ்வொருவரும் தாங்களே அதனை உருவாக்க முடியும். செய்திகளையும் காட்சிகளையும் ஒளித் தொகுப்புகளையும் படைக்க முடியும். இதற்கான வாய்ப்பை டிஜிட்டல் வெளி திறந்து விட்டுள்ளது. இந்த டிஜிட்டல் வெளியை தனிநபர்கள் மட்டுமல்ல சமூகக் குழுக்களும் அரசியல் கட்சிகளும் இயக்கங்களும் பயன்படுத்தி வருகின்றன. மக்களிடம் முடங்கிக் கிடந்த கருத்துகள் அனைத்தும் சரியும் தவறுமாக வெள்ளமென வெளிப்பட்டு வருகின்றன.

இந்த டிஜிட்டல் வெளியில் ஒரு முக்கிய அங்கம்தான் சமூக ஊடகங்கள். 2022 ஆம் ஆண்டு ஜனவரியில் எடுத்த கணக்கெடுப்பில், இந்தியாவில் 65.80 கோடி பேர் இன்டர்நெட் பயன்படுத்துகின்றனர். ஸ்மார்ட் போன் எனப்படும் திறன்பேசிகளின் வளர்ச்சிக்கு ஏற்ப இன்டர்நெட் மற்றும் சமூக ஊடகங்களை பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இப்படி இணையத்தைப் பயன்படுத்துவோரில், 82.9 விழுக்காட்டினர் திறன்பேசிகள் மூலமே சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர். கம்ப்யூட்டர் மற்றும் லேப்டாப் மூலம் 4.3 விழுக்காட்டினரும்; இரண்டையும் பயன்படுத்துவோர் 9.7 விழுக்காட்டினரும் உள்ளனர்.

சமூக ஊடகங்கள் மக்களை தங்கள் பக்கம் ஈர்த்து பெரும் வளர்ச்சி கண்டுள்ளன. 2019 ஆம் ஆண்டு ஜனவரியில் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தியவர்களின் எண்ணிக்கை 2022 டிசம்பரில் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. குறிப்பாக பேஸ்புக், இன்ஸ்டாகிராம், ட்விட்டர் போன்ற சமூக ஊடகங்களுக்காக மக்கள் செலவிட்ட நேரம், இரண்டு ஆண்டுகளில் 197 விழுக்காடு அதிகரித்துள்ளது. சராசரியாக ஒரு நாளைக்கு சுமார் இரண்டரை மணி நேரம் செலவிடுகின்றனர்.

சமூக ஊடகங்களில் அதிகப் பயனாளர்களைப் பெற்று வாட்ஸ்அப் முதலிடத்தில் உள்ளது. இதனை 53.40 கோடி பேர் பயன்படுத்துகின்றனர். அடுத்த இடத்தில் உள்ள இன்ஸ்டாகிராம் 50.30 கோடி பயனாளர்களைக் கொண்டுள்ளது. முகநூல் (பேஸ்புக்) 49.10 கோடி பயனாளர்களும், டெலகிராமை 37.40 கோடி பேரும் பயன்படுத்துகின்றனர். எதார்த்த உலகில் நடந்து வரும் கருத்து மோதல்கள், போராட்டங்கள், எதிர்ப்புகள், பொழுதுபோக்குகள் போன்று சமூக ஊடகங்கள் செல்வாக்கு செலுத்தும் மெய்நிகர் உலகிலும் போராட்டங்களும் எதிர்ப்புகளும் பொழுதுபோக்குகளும் இருந்து வருகின்றன.

இன்றைய தலைமுறையினரின் கருத்துக்களை வடிவமைப்பதில் இந்த மெய்நிகர் உலகு முக்கிய பங்காற்றுகிறது. இந்த மெய்நிகர் உலகிலும் கருத்துப் போராட்டங்களும் சண்டைகளும் அம்பலப்படுத்தல்களும் தொடர்ந்து நடக்கின்றன. ஜனசக்தி டிஜிட்டல் ஊடகமும் இந்த மெய்நிகர் உலகில் கால்பதித்து பயணித்து வருகிறது.

**ஜனசக்தி தொலைக்காட்சியின் பேஸ்புக் பக்கத்தை 1.40 லட்சம் பேர் பின்தொடர்கின்றனர். 23 ஆயிரம் பேர் விருப்பம் தெரிவித்துள்ளனர். சராசரியாக ஒரு லட்சம் பேர் நாள்தோறும் முகநூல் பக்கத்தைப் பார்க்கின்றனர். ஏறத்தாழ 12 ஆயிரம் பேர் கருத்துக்களைப் பதிவிடுகின்றனர். எட்டுக்கும் மேற்பட்ட பதிவுகள் நாள்தோறும் வெளியாகின்றன.**

**யூட்யூப் ஜனசக்தி பக்கத்தில் சராசரியாக ஒரு நாளைக்கு இரண்டு காணொலி (வீடியோ) வெளியாகின்றன. ஆளுநர் மாளிகை முற்றுகை, கட்சி மற்றும் மக்கள் திரள் அமைப்புகளின் மாநாடுகள் போன்றவை நேரலையில் ஒளிபரப்பு செய்யப்பட்டுள்ளன. ஆளுநர் மாளிகை முற்றுகை போராட்டத்தின் நேரலை மற்றும் வீடியோ பதிவுகள் ஏறத்தாழ 6 லட்சம் பேரைச் சென்றடைந்துள்ளது.**

இதேபோன்று இன்ஸ்டாகிராம், டுவிட்டர் சமூக ஊடகங்களிலும் பதிவுகள் வெளியாகின்றன. ஆளுநர் மாளிகை முற்றுகைப் போராட்டம் முதல் ஏஐடியுசி நடத்திய மறியல் வரை அனைத்தும் ஒளிபரப்பு செய்துள்ளது. நாள்தோறும் பதிவுகளை வெளியிட்டு வருகிறது.

தமிழகத்தில் மட்டுமல்ல இந்தியா முழுவதும்வசிக்கும்தமிழர்களும்,இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, ஏமன், ஐக்கிய அரபு அமீரகம் உட்பட உலக நாடுகளில் உள்ள தமிழர்களும் இதன் பதிவுகளைப் படித்தும் பகிர்ந்தும் வருகின்றனர்.

பேஸ்புக், யூட்யூப்பில் வெளியாகும் பதிவுகள் அனைத்தும் இன்ஸ்டாகிராம், டுவிட்டரிலும் பகிரப்படுகின்றன. இவற்றின் மூலமும் மேலும் பல ஆயிரம் பேருக்கு சென்றடைகின்றன. இவை அனைத்தும் குறுகிய காலத்தில், குறைவான மனித ஆற்றலுடன் மேற்கொள்ளப்பட்ட பணிகளாகும்.

**2014 ஆம் ஆண்டு சமூக ஊடகங்களை பாஜக கையிலெடுத்து, செல்வாக்குடன் திகழ்ந்து வருகிறது. கருத்துப் பரப்பலுடன் வெறுப்பு அரசியலையும் அது விதைத்து வருகிறது. பாஜகவைத் தொடர்ந்து, காங்கிரஸ், திமுக, அதிமுக, நாம் தமிழர் போன்ற கட்சிகளும் சமூக ஊடகங்களுக்கு முக்கியத்துவம் அளித்து வருகின்றன.**

சமூக ஊடகங்களில் நம் கட்சி ஊழியர்களும், ஜனசக்தி வாசகர்களும் என்ன செய்ய வேண்டும்?

மெய்நிகர் உலகில் நாம் வலுவான இடத்தைப் பெற வேண்டும். பாட்டாளி வர்க்கத்தின் லட்சியம்; கட்சியின் கொள்கைகள் ஓங்கி ஒலித்திட வேண்டும். இதற்கு நாம் அனைவரும் சமூக ஊடக இயக்கமாக மாற வேண்டும். சிவப்பும், சமூக ஊடக நுட்பமும் இணைய வேண்டும். இது காலத்தின் தேவையாகும்.

இதற்கான பணிகளின் தொடக்கமாக நாம் செய்ய வேண்டியவை..

1. முகநூல் (பேஸ்புக்)
2. இன்ஸ்டாகிராம்
3. டுவிட்டர்
4. யூட்யூப்
5. வாட்ஸ்அப்
6. டெலகிராம்

இந்த சமூக ஊடக செயலிகளை முதலில் பிளே ஸ்டோருக்குச் சென்று நம்முடைய திறன்பேசியில் (ஸ்மார்ட் போன்) நிறுவப்பட வேண்டும்.

பின்னர், முகநூலின் சர்ச் பகுதிக்குச் சென்று 'ஜனசக்தி தொலைக்காட்சி' Janasakthi Tholaikatchi என ஆங்கிலத்தில் டைப் செய்தால் அந்தப் பக்கம் வந்து விடும்.

அதில் இணைவதற்காக ஃபாலோ (follow) என்பதை கிளிக் செய்ய வேண்டும். உடனே அந்தப் பக்கத்தில் பதிவேற்றப்பட்டிருக்கும் அனைத்து செய்திகளும் நமக்கு வந்துவிடும். அவற்றைப் படிப்பதுடன், அந்த பதிவுகள் குறித்து பல்வேறு கருத்துக்கள்... ஆதரித்து, எதிர்த்து, விமர்சித்து பதிவிடப்பட்டிருக்கும். அவற்றில் நம்முடைய கருத்துகளைப் பதிவிடலாம். லைக், ஷேர் அவசியம் செய்யப்பட வேண்டும். அதுபோல எதிர்த்து, விமர்சித்து பதிவிடப்படும் கருத்துகளுக்கு தக்க பதிலடி கொடுக்கலாம். மெய்நிகர் உலகில் நாம் மேற்கொள்ளும் கருத்துப் பரப்புரை இவ்வாறு அமைய வேண்டும்.

இதேபோன்று இன்ஸ்டாகிராம், டுவிட்டர் செயலிகளிலும் ஃபாலோ (follow) என்றிருப்பதை கிளிக் செய்து, நாம் இணைய வேண்டும். முகநூல் போன்று இவற்றில் இருந்தும் நமக்குத் தகவல்கள் வந்துவிடும். நம்முடைய கருத்துகளைப் பதிவிடலாம். நண்பர்களுக்கு, தோழர்களுக்குப் பகிரலாம்.

அடுத்து, யூட்யூப் (youtube) - இது முற்றிலும் வீடியோ உலகம். காட்சிகள் நம் கண்முன் விரியும். கட்சியின் திருப்பூர் மாநில மாநாடு; விஜயவாடா அகில இந்திய மாநாடு; ஆளுநர் மாளிகை முற்றுகைப் போராட்டத்தில் தலைவர்கள் ஆற்றிய உரை என அனைத்தையும் காட்சி வடிவில் எப்பொழுதும் பார்க்கலாம்.

இந்தயூட்யூப்செயலியில்உள்ளசர்ச்என்ற இடத்தில் 'ஜனசக்தி தொலைக்காட்சி' என ஆங்கிலத்தில் டைப் செய்து கிளிக் செய்ய வேண்டும். ஜனசக்தி தொலைக்காட்சிப் பக்கம் வந்துவிடும். அதன் வலது பகுதியில் வீடியோவுக்கு கீழே 'சப்ஸ்கிரைப்' subscribe என்றிருக்கும், அதை கிளிக் செய்து bell பெல் பட்டனை அழுத்தி All என்பதை கிளிக் செய்ய வேண்டும். இணைந்து கொள்ள வேண்டும். காணொலிகள் பதிவேற்றியவுடன், அந்தத் தகவல் நம்மைத் தேடி வரும். இந்த 'யூட்யூப்'பில் கட்சியின் மாநாடுகள், போராட்டங்கள், கூட்டங்கள் என அனைத்தும் நேரலையில் ஒளிபரப்பாகும். அவற்றைப் பார்க்கலாம். பகிர வேண்டும், பரப்ப வேண்டும். குரூப்களுக்கு லிங்க் கொடுக்க வேண்டும்.


அடுத்து, வாட்ஸ்அப், டெலகிராம் இந்த செயலிகளை நம்முடைய திறன்பேசியில் நிறுவ வேண்டும். பின்னர், இதற்கென தரப்பட்டுள்ள இணைப்பை கிளிக் செய்து, இணைந்து கொள்ள வேண்டும். அல்லது, நம்முடைய மொபைல் எண்ணைக் கொடுத்தால் இணைக்கப்படும்.

நாம் செய்திருக்கும் மேற்கண்ட பணிகள் அனைத்தும் ஒரு தொடக்கம்தான். இந்தத் தொடக்கம் அனைத்து தகவல்களையும் விரல் நுனியில் நமக்கு கொண்டு வந்து சேர்த்துவிடும். இதனைத் தொடர்ந்து மெய்நிகர் உலகில் நடந்து வரும் பரப்புரையில், கருத்துப் போராட்டங்களில் நாமும் பங்கேற்க வேண்டும்; நம்முடைய கருத்துகளைப் பரப்ப வேண்டும். சிவப்பும் சமூக ஊடக நுட்பமும் இணைய வேண்டும்.

சிவப்பும் சமூக ஊடக நுட்பமும்!

மெய்நிகர் உலகில் ஜனசக்தியுடன் பயணிப்போம்!

தொடர்புக்கு: 95000 01224



# மதம் ஒரு ம



எஸ்.சுதாகர் ரெட்டி



மதம் குறித்த கம்யூனிஸ்ட்களின் அணுகுமுறை என்ன என்பதைப் பற்றி கம்யூனிஸ்ட் கருத்தியலாளர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏராளமாக விளக்கி இருக்கிறார்கள். கம்யூனிஸ்ட்டுகள் பகுத்தறிவாளர்கள் என்ற முறையில், மத நம்பிக்கை கொண்டவர்கள் அல்ல.

இந்த அண்டவெளியும் பூமியும் எவ்வாறு பிறந்தன? எவ்வாறு பரிணாம வளர்ச்சி அடைந்தன? உயிரிகள் எப்போது தோன்றின? அவை படிப்படியாய் வளர்ந்து மனிதன் எனும் நிலை எவ்வாறு ஏற்பட்டது? என்பதைப் பற்றி எல்லாம் நாம் ஏராளமாகப் படித்திருக்கிறோம்.

ஆனால் மதநம்பிக்கை கொண்டவர்கள் அறிவியல் வேறு, வாழ்க்கை வேறு என்றே நினைக்கிறார்கள். பள்ளியில் கற்ற அறிவியல் கல்வியை பள்ளி வளாகத்துக்குள்ளேயே விட்டு விடுகிறார்கள். இன்னும் சிலருக்கு கடவுள் இருக்கிறாரா? என்பதில் ஐயப்பாடு இருந்தாலும், குடும்பம் மற்றும் சமூக அழுத்தத்தின் காரணமாக மதத்தைப் பின்பற்றித் தீர வேண்டியிருக்கிறது.

மதங்கள் பிறந்த போது, அறிவியல் துவக்க நிலையிலேயே இருந்தது. மனிதர்களின் அறிவுத்திறன் வளர்ச்சி அடைந்தபோது, மனிதகுலம் எங்கிருந்து தோன்றியது? என்ற சிந்தனை பிறந்தது. அதற்கு முன்னர், இயற்கைப் பேரழிவுகளைக் கண்டு அஞ்சிய மனிதர்கள், இயற்கையை வழிபடத் தொடங்கி இருந்தார்கள்.

தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே இந்த வழிபாடு. அதன் அடிப்படையில் நம்மை உருவாக்கியவர் ஒருவர் இருக்க வேண்டும் என்று நினைத்தார்கள். காலப்போக்கில் இந்த சிந்தனை உறுதிப்பட்டு நம்பிக்கையானது. அந்த நம்பிக்கையை ஊக்கமூட்டி வளர்ப்பதற்கு மதங்கள் உருவாக்கப்பட்டன.

“மனிதர்கள் கடவுள்களைப் படைத்தார்கள், கடவுள் மனிதர்களைப் படைத்தார்” என்ற பிரபலமான தெலுங்குத் திரைப்படப் பாடல் ஒன்று உண்டு. உலகின் வெவ்வேறு கண்டங்களில், வெவ்வேறு நேர்வுகளில், வெவ்வேறு விதமான கடவுள்கள் உருவாக்கப்பட்டார்கள். அதைத் தொடர்ந்து மதங்களும் பிறந்து வளர்ந்தன. கடவுளின் வடிவம் தெளிவற்றது. பல மதங்கள் தமது கடவுளின் உருவத்தை வரைய மறுத்தன. வேறு யாராவது வரைந்தால், அவர்கள் மனக்காயம் அடைந்தனர்.

இந்தியாவில், மனித உருவத்திலேயே கடவுளின் வடிவம் இருப்பதாக வழிபடத் தொடங்கிய வேதகாலம், பிற்காலத்தில் நிகழ்ந்ததாகும். கால ஓட்டத்தில் தேவேந்திரன், இந்திராணி, எமதர்மராஜா உட்பட முப்பத்து முக்கோடி கடவுள்கள் உருவாக்கப்பட்டனர்.

கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களை அச்சுறுத்துவதற்காகவும், நம்பிக்கை கொண்டவர்களின் விசுவாசத்தை வலிமைப்படுத்துவதற்காகவும் இவ்வளவு கடவுள்கள் உருவாக்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக, திருடர்கள், கொள்ளைக்காரர்கள், சூதாடிகள், போர் விரும்பிகள் எல்லோரும் தங்களது வேலைகள் வெற்றிகரமாக முடிவதற்கு, கடவுளைப் பிரார்த்திக்கத் தொடங்கினார்கள்.

கடவுளின் பெயரால், தேங்காய், பணம் தொடங்கி தங்கம் வரை நேர்த்திக் கடனாக செலுத்துகிறார்கள். உலகத்தையே கடவுள் படைத்தார் என்று நம்பும் அதே நேரத்தில், அவரால் படைக்கப்பட்ட பொருள் அவரிடம் இல்லை என்று நேர்த்திக்கடன் செலுத்துவது நகைமுரண்தான்.

வெவ்வேறு பகுதிகளில், கடவுள்களுக்கு வெவ்வேறு பெயர்கள் இருப்பதை போல, அவர்களுடைய வடிவமும் வெவ்வேறாகவே அமைந்தது. மனித வடிவிலான கற்சிலைகள் பல உண்டு. ஒடிசாவின் பூரியில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மரச் சிலை மாற்றப்படும். பழங்குடிகள் மரத்தின் அடியில் ஒரு கல்லை வைத்து, அதில் வண்ணம் பூசி வித்தியாசமான முறையில் வழிபடுவார்கள்.

தென்னிந்தியாவிலோ ஏராளமான கிராம தேவதைகள் உண்டு. குலதெய்வ வழிபாடு உண்டு. கிராம தெய்வங்கள் அனைத்துமே பெண் தெய்வங்கள்தான். வழிபாட்டுத் திருவிழாக்களில் கிராமமே கூடி நின்று கொண்டாடும். கோவில் பூசாரியாக அந்தப் பகுதியைச் சார்ந்த பிராமணர் அல்லாதவரே இருப்பார். வைதீகக் கோவில்களிலோ பிராமணர்கள் மட்டுமே அர்ச்சகர்கள். உலகத்தில் வேறு எந்த மதமும் இவ்வளவு ஏராளமான எண்ணிக்கையில், ஆண் பெண் தெய்வங்களைக் கொண்டதாக இல்லை.

முஸ்லிம்களுக்கு, இமாம்கள் உண்டு. கிறிஸ்தவத்திலோ பிஷப்புகளும், அவர்களுக்கு மேல் போப்பாண்டவரும் உண்டு. திட்டமிட்ட வகையில், தமது நலனுக்கும், வழிபாட்டு நிறுவனங்களின் நலனுக்கும் பரஸ்பர நன்மை பயப்பதாக இருந்ததால் மதங்களை அரசர்கள் வலிமைப்படுத்தினார்கள். ஆட்சி நடத்துவதற்காக அரசர்களை கடவுளே அனுப்பி வைத்ததாக மதத் தலைவர்கள் சொல்ல, அரசர்களோ மத தலைவர்களை கடவுளின் பிரதிநிதிகள் என தனது அதிகாரத்தின் மூலம் உறுதிப்படுத்தினார்கள். ஒருவரை ஒருவர் தாங்கி, பலன் பெற்றார்கள்.

தமது மதத்தை உலகெங்கும் பரப்புவதற்காக போர்களை நடத்தி, சண்டையிட்டார்கள். இந்தப் போர்களில் பல லட்சக்கணக்கான மக்கள் மடிந்தார்கள். இப்போதும் மதத்தின் பெயரால் சண்டைகள் உலகத்தின் சில பகுதிகளில் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

உண்மையிலேயே கடவுள் வல்லமை மிக்கவராக இருந்தால், எல்லா நாடுகளிலும் ஒரே மதம் தானே இருந்திருக்கும்? ஏன் சில நாடுகளில் கடவுள் ஒரு மதத்தைச் சார்ந்தவராக மட்டுமே இருக்கிறார்? இவ்வாறு நீங்கள் கேள்விகளை எழுப்பினால் மத வெறியர்கள் கோபப்படுவார்கள். ஏனென்றால் அவர்களுக்கு நியாயமான பதில் எதையும் சொல்ல முடியாது. ஆனால் கேள்வி கேட்பவரை தாக்க முடியும். இறை மறுப்பாளர்களின் தலையை வெட்டி அகற்ற முடியும்.

“ஒடுக்கப்பட்டவர்கள் அழுத்தப்பட்டவர்களின் பெருமூச்சாக, இதமளிப்பதாகத்தான் மதம் தொடங்கியது கடைசியில் அது ஒரு போதையாக மாறி விட்டது” என்று காரல் மார்க்ஸ் சொன்னார்.

மதம் என்பது ஒரு மாயத் திரை. கம்யூனிஸ்டுகள் பகுத்தறிவோடும், உணர்திறனோடும் சிந்திக்கிறார்கள். எனவே அவர்களுக்கு மதத்தின் மீது நம்பிக்கை இல்லை.

**கடவுளைப் பற்றி பேசாத சில மதங்களும் இருக்கின்றன. அவற்றுள் புத்த மதம் முக்கியமானது. அவர்கள் லட்சக்கணக்கில் மிருக பலி இல்லாத, சாதி, மத வித்தியாசம் இல்லாத ஒரு சமூகத்தைக் காண விரும்பினார்கள். சீனா, இலங்கை, பூட்டான், சிக்கிம், ஜப்பான், தாய்லாந்து, வட கொரியா, தென்கொரியா, வியட்நாம் மற்றும் சில ஆசிய நாடுகளில் பவுத்தர்கள் மிக அதிக எண்ணிக்கையில் வாழ்கிறார்கள்.**

மதத்தின் மீது நம்பிக்கை இல்லாமல் இருப்பதும், மதங்களில் உள்ள ஓட்டைகளை விளக்க முயற்சிப்பதும் வேறு வேறு செயல்களாகும். மத நம்பிக்கையாளர்களை வெறுப்பது கம்யூனிஸ்டுகளின் வேலை அல்ல.

இறை நம்பிக்கை இல்லாவிட்டாலும்,

---

வாடகை கட்டணம் பல மடங்கு உயர்வு:

# கோயில்மனையில் குடியிருப்போர் ஆர்ப்பாட்டம்

கோயில்மனைகளில் குடியிருப்போர், கடைகள் வைத்திருப்போருக்கு, கருணாநிதியால் அறிவிக்கப்பட்ட அரசாணைகள் 456/298 ஐ புறந்தள்ளி, 2016ல் வாடகை பலமடங்கு உயர்த்தப்பட்டு அறிவிக்கப்பட்டது. பலமுறை முறையிட்டும் அப்போதைய ஆட்சி கண்டுகொள்ளவில்லை. ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபுவிடம் முறையிட்டபோது, அவரும் இந்த வாடகை உயர்வு பலமடங்கு அதிகமானது, இதை எவரும் செலுத்தமுடியாத அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது என்றும், இதை சரிசெய்ய முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்று தீர்வு காணுவதாக கூறியதோடல்லாமல், முதல்வர் மு.க. ஸ்டாலின் மூலம் சட்டப்பிரிவு 34ஏ ல் உள்ள குறைகளை களைந்து, நியாயவாடகை நிர்ணயிக்க நியாயவாடகை குழுவினை தலைமைசெயலாளர் தலைமையில் 9.12.2021 ல் அமைக்க ஏற்பாடு செய்தார்.

18.6.2022 ல் கோயில் மனை குடியிருப்போரின் வாழ்வுரிமை மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியபோது, இன்னும் ஒருமாதத்தில் நியாயவாடகை குழுவின் முடிவுகள் அறிவிக்கப்படும் என்று உறுதியளித்தார். ஆனால் குழு அமைத்து 12 மாதங்களாகியும், அமைச்சர் மாநாட்டில் உறுதி அளித்து ஆறு மாதங்களாகியும், குழுவின் அறிக்கை வெளிவரவில்லை.



அதற்குமாறாக, 2016 ல் அறிவிக்கப்பட்ட புதிய வாடகையை செலுத்த வேண்டும் என்று அறநிலயத்துறை அதிகாரிகள் மூலம் அதிரடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கோயில் மனைகளில் வாழ்வோர், அச்சுறுத்தப்படுகின்றனர். வீடுகளும், முக்கியமாக தங்கள் வாழ்வாதாரத்திற்காக உள்ள சிறு வணிகர்களின் கடைகள் சீல் வைக்கப்பட்டு வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. “ஸ்டாலின்தான் வாராரு, விடியல் தரப்போறாரு” என்ற கோஷத்தில் ஈர்க்கப்பட்டு வாக்களித்த எங்கள் வாழ்வாதாரம் குழிதோண்டி புதைக்கப்பட்டுள்ளது. போராட்டங்கள் பல நடத்தியும், சிபிஐ சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து மூலம் சட்டமன்றத்தில் தெரிவித்தும் தீர்வு காணப்படவில்லை.

எனவே எங்கள் குடும்பபெண்களும், நாங்களும் தெருவிற்கு வருகிறோம் என்று இன்று தெருவில் இறங்கி போராடுகிறார்கள், பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, பல திட்டங்களை கொண்டுவந்துள்ள இந்த அரசு, பெண்கள் நடத்தும் இந்த போராட்டத்திற்காவது செவிசாய்க்குமா? சென்னை மாவட்டத்தைச் சார்ந்த கோயில்மனை குடியிருப்போர் மகளிர் அணியினரின் இந்த கோரிக்கை முழக்கமாவது அரசின் காதுகளுக்கு சென்று கோயில் மனை வாழ்வோரின் வாழ்வாதாரம் நிலைநிறுத்தப்படவேண்டும் என்பதே எங்களின் கோரிக்கையாகும். இந்த மாபெரும் கோரிக்கைமுழக்கம் ஜன.28 அன்று கோயில்மனை குடியிருப்போர் சங்க மகளிர் அணி அமைப்பாளர் போரூர் ஆர்.பூங்கொடி எக்ஸ்.எம்.சி., தலைமையில், மகளிர் அணி டாக். எஸ்.ராஜேஸ்வரி கோரிக்கை முழக்கமிட, கலந்துகொண்ட அனைவரும் தொடர் முழக்கமிட்டனர்.

கோரிக்கைகளை வலியுறுத்தி உழைக்கும் பெண்கள் அமைப்பு மா.செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, பெண்ணுரிமை போராளி பேராசிரியர் சி.சுந்தரவள்ளி, மார்க்சிஸ்ட் கட்சி கே.வனஜகுமாரி ஆகியோர் பேசினர்.

சூளை, தமிழக இந்துசமய திருக்கோயில்களின் வீட்டுமனை வாடகைதாரர்கள் சங்க தலைவர் லோகநாதன் சங்கம் நடத்திவந்த போராட்டங்களை வரிசைப்படுத்தி பேசினார். விவசாய சங்க பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஒவ்வொரு கோரிக்கையாக எடுத்துரைத்தார்.

முடிவில் பாடியில் நடைபெற்ற அறநிலையத்துறையின் அத்துமீறலை, வில்லிவாக்கம் அ/மி. அகத்தீஸ்வரர் ஆலய நிர்வாக அதிகாரி குமரேசனின் அதிரடி நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் விரிவாக எடுத்துரைத்தனர். பாடி, ஜகதாம்பிகை நகர் மகளிர் அணி அமைப்பாளர் எஸ்.சந்தியா நன்றி கூறினார்.

# மாயத் திரை

மதங்களை நம்புவது உரிமை என்ற வகையில் அவர்களை கம்யூனிஸ்டுகள் மதிக்கிறார்கள். எல்லா மதங்களுக்கும் சம உரிமை உள்ளது. ஒரு குறிப்பிட்ட மதத்துக்கு ஆதரவாகவும், இன்னொரு மதத்துக்கு எதிராகவும் நிற்பதில் அர்த்தம் ஏதும் இல்லை.

ஏமாற்றுக்காரர்களும், துரோகிகளும் தங்களை மதங்களின் காப்பாளர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். மத அடிப்படை வாதத்துக்கும் மதவெறிக்கும் எதிராகத்தான் கம்யூனிஸ்டுகள் போராடுகிறார்கள். மதத்தின் பெயரால் மக்களை ஏமாற்றுபவர்களுக்கு எதிராகவே அவர்களின் போராட்டம் இருக்கிறது.

கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள் எல்லோரும் இறை மறுப்பாளர்களாகத்தான் இருக்க வேண்டும் என கட்சியில் எந்த விதியும் இல்லை. அவ்வாறு ஒரு விதியைச் சேர்க்க முடியாது என லெனின் உறுதியாக மறுத்துவிட்டார். மக்கள் இயல்பாகவே அறிவியல் ரீதியாக சிந்தித்து, சமூக வர்க்க உணர்வோடு பகுத்தறிவு பெற வேண்டும் என அவர் சொன்னார்.

மதவெறியை கம்யூனிஸ்ட் கட்சி முற்றிலுமாக எதிர்க்கிறது. எந்த ஒரு மதத்திலும் இறை நம்பிக்கை மட்டுமே கொண்டவர்கள்தான் மிகப் பெரும்பாலானவர்கள். சிலர் மட்டுமே அதீதப் பற்று கொண்டவர்களாக இருப்பார்கள். மீதம் உள்ள சிறு பகுதிதான் மதவெறி கொண்டு அலைகிறது. இவர்களால் தான் பிரச்சனைகளும் அபாயமும் ஏற்படுகிறது.

மற்ற மதங்களுக்கு முன்னுரிமை கொடுக்கிறார்கள், நமது மதத்தைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை குறைகிறது, அதே நேரத்தில் அவர்களது மக்கள் தொகை கூடுகிறது என்பதைப் போன்ற தவறான கருத்துக்களை தொடர்ச்சியாக இவர்கள் பரப்புரை செய்கிறார்கள். ஒவ்வொரு பிரச்சனையுமே மிகைப்படுத்தப்படுகிறது. சாதாரண பிரச்சனைக்குக் கூட, நம்மை புண்படுத்தி விட்டார்கள் என்று உணர்ச்சிபூர்வமானதாக மதச்சாயம் பூசப்படுகிறது.

அதன் பெயரால் உரசல்களும், மதச் சண்டைகளும் உருவாக்கப்படுகின்றன. இந்த ஓயாத சண்டைகளின் மூலம், ரத்த ஆறு ஓடச்செய்து அவர்கள் ஆட்சி அதிகாரத்துக்கு வர முயற்சிக்கிறார்கள். மதவெறி என்பது எந்த நாட்டிலும் மிக அபாயகரமானது.

மதத்தின் பெயரால் உருவாக்கப்படும் எந்த நாடும் வளர்வதில்லை, மாறாக அழிவை நோக்கியே பயணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக பாகிஸ்தான் நாட்டின் 75 ஆண்டுகால சுதந்திரத்தில், மீளாத வறுமை, பட்டினி, வேலையின்மை, பயங்கரவாதக் கொலைகள், திவாலான பொருளாதாரம் ஆகியவை தான் எஞ்சி நிற்கின்றன. 40 ஆண்டுகளுக்கும் மேலாக பாகிஸ்தான் சமூகம் ராணுவ ஆட்சியினால் நசுக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தான் இன்னொரு வாழும் உதாரணமாகும். வெறி பிடித்த, அறிவிழந்த தலிபானின் கொடூரக் கரங்களால் அது ஆளப்பட்டு வருகிறது.

மதம் என்பது எப்போதும் ஜனநாயகத்திற்கும், வளர்ச்சிக்கும், அறிவியல் மேம்பாட்டுக்கும், அறிவியல் கல்விக்கும் நேர் எதிரானதாக இருந்து வருகிறது. இத்தகைய வகுப்புவாத ஆட்சிகளால் பெண்கள் நசுக்கப்படுகிறார்கள். எனவேதான் வெறுப்பை விதைக்கும் பரப்புரைகளையும், மத வெறியையும் மக்கள் எதிர்த்து போராட வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சி விரும்புகிறது.

கம்யூனிஸ்டுகளின் முதலாவது கடமை, வர்க்கச் சுரண்டலையும், பொருளாதார சமமின்மையையும் எதிர்த்துப் போராடுவது, அறிவியல் சிந்தனையையும், மக்களின் மனசாட்சியைத்தட்டி எழுப்புவதும் ஆகும்.

**பகுத்தறிவு மற்றும் அறிவியல் புரிதல் மூலம்தான் உணர்வு மட்டத்தை உயர்த்த வேண்டும், மதங்களை நேரடியாக தாக்குவதன் மூலமாக அல்ல என்பது முக்கியமானது. அண்மையில் எடுக்கப்பட்ட ஒரு சர்வதேச கணக்கீட்டின்படி, உலகத்தில் 110 கோடிக்கும் அதிகமாக, கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் உள்ளனர். இது ஒரு மிகப்பெரிய எண்ணிக்கை ஆகும். இந்த உண்மையை அவர்கள் உணர்வின் வழிபட்டே ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.**

மதத்தின் மீதான நேரடி தாக்குதல், கடவுள் நம்பிக்கையாளர்களை மேலும் கடினமாக மாற்றுகிறது. அது தேவையை நிறைவு செய்யாது. இருட்டைப் போக்குவதற்கு வெளிச்சத்தை பாய்ச்சுவதே வழியாகும்.




நேரடியாக அவர்களோடு மோதாமல் இருப்பதால் நாம் அவர்களுக்கு எதிரானவர்களாக இல்லை என புரிந்து கொள்ளக்கூடாது. அது நமது ஒழுக்க அறிவியல் புரிதலை கீழ் இறக்கி விடும். அவர்கள் விரிக்கும் வலைக்குள் நாம் போய் சிக்கிக் கொள்ளக் கூடாது.

ஒரு இறை மறுப்பாளராக இருந்தே ஆக வேண்டும் என்று கட்சியில் விதி ஏதும் இல்லைதான், ஆனால் அது, மதச் சடங்குகள், மூடநம்பிக்கைச் செயல்பாடுகளில் கம்யூனிஸ்ட்கள் பங்கேற்பதற்கான உரிமம் இல்லை.

கம்யூனிஸ்டுகள் பகுத்தறிவோடு சிந்திக்க வேண்டும். மதம் மற்றும் மத நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்கி இருக்க வேண்டும். கட்சியின் அனுதாபிகளுக்கும், கட்சி உறுப்பினர், செயற்பாட்டாளர், தலைவர்களுக்கும் பெரும் வேறுபாடு உண்டு. கட்சித் தலைவர்கள் தவறு செய்தால், கீழ் மட்டத்தில் அதுவே சாக்குப் போக்காகவும், மரபாகவும் மாறிவிடும். எனவே தலைவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவர்களது அன்றாட வாழ்க்கையில் முன்மாதிரியாக விளங்க வேண்டும்.

கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆட்சியில் சோசலிச நாடுகளிலும் மத சுதந்திரம் இருந்தது. சோவியத் ஒன்றியத்தின் பழங்கால சர்ச்சுகள், கதீட்ரல்களுக்கு மக்கள் பிரார்த்தனைக்காகச் செல்வார்கள். 'பாகு' எனும் நகரில் ஒரு விசாலமான மசூதி ஒன்றுக்கு நான் சென்று பார்த்திருக்கிறேன். அங்கிருந்த இமாமிடம் கலந்துரையாடி இருக்கிறேன். எங்களுக்கு மதச் சுதந்திரம் இருந்தாலும் வயதானவர்கள் வருகிறார்களே தவிர, புதிய தலைமுறையினர் மிகச் சிலரே பிரார்த்தனைக்கு இங்கு வருகின்றனர் என்றார்.

அவரது பேரனுக்கு என்னை அறிமுகப்படுத்தி வைத்தார். அவர் அறிவியலில் முதுகலை பட்டம் படித்தவர். 'நான் ஒரு அறிவியல் மாணவன். எனக்கு கடவுள் நம்பிக்கை இல்லை' என்றார். எங்களுடன் இருந்த ஒரு இஸ்லாமிய நண்பர், 'உன்னை கல்லூரியில் மூளைச்சலவை செய்து விட்டார்களா? என்று வினவினார். அதற்கு அந்த இளைஞர் கோபமாக, 'இந்த உலகத்தில் குளித்து சுத்தமாக இருப்பதைப் பற்றி ஏதாவது பாடப்புத்தகம் இருக்கிறதா? அறிவியல் மூளையைச் சலவை செய்யவில்லை. சுத்தம் செய்கிறது'' என்றார்.

சீனாவில் உள்ள புத்த கோவில்கள் விசாலமானவை, மிக அழகானவை. அவை வழிபாட்டுத் தலங்கள் மட்டுமல்ல, பெருமளவிலான சுற்றுலா பயணிகளை ஈர்ப்பவை. அண்மையில் கட்சித் தலைவர்கள் சிலர் இந்த கோவில்களுக்கு சென்று மதாச்சாரங்களில் பங்கேற்றனர். அது சரியான நடைமுறை அல்ல.

ஏராளமான கட்சி அனுதாபிகளுக்கும், தோழர்களுக்கும் அது ஒரு நல்ல செய்தியைத் தராது. கம்யூனிஸ்டுகள் என்ற உணர்வு எழ வேண்டும். மக்களை அறிவியல் சிந்தனைக்கு பழக்கப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது.

அதுவே நமது கடமை ஆகும்.

தமிழில்: டி.எம். மூர்த்தி

---

# மவுலானா ஆசாத் கல்வி உதவித் தொகையை நிறுத்திய மோடி அரசு



கே.முருகன்

சிறுபான்மை மாணவர்களுக்கு 9 –10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மட்டுமே உதவித்தொகை என்று ஒன்றிய பா.ஜ.க. அரசு நவம்பர் 2022 ல் உத்தரவு பிறப்பித்துள்ளது. டிசம்பர் 08, 22 முதல் மவுலானா ஆசாத் ஆராய்ச்சி மாணவர் கல்வி உதவித்தொகை திட்டம் நிறுத்தப்படும் என ஒன்றிய அமைச்சர் ஸ்மிருதிராணி அறிவித்தார்.

காங்கிரஸ் உள்ளிட்ட பல உறுப்பினர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பியுள்ளனர். சிறுபான்மை மக்களுக்கு குறிப்பாக முஸ்லீம் சிறுபான்மையினருக்கு எதிராக பா.ஜ.க. ஒன்றிய அரசின் திட்டமிட்ட தாக்குதலாகவே இதை கருத முடிகின்றது.

இஸ்லாமியர்களுக்கு எதிரான வன்முறை அதிகரிப்பு காரணமாக பாதுகாப்பற்ற நிலை இருப்பதாக உணர்ந்ததோடு சமூக அரசியல் வாழ்வில் அவர்களின் பிரதிநிதித்துவம் குறைந்து வந்துள்ளது. இதன் காரணமாகவே, அம்மக்களின் நலன், சிறுபான்மையினர் நலனுக்காக திட்டமிட வேண்டியநிலை இருந்தது. இடதுசாரிகளின் ஆதரவோடு ஒன்றிய ஆட்சியில் இருந்த மன்மோகன்சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி 1 அரசு சார்பில் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி ராஜிந்தர் சச்சார் தலைமையில் சிறுபான்மை மக்களின் சமுக, பொருளாதார நிலை தொடர்பாக ஆய்வு செய்வதற்காக ஆணையம் அமைக்கப்பட்டது.

சச்சார் ஆணையம் தனது அறிக்கையை அரசிடம் 2006 ல் அளித்தது. அந்த அறிக்கையில் சிறுபான்மை முஸ்லீம்களின் நிலை கல்வி, சமுகத்திலும் பின்தங்கி உள்ளதாக சுட்டி காட்டியது. நாடு விடுதலைப்பெற்ற பிறகு கல்வி பெறும் நிலை பொதுவாக உயர்வு பெற்றுள்ள நிலையில், 17 வயதுக்கு மேற்பட்ட முஸ்லிம்களின் கல்வி பெறும் நிலை மிகவும் குறைவாக உள்ளதை அறிக்கை சுட்டிக்காட்டியது.

சச்சார் ஆணையத்தின் பரிந்துரைகளைக் கொண்டு முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள், சீக்கியர்கள், ஜெயினர்கள் புத்த மதத்தை சேர்ந்த மாணவர்களின் ஆராய்ச்சி உயர் கல்விக்கு அரசு சார்பில் கல்வி உதவித் தொகை அளிக்கப்பட்டது. புள்ளி விவரங்கள் படி கல்வி உதவித்தொகைப் பெற்ற சிறுபான்மையினரில் 1000 த்தில் 733 பேர் இஸ்லாமியர்களாக உள்ளனர்.

அதுபோலவே, முஸ்லீம் உள்ளிட்ட சிறுபான்மையின மாணவர்கள் 9– 10 ஆம் வகுப்பு படித்தவர்களுக்கு கல்வி உதவி திட்டம் 2008 ஆம் ஆண்டில் கொண்டு வரபட்டது. இந்தத்திட்டம் மேல்நிலைக் கல்வி பயின்ற முஸ்லிம் மாணவர்களுக்கு பெரிய அளவில் உதவியாக இருந்தது.

மோடி அவர்கள் குஜராத் மாநில முதல் அமைச்சராக இருந்தபோது, இந்த திட்டம் மத ரீதியில் உள்ளது. ஒன்றிய அரசு இந்த திட்டத்தை செயல் படுத்த நிர்பந்திக்க முடியாது என திட்டம் தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் தெரிவித்ததோடு, ஒன்றிய அரசின் நிதியையும் திருப்பி அனுப்பியது நினைவில் கொள்ள வேண்டியது அவசியமாகும். ஒன்றிய மோடி அரசு சமவாய்ப்பு பெறுவதற்கான சிறு உதவிகளையும் திரும்ப பெறும் நிலை என்பது முஸ்லிம் மக்களுக்கு எதிராக தொடங்கியுள்ளதாக இதன்மூலம் அறிய முடிகின்றது.

ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தை தீவிரமாக அமல்படுத்தும் மோடி அரசின் செயல் பாடுகளுக்குபல உதாரணங்களை கூறலாம். ஷாரதா அல்தாப் வழக்கில் பெண்களுக்கு எதிரான வன்முறையை லவ் ஜிகாத் என்று முன்னிறுத்தப்பட்டதும் ஸ்மிருதிராணி கல்வி அமைச்சராக இருந்த போது அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழக மாணவர்கள் மீதும், ஜாமியா இஸ்லாமியா பல்கலைக்கழக மாணவர்கள் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல், தலித் சமுகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சி மாணவர் ரோகித் வேமுலா தற்கொலை நிகழ்வையும் புரிந்து கொள்ள வேண்டும். தற்போது மவுலானா ஆசாத் பெயரிலான உயர் கல்வி மாணவர் உதவித் தொகை திட்டம் பா.ஜ.க. அரசால் நிறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்ட போது ஸ்மிருதிராணி முஸ்லிம் மாணவர்கள் கல்வி உதவித் தொகைபெற்றுவந்ததிட்டம் இதரபிற்படுத்தப் பட்ட மாணவர் கல்வி உதவித் தொகை திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாக பதில் அளித்துள்ளார். இதனால் சமவாய்ப்பு பெறுவதற்கான சிறு உதவியையும் திரும்ப பெறும் நிலைபாடா என்பதை மோடி அரசிடம் கேட்க வேண்டியுள்ளது.

சிறுபான்மை மக்கள் இத்தகைய அபாயத்தை உணர்ந்து கொண்டு குறுகிய மத அடிப்படை எண்ணங்களின் தூண்டுதலுக்கு சிதறி விடாமல் விடுதலை போராட்ட காலத்தில் செய்த பங்களிப்பு போல் தேசத்தை பாதுகாக்கவும், இடது சாரி ஜனநாயக முற்போக்கு இயக்கங்கள் பின்னால் அனிவகுக்க வேண்டும்.

தொடர்புக்கு: 76039 30397

# மக்களை ஏமாற்றி, கார்ப்பரேட் நிறுவனங்களை காப்பாற்றும் பட்ஜெட்

ஒன்றிய அரசின் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஐந்தாவது முறையாக 2023–24 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை நாடாளுமன்றத்தில் பிப். 1 அன்று தாக்கல் செய்துள்ளார்.

அடுத்த ஆண்டு (2024) நாடாளுமன்ற தேர்தலை சந்திக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு நிதிநிலை அறிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

வருமானவரி எல்லைக்குள் இருப்போர் வரிவிலக்கு பெறும் உச்சவரம்பு ஆண்டு வருமானம் ரூ. 5 லட்சமாக உயர்த்தப்படும் என எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. பழைய வரிவிதிப்பில் இருந்து புதிய வரிவிதிப்பு முறைக்கு நெட்டித் தள்ளும் வஞ்சக வலை விரிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவும், சுயசார்ப்புக்கு அடித்தளமாகவும் விளங்கி வரும் சிறு, குறு, நடுத்தரத் தொழில் துறைக்கு ரூ. 9 ஆயிரம் கோடி என்பது கடலில் கரைத்து விட்ட பெருங்காயமாகும்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

விவசாயிகள் விளை பொருட்களுக்கு குறைந்த பட்ச ஆதரவு விலை நிர்ணயிக்க சட்டபூர்வு ஏற்பாடுகள் செய்வதில் நிதிநிலை அறிக்கை கவனம் செலுத்தவில்லை. மாறாக ரூ.20 லட்சம் கோடி கடன் வழங்கப்படும் என்பது கானல் நீரை அள்ளிக் குடித்து தாகம் தீர்த்துக் கொள் என்று கூறுவதாகும்.

கட்டுமானத் துறைக்கு உதவிக் கரம் நீட்டாத நிதிநிலை அறிக்கை, கட்டுமானத் தொழிலாளர்கள் உள்ளிட்ட 93 சதவீத அமைப்புசாராத் தொழிலாளர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் நலனும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது.

மூத்த குடிமக்களின் சேமிப்புத் தொகையின் உச்சவரம்பை ரூ. 30 லட்சமாக உயர்த்தியுள்ள அதே நேரத்தில், ஆயுள் காப்பீட்டு நிறுவனம் மற்றும் பாரத ஸ்டேட் வங்கியின் முதலீட்டை பெற்றுள்ள அதானி குழும நிறுவனத்தின் கணக்கியல் மோசடி குறித்து ஒரு வார்த்தையும் கூறாமல் தனது கார்ப்ரேட் நட்புக்கு விசுவாசம் காட்டியுள்ளது.

கர்நாடக மாநிலத்திற்கு சிறப்பு நிதியாக ரூ.5 ஆயிரம் கோடிக்கும் அதிகமான நிதி வழங்கும் நிதிநிலை அறிக்கை, தமிழ்நாடு அரசு வலியுறுத்தி ஜிஎஸ்டி இழப்பீடு உட்பட மாநிலத்திற்கு வழங்க வேண்டிய தொகையை வழங்க மறந்து விட்டது. அரசியல் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு பாரபட்சம் காட்டுகிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் ஆண்டுக்கு 200 நாள் வேலை வழங்க வேண்டும், தினசரி வழங்கும் குறைந்தபட்ச ஊதியத்தை ரூ.600/ ஆக நிர்ணயித்து வழங்க வேண்டும் என வலியுறுத்தி வரும் நிலையில், அது பற்றி அமைதி காக்கும் நிதி நிலையறிக்கை 25 கோடி கிராமத் தொழிலாளர்களை வஞ் சித்துள்ளது.

நாட்டின் இருபுறமும் நீண்ட கடற்கரையும், லட்சக்கணக்கான மீனவ குடும்பங்களும், பாரம்பரியமான மீன்பிடித் தொழிலும் நடந்து வருவதை கருத்தில் கொள்ளாமல் மரபணு மாற்ற மீன் உற்பத்திக்கு மட்டுமே நிதிநிலை அறிக்கை கவனம் செலுத்தியிருப்பது மீனவர் சமூகத்திற்கு இழைக்கப்பட்ட அநீதியாகும்.

மொத்தத்தில் வாக்களித்து அதிகாரம் வழங்கிய வாக்காளர்களையும், நாட்டின் குடிமக்களையும் வழக்கம் போல ஏமாற்றியுள்ள நிதிநிலை அறிக்கை, அதிகார மையத்தில் அழுத்தம் தரும் பன்னாட்டு நிதி மூலதன சக்திகளின் கார்ப்பரேட் குழும நிறுவனங்களுக்கு ஆதரவாக பச்சை கொடி காட்டியுள்ளது என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளி யிட்டுள் அறிக்கையில் கூறியுள்ளார்.

16 ம் பக்கத் தொடர்ச்சி

இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சியின்மாவட்டச் செயலாளர் நாட்ராயன், ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் வடிவேலன் வாழ்த்துரை வழங்கினர். மாணவர் பெருமன்ற மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் வெ.நிருபன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

**தென்சென்னை:** தென் சென்னை மாவட்ட மாநாடு 27.01.2023ஆம் தேதி ஜீவா இல்லத்தில் மாவட்டச் செயலாளர் மு.முபின் தலைமையில் நடைபெற்றது.

இதில், சென்னை பல்கலைக்கழக பேராசிரியர் கி.கதிரவன், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாநில செயலாளர் எஸ்.கே. சிவா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாணவர் பெருமன்ற மாநில செயலாளர் தினேஷ் சீரங்கராஜ் சிறப்புரையாற்றினார்.

மாவட்ட தலைவராக சண்முகபி ரியன், மாவட்ட துணைத் தலைவர்களாக சிகாசமரன், மாவீரன், மாவட்டச் செயலாளராக ஆ.மணிகண்டன், மாவட்ட துணைச் செயலாளர்களாக வி.வினோதா, அபிஷேக், பொருளாளராக வி.சுவேதா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**கோவை:** கோவை மாவட்ட பேரவைக் கூட்டம் 26.01.2023 அன்று காட்டூர் தியாகிகள் நிலையத்தில் மாவட்டத் தலைவர் கே.ஜி.பவன்குமார் தலைமையில் நடைபெற்றது. மாநில துணைச் செயலாளர் ச.பூர்ணிமா நந்தினி துவக்கவுரையாற்றினார்.

மாணவர் பெருமன்ற முன்னாள் மாநில செயலாளர் ப.பா.ரமணி, இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் வே.வசந்தகுமார் வாழ்த்துரை வழங்கினர். மாநாட்டில், மாவட்டத் தலைவராக கிருஷ்ணகேசவன், செயலாளராக பிரசாந்த், பொருளாளராக கல்பனா, துணைத் தலைவர்களாக சினேகா, பிரவீன், துணைச் செயலாளராக ரோகித் தேர்வு செய்யப்பட்டனர்.

இதில், மாநில தலைவர் மௌ.குணசேகர், மாநிலக் குழு உறுப்பினர்கள் பா.தீபிகா, பிரசாத் கலந்துகொண்டனர். மாநாட்டில், பொள்ளாச்சி பாலியல் வன்முறை வழக்கினை விரைந்து விசாரித்து நீதி வழங்க வேண்டும், கோவையில் புதிய அரசு மாணவர் விடுதிகளை அமைக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தருமபுரி:** தருமபுரி மாவட்ட பேரவை கூட்டம் 29.01.2023ஆம் தேதி மாணவர் பெருமன்ற மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது. எஸ்.கௌதம் வரவேற்றுப் பேசினார். நிர்வாகிகள் பி.பாஸ்கர், கே.கவியரசு, ஜெ.வி.சண்முகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில துணை செயலாளர் ச.பூர்ணிமாநந்தினி மாணவர் பெருமன்ற கொடி ஏற்றி, மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். மாநில துணைத் தலைவர் பா.தினேஷ் சிறப்புரையாற்றினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.தேவராசன், மாவட்ட துணைச் செயலாளர் கா.சி.தமிழ்க்குமரன், ஏஐடியூசி மாவட்டப் பொதுச் செயலாளர் கே.மணி வாழ்த்துரை வழங்கினர். கட்சியின் மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம் நிறைவு செய்து பேசினார்.

இதில், 21 பேர் கொண்ட மாவட்டக் குழு தேர்வு செய்யப்பட்டது. மாவட்டத் தலைவராக வழக்கறிஞர் எஸ்.வெங்கடேசன், துணைத்தலைவராக ஜெயபிரகாஷ், செயலாளராக எஸ்.கௌதம், துணைச் செயலாளர்களாக விமல்குமார், ஜீவா, பொருளாளராக சசிகுமார் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**திருப்பூர் புறநகர்:** திருப்பூர் புறநகர் மாவட்ட அமைப்பு மாநாடு 29.01.2023 திருமுருகன் பூண்டி நகர கமிட்டிக்கு உட்பட்ட அம்மாபாளையம் பகுதியில் நடைபெற்றது. மாநாட்டின் கொடியை எல்.ஜனனி ஏற்றினார். பி.சுபாஷ், எல்.ஜனனி தலைமை தாங்கினர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் கே.எம்.இசாக், ஏஐடியுசி மாவட்டத் தலைவர் எம்.மோகன், கலை இலக்கிய பெருமன்றத்தின் ஆர்.ஷாஜகான், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் எஸ்.தெய்வசிகாமணி, கட்சியின் திருமுருகன்பூண்டி நகர செயலாளர் பி.ராமசாமி, துணைச் செயலாளர் பி.பொன்னுச்சாமி உள்ளிட்டோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

மாணவர் பெருமன்ற மாநில செயலாளர் தினேஷ் சீரங்கராஜ் மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். மாநாட்டில் 17 பேர் கொண்ட மாவட்டக் குழு தேர்வு செய்ப்பட்டது. மேலும், மாவட்டத் தலைவராக கே.ஜெகதீஸ், துணைத் தலைவர்களாக என்.சரண்யா, எஸ்.கோபிநாத், கே.பிரவீன், செயலாளராக பி.சுபாஷ், துணைச் செயலாளர்களாக எல்.ஜனனி, ஆர்.மதன்குமார், எம்.நவீன், பொருளாளராக ஜெ.பவித்ரா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**மதுரை மாநகர்:** மதுரை மாநகர் மாவட்டப் பேரவை 29.01.2023 மதுரை பஞ்சாலை சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன், மாதர் சம்மேளன மாவட்டச் செயலாளர் இராஜலட்சுமி, இளைஞர் பெருமன்ற மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் பழனி முருகன், புறநகர் மாவட்டச் செயலாளர் கா.கிரிஸ்பாக்கியம், மாணவர் பெருமன்ற மதுரை புறநகர் மாவட்ட செயலாளர் விக்ரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இளைஞர் பெருமன்ற மாநில துணைச் செயலாளர் இரா. தமிழ் பெருமாள் சிறப்புரையாற்றினார்.

இப்பேரவையில், 11 பேர் கொண்ட மாவட்டக்குழு தேர்வு செய்யப்பட்டது. மாவட்டத் தலைவராக காயத்ரி, செயலாளராக அஜித்குமார், பொருளாளராக ரித்திகா, துணைத் தலைவராக முகேஷ், துணைச் செயலாளராக சங்கரி தேர்வு செய்யப்பட்டனர்.

**திருவள்ளூர்:** திருவள்ளூர் மாவட்டப் பேரவைக் கூட்டம் 26.01.2023ஆம் தேதி நடைபெற்றது. மாணவர் பெருமன்றக் கொடியினை மாநில துணைத் தலைவர் வழக்கறிஞர் பிரகாஷ் ஏற்றிவைத்து சிறப்புரையாற்றினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் கே. கஜேந்திரன் துவக்க உரையாற்றினார்.

ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் வி.சரவணன், விவசாய சங்க மாவட்டத் தலைவர் என்.ஜீவா, இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் பி.வி.செந்தில், துணைச் செயலாளர் ஹெச்.பிரபு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இப்பேரவையில், 11 உறுப்பினர்களைக் கொண்ட புதிய மாவட்ட குழு தேர்வு செய்யப்பட்டது. மாவட்ட தலைவராக எல்.நிஷாந்தினி, துணைத் தலைவர்களாக பி.பிரியதர்ஷினி, என்.சமநீதி, மாவட்டச் செயலாளராக ஆர்.கோபிநாத், துணை செயலாளர்களாக என்.ஹரிஷ், ஜி.தெரசா, பொருளாளராக எஸ்.அருண் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பிரதாப் சந்திரன் நிறைவுறையாற்றினார்.

**விழுப்புரம்:** விழுப்புரம் மாவட்டப் பேரவைக் கூட்டம் 28012023 அன்று திவ்ய. பிராங்ளின் தலைமையில் நடைபெற்றது. மாணவர் பெருமன்ற புதுச்சேரி மாநில செயலாளர் முரளி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில், மாவட்டத் தலைவராக ஆ.ஆர்த்தி, செயலாளராக ப.ஆகாஷ், மாவட்டத் துணைத் தலைவராக பிரியதர்ஷினி, மாவட்டத் துணைச் செயலாளராக பெலிக்ஸ் ஆகியோர் தேர்வு செய்யபட்டனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் விழுப்புர மாவட்டச் செயலாளர் ஆ.சௌரிராஜன் நிறைவுரையாற்றினார்.

**திருவண்ணாமலை:** திருவண்ணாமலை மாவட்டப் பேரவைக் கூட்டம் தமிழ் தலைமையில் நடைபெற்றது. பிலிப் ராஜ் வரவேற்றுப் பேசினார். கட்சியின் மாவட்டச் செயலாளர் இரா.தங்கராஜ், முன்னாள் மாவட்டச் செயலாளர் வே.முத்தையன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதில், மாவட்ட ஒருங்கிணைப்பாளராக ஆகாஷ்ராஜ் தேர்வு செய்யப்பட்டார். தீபக் நன்றி கூறினார்.

**நாகப்பட்டினம்:** நாகப்பட்டினம் மாவட்ட மாவட்ட பேரவை ஜன.28 அன்று நடைபெற்றது. மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் மருத்துவர் ச.சுதந்திரபாரதி துவக்கவுரையாற்றினார். சிபிஐ மாவட்டச் செயலாளர் சிவகுருபாண்டியன், துணைச் செயலாளர் செல்வம், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் மாரி கார்த்திகேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். 11 பேர் கொண்ட மாவட்டக்குழு தேர்வு செய்யப்பட்டது.

மாவடத் தலைவராக எஸ்.காளிதாஸ், துணைத் தலைவர்களாக பா.அக்ஷ்யா, கே.ராகேஷ், மாவட்டச் செயலாளராக ஆர்.தீபக், துணைச் செயலாளர்களாக சி.வைஷ்ணவி, த.வீரமணி, மாவட்டப் பொருளாளராக ஏ.எஸ்.ஜெகதீஸ்வரன் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

## முக்கிய அறிவிப்பு

ஜனசக்திக்கு கட்டுரை எழுதுவோர் படம் உள்ளிட்டு முக்கால் பக்கத்திற்குள் எழுத வேண்டுகிறோம், டைப்பிங் செய்து word fileலில் unicode fontல் அனுப்பவும்.

வாட்ஸ் அப்பில் செய்திகள், படங்கள் அனுப்பக் கூடாது. புகைப்படங்கள் தெளிவாக இருக்க வேண்டும். ஜனசக்தி இ.மெயிலில் மட்டும் அனுப்ப வேண்டும். நோட்டீஸ், மனுக்களை அப்படியே அனுப்பக் கூடாது. சுருக்கி செய்தியாக்கி அனுப்ப வேண்டும்.

ஜனசக்தி உள்ளடக்கம் சம்பந்தமாகத் தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி:

**டி.எம்.மூர்த்தி - 9444360869, த.லெனின் - 94444 81703**

இயக்கச் செய்திகள் சம்பந்தமாகத் தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி:

**ஜெ.முருகேசன் - 78456 93142**


ஜனசக்தி விநியோகம் சம்பந்தமாக தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி:

**கே.கணேசன் - 9444331138**

ஜனசக்தி வரவு கணக்குச் சம்பந்தமாகத் தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி:

**இளசை கணேசன் 82204688**16

ஆசிரியர் குழு, ஜனசக்தி



தி.இராமசாமி

# தாயில்லாமல் தொண்டர்கள் மாற்றாந்தாய் தேடும் தலைவர்கள்

**தமிழ்நாட்டில் அ.இ.அ.தி.மு.க. மக்கள் செல்வாக்கு படைத்த எதிர்க்கட்சி. 1972ல் தொடங்கப்பட்டு 1977ல் ஆட்சிக்கு வந்தது. இடையில் திண்டுக்கல் இடைத்தேர்தலை சந்தித்தது. கம்யூனிஸ்ட்கள் உடன் இருந்தோம்; வழி நடத்தினோம். இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்டு அ.இ.அ.தி.மு.க. ஆளுங்கட்சியை எதிர்த்து கூட்டணி கட்சியின் ஆதரவுடன் வெற்றி பெற்றது. இரட்டை இலை சின்னம் அந்த கட்சிக்கு வெற்றி சின்னமானது.**

1977 ஆட்சியைப் பிடித்த அ.இ.அ.தி.மு.க. எம்.ஜி.ஆர். தலைமையில் 1989 வரை ஆட்சியில் இருந்தது. எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு அந்த கட்சியில் அதிகார போட்டி ஏற்பட்டது. 1989 தேர்தலில் இரண்டு அணிகளாக போட்டி யிட்டனர். இரட்டை இலை சின்னம் முடக்கப்பட்டது. ஜெயலலிதாவுக்கு சேவல் சின்னமும் ஜானகிக்கு புறா சின்னமும் கிடைத்தது. பெரிய தலைவர்கள் ஜானகியை ஆதரித்தார்கள். இளம் தலைவர்கள் ஜெயலலிதாவை ஆதரித்தார்கள். ஜெயலலிதா ஒரு தலைமையாக உருவாவதற்கு கம்யூனிஸ்ட் கட்சி உதவியாக இருந்தது.

ஜெயலலிதா பா.ஜ.க.வுடன் சேர்ந்து போட்டியிட்டார். பாராளுமன்ற தேர்தலில் சில வெற்றிகளை பெற்றார். வாஜ்பாய் பிரதமராக வருவதற்கு ஆதரவு கொடுத்த நபர், பின்பு வாஜ்பாய் ஆட்சியை கவிழ்த்தார்.

அதன் பின்பு மாநில உரிமைகளை முதன்மையாக வைத்து செயல்பட்டார். ஒன்றிய அரசின் மூலம் மாநில உரிமைகளுக்கு நெருக்கடி ஏற்படும் போதெல்லாம் அதை எதிர்த்து நின்றார். மோடியா? லேடியா? என்று சவால் விட்டு அ.இ.அ.தி.மு.க. தொண்டர்களை பா.ஜ.க. எதிர்ப்பில் கூர்மைப்படுத்தி வந்தார்.

மாநிலங்களுக்கு விரோதமான திட்டங்களான உணவுப் பாதுகாப்பு சட்டம், உதய்மின்திட்டம், சரக்கு சேவை வரி போன்றவைகளை கடுமையாக எதிர்த்து வந்தார்.

ஜெயலலிதா உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனைக்கு சென்றார். சிகிச்சையில் சில மாதங்கள் மருத்துவமனையில் இருந்தார். தற்காலிக முதல்வராக ஓ.பி.எஸ். இருந்தார். அந்த கால கட்டத்தில்



மாநில உரிமைகளை பறிக்கும் திட்டங்களில் எதிர்த்து கையெழுத்து போட மறுத்த திட்டங்களில் அ.தி.மு.க. அமைச்சர்கள் கையெழுத்து போட தொடங்கினர்.

மருத்துவமனையில் உணர்வுற்ற நிலையில் ஜெயலலிதா இருக்கும்போது, அவரது கொள்கைகளை காற்றில் பறக்க விட தொடங்கினர். இந்த நேரத்தை பயன்படுத்தி பா.ஜ.க. அ.தி.மு.க.வை தனது அடிமையாக மாற்ற முயற்சித்தது. ஜெயலலிதா மறைவுக்கு பின்பு பா.ஜ.க. கட்டளைக்கு அ.இ.அ.தி.மு.க தலைவர்கள் முழுமையாக அடிபணியத் தொடங்கி விட்டார்கள். அடிபணிந்ததின் காரணமாக அ.இ.அ.தி.மு.க. வை பல குழுக்களாக உடைத்து விட்டனர். பல குழுக்களாக உடைந்ததால் இரட்டை இலை மீண்டும் முடக்கப்பட்டது. உள்ளாட்சி தேர்தலில் இழந்தை மீட்க முடியவில்லை.

இ.பி.எஸ். தலைமையில் அ.இ.அ.தி.மு.க வினர் ஒன்றிணையை முயற்றித்தாலும் ஓ.பி.எஸ். ஐ பயன்படுத்தி அச்சுறுத்துகின்ற வேலையை பா.ஜ.க. செய்து வருகிறது. இரண்டு அணிகளும் தற்போது நடைபெற உள்ள ஈரோடு இடைத்தேர்தலில் போட்டி என்று அறிவித்துள்ளனர். நீதிமன்ற வழக்கும் விரைவாக முடிவுக்கு வர இருக்கிறது. மீண்டும் இரட்டை இலை பெரிய குழுவுக்கு கிடைத்தாலும் கிடைக்கலாம். இரட்டை இலை கிடைத்தாலும் பா .ஜ.க.வுடன் இரட்டை இலை கிடைத்தவர்கள் இசைவாக சென்றால் அந்த கட்சிக்கு தலைமையாக பா.ஜ.க. தான் இருக்கும். அ.இ.அ.தி.மு.க நிலை புலி வாலை பிடித்த கதையாகிவிட்டது. பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்ற நிலை ஏற்பட்டதால் மீண்டும் எம்.ஜி.ஆர். சின்னம் இரட்டை இலையை தொடர்ந்து பாதுகாக்க வேண்டுமானால் பா.ஜ .க. உறவை துண்டிக்க வேண்டும்.

தாயை இழந்த தொண்டர்களுக்கு தாயாக இருக்க வேண்டிய தலைவர்கள் பா.ஜ.க. என்ற மாற்றந்தாயை தேடுகிறார்கள். மாற்றந்தாயிடம் தாயின் அரவணைப்பை எதிர்ப்பார்க்க முடியுமா? தொண்டர்களே சிந்திப்பீர்!

புரட்சிதலைவர் எம்.ஜி.ஆர். 1972ல் கட்சியை தொடங்கும் போது ஏழை, எளிய மக்கள், சாதாரணமானவர்கள் பெருமளவில் ஆதரித்தனர். கட்சியின் கொள்கை என்னவென்று அவரிடம் கேட்டார்கள். அதற்கு அவர் அண்ணாயிசம் என்று கூறினார். அண்ணாயிசம் என்றால் கேப்டலிசம் + சோசலிசம் + அண்ணாயிசம் என்ற பதில் வந்தது.

அண்ணாயிசத்தில் சொல்லப்பட்ட கேப்டலிசம் தான் அந்த கட்சியில் இன்று வரை பின்பற்றப்படுகிறது. அதனால் தான் கட்சியை நம்பிய தொண்டர்கள் வயிற்றில் அடிக்கப்படுகிறார்கள். தலைமையில் இருந்தவர்கள், அமைச்சர்கள் கொள்ளையடித்து வயிற்றை நிரப்பி கொண்டிருந்தனர். இன்னும் ஒரு பகுதியான சோலிசம் என்பது வார்த்தையுடன் நின்று விட்டது. அதை நோக்கி செயல்பட அ.இ.அ.தி.மு.க இன்னும் தயாராகவில்லை.

சோசலிசத்தை நோக்கி செயல்படுகின்ற கட்சியாக கம்யூனிஸ்ட் கட்சி தான் உள்ளது. எனவே அண்ணா யிசத்தின் ஒரு பகுதியான சோசலித்தை அடைய தொண்டர்கள், அந்த கட்சியை நம்பும் ஏழைகள் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைய வேண்டும். அ.இ.அ.தி.மு.க. தொடங்கப்பட்டதின் நோக்கம் நிறைவேற வேண்டும் எனில் கேப்டலிசத்தை மட்டும் தனக்காக பயன்படுத்தி கொண்ட தலைவர்கள் தூக்கி எறியப்பட வேண்டும்.

தொண்டர்களே சிந்திப்பீர்!

---



என்.எஸ்.பிரதாப் சந்திரன்

# இடைத் தேர்தல்: திண்டாடும் அ.தி.மு.க.!

**ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக இருந்த ஈ.வெ.ரா.திருமகன் திடீரென உடல்நலக்குறைவால் மரணமடைந்ததை ஒட்டி இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டை ஆளும் திமுக தலைமையிலான கூட்டணி தனது வேட்பாளராக காங்கிரஸ் கட்சியின் முன்னணி தலைவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனை அறிவித்து தேர்தல் பிரச்சார வேலைகளை தொடங்கி மக்களை சந்தித்து வருகிறது.**

இடைத்தேர்தல் என்றாலே வாக்காளர்களுக்கு குதூகலமும், கொண்டாட்டமும்தான். ஆனால், தமிழகத்தின் எதிர்க்கட்சியின் நிலைதான் பெரும் திண்டாட்டமாக உள்ளது.

இடைத்தேர்தல் என்பதால் தமிழக எதிர்க்கட்சிகள் போட்டியிட தயங்குகின்றன என்றால் கூட நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

ஆனால், தாங்கள் போட்டியிடுகிறோமா? எந்த கட்சியின் சார்பில் போட்டியிடுகிறோம்? எந்த சின்னத்தில் போட்டியிடுகிறோம்? போட்டியிட்டால் தமது கட்சியின் பெயரும், கொடியும், சின்னமும் நமக்கு கிடைக்குமா? அல்லது போட்டியிட்டால் இவை எல்லாம் பறிபோய்விடுமா? என பிரதான எதிர்க்கட்சியான எடப்பாடி தலைமை யிலான அதிமுக வே குழம்பிப்போய் உள்ளது.

எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கு தலைமை தாங்கும் அதிமுக வை தேடித்தான் இதுவரை கூட்டணிக் கட்சிகள் சென்ற காலம் போய், கூட்டணி கட்சிகளை தேடி அதுவும், லெட்டர் பேட் கட்சிகளை கூட தேடிப்போகும் அவல நிலைக்கு இன்று அதிமுக தள்ளப்பட்டுள்ளது.

“காணும் திசையெங்கும் எதிர்க்கட்சிகளே இல்லை” என ஆணவத்தோடு கொக்கரித்த அதிமுகவின் நிரந்தரப் பொதுச் செயலாளர் ஜெயலலிதாவின் அதிமுகவுக்கு தான் இன்று இந்த நிலை.

தமது கட்சியின் நிரந்தப் பொதுச் செயலாளர் மட்டுமல்ல, தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் ஜெயலலிதா என்று அதிமுக வினர் தம்பட்டம் அடித்தனர். இன்று கட்சியின் கொடியும், சின்னமும் பெயரும் நிரந்தரமாக இருக்குமா? என்பது கேள்விக் குறி. மோடியின் கடைக்கண் பார்வைதான் இதனை முடிவு செய்யும் என்ற நிலை தேவைதானா? என்பதை அதிமுகவினர் சிந்திக்க வேண்டும்.

தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளையும், நலன்களையும் மத்திய அரசிடம் காவு கொடுத்து விட்டு பதவியில் தொடர்ந்தால் மட்டும்போதும் என்ற அதிமுக தலைவர்களின் அரசியல் தவறால் நேர்ந்த விபரீதம் இது.

மீனை உண்டு வாழும் மீனை போல தனது கூட்டணி கட்சிகளையே உண்டு கொழுத்து வாழும் கட்சிதான் பா.ஜ.க. பீகாரில் ராம்விலாஸ் பஸ்வானின் கட்சி இவர்களால் புஸ்வானமானது. மகாராஷ்டிராவில் தாக்கரே கட்சியை தவிடுபொடியாக்கி விட்டார்கள். பஞ் சாபில் சிரோன்மணி அகாலிதளம் அதள பாதாளத்திற்கு போனது. காஷ்மீரின் முக்தியின் மக்கள் ஜனநாயக கட்சிக்கும் மங்களம் பாடப்பட்டது. இவ்வளவு பால பாடங்கள் இருந்தும் அதிமுக பாடம் கற்றுக் கொள்ளவில்லை.

பேரறிஞர் அண்ணாவால் சூட்டப்பட்ட தமிழ்நாடு என்கிற பெயரை ஆர்.எஸ். எஸ். ஆளுநர் மாற்றத் துடிக்கிறபோது கூட அண்ணா பெயரால் கட்சி நடத்துகிறவர்களுக்கு ஆத்திரம் வராமல் போனதன் மர்மம் என்ன?

சட்டமன்றத்தில் அண்ணா, காமராஜர், அம்பேத்கர் பெயர்களை ஆளுநர் உச்சரிக்க மறுத்தபோது அமைதி காத்ததன் நோக்கம் என்ன?

திராவிட மாடல் என்பது, தி.மு.க.விற்கும் மட்டும் சொந்தமானதா? திராவிட மாடலுக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் சம்மந்தம் இல்லையா? இவர்கள் கட்சியின் மூலவர்களான அண்ணாவும், எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் நட்தியது திராவிட மாடல் ஆட்சி இல்லையாம். முன்னாள் இரட்டையர்களான ஓ.பி.எஸ். – இ.பி.எஸ். நடத்தியது ஆரிய மாடல் ஆட்சியா? என்கிற கேள்வி சாதாரண மக்கள் மனதில் எழுதுகிறது.

திராவிட மாடல் என்பது ஆளுநருக்கு வேம்பாய் கசப்பது நமக்கு புரிகிறது. அது அதிமுக தலைவர்களுக்குமா? கசக்கிறது.

தமிழகத்தில் லேடியின் முன் நிற்க முடியாமல் படுதோல்வி அடைந்த மோடியை அதிமுகவின் இரட்டையர்கள் தூக்கி சுமப்பது ஏன்? இவர்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள மதவெறி கூட்டத்தை தூக்கி சுமக்கலாம்! தமிழ்நாட்டு மக்கள் ஏன் சுமக்க வேண்டும்? சுமக்க வேண்டிய தேவை இல்லை. இதுதான் அதிமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் வீழ்ச்சிக்கு காரணம்.

தமிழகத்தில் அதிமுக வடிவத்தில் அல்ல. எந்த வடிவத்தில் மதவாத சக்திகள் வந்தாலும், தமிழ்நாடு தோற்கடிக்கும் என்பதை புரிந்து கொண்டதால்தான் அண்ணாமலை, “இந்த இடைத்தேர்தல் ஒன்றும் பா.ஜ.க.வுக்கு கட்டாயமான தேர்தல் அல்ல” என நழுவி ஓடுகிறார்.

அண்ணாமலைக்கு தெரிந்தது கூட அண்ணா பெயரால் கட்சி நடத்துகிறவர்களுக்கு தெரியவில்லை அய்யோ பாவம்!

தொடர்புக்கு: 9382679798

# 2023ஆம் ஆண்டுக்கான ஜனசக்தி, தாமரை சந்தா சேர்ப்பு இயக்கம்

## இரா.முத்தரசன் துவக்கி வைத்தார்



நாட்டின் 74 ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்று திருத்துறைப்பூண்டி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம்,பி.எஸ்.ஆர். இல்லத்தில் 2023 ஆம் ஆண்டுக்கான ஜனசக்தி, தாமரை சந்தா சேர்ப்பு இயக்கம் மற்றும் அதன் பொறுப்பாளர்கள் கூட்டம், ஜனசக்தி பொறுப்பாளர் அ.குமரேசன் தலைமையில் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் கலந்துகொண்டு ஜனசக்தி, தாமரை பத்திரிக்கைகள் முக்கியத்துவம் பற்றி பேசினார்.

மாநிலம் முழுவதும் இந்த சந்தா சேர்ப்பு இயக்கம் துவக்கப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் 5000 ஆண்டு சந்தாக்களும், திருத்துறைப்பூண்டியில் 100 ஆயுள் சந்தாக்களும் பதிவு செய்வது என முடிவு செய்யப்பட்டது.

கட்சியின் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் கோ. பழனிசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., மாநிலக் குழு உறுப்பினர்கள் கே.உலகநாதன் எக்ஸ்.எம்எம்.எல்.ஏ., அ.பாஸ்கர் ஊ.ஒ.பெருந்தலைவர், பி.வி.சந்திரராமன் மாவ.நி. குழு, கே.ஆர்.ஜோசப் மாவட்ட ஜனசக்தி பொறுப்பாளர், வி.ஜவஹர் ஒன்றிய செயலாளர் மற்றும் கலை இலக்கிய பெருமன்ற பொறுப்பாளர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# விருது பெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாமன்ற உறுப்பினருக்கு பாராட்டு



கோயமுத்தூர் மாநகராட்சியில் தேர்வு பெற்றுள்ள 100 மாமன்ற உறுப்பினர்களில் சிறப்பாக பணியாற்றி வரும் 10 மாமன்ற உறுப்பினர்களை தேர்வு செய்து, அவர்களுக்கு மாமன்ற நிர்வாகத்தின் சார்பில் குடியரசு தின விழா நிகழ்ச்சியில் விருதுகள் வழங்கி பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டது.

இந்த பத்து மாமன்ற உறுப்பினர்களில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 48 வது வார்டு உறுப்பினர் பிரபா ரவீந்திரனும் ஒருவர்.

சிறந்த மாமன்ற உறுப்பினர் என்ற பெருமை பெற்ற பிரபா ரவீந்திரனை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொருளாளர் எம். ஆறுமுகம் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் சி. சிவசாமி, மாவட்ட துணை செயலாளர் ஜெ.ஜேம்ஸ், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் கே.எம். செல்வராஜ், ரவீந்திரன் சாந்தி சந்திரன், வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன், மற்றும் கே.சுப்பிரமணியம், ஏ.அஷ்ரப்அலி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### தேங்காய் எண்ணெய் விற்பனையை

# அனைத்து பொது விநியோக அங்காடிகளிலும் விரிவுபடுத்திடுக

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

பரீட்ச்சார்த்தமாக சமையல் பயன்பாட்டிற்கு பொது விநியோக அங்காடிகளில் தேங்காய் எண்ணெயை வழங்க உள்ளதாக தமிழக அரசின் கூட்டுறவுத்துறை அமைச்சர் அறிவித்திருப்பதை வரவேற்கிறோம். அமைச்சர் கூறியது போல், கேரளாவில் சமையல் உள்ளிட்ட வாழ்வியல் பிற தேவைகளுக்கு தேங்காய் எண்ணெயை மிகுதியாக பயன்படுத்தி வருகின்றார்கள் என்பது சரியானது. இதனால் எந்தவித உடல்பாதிப்பும் அங்கு இல்லை என்பது அனுபவ உண்மை. எனவே தமிழ்நாட்டில் இதை விழிப்புணர்வு இயக்கமாக நடத்தி காலப்போக்கில் மற்ற சமையல் எண்ணெய் விற்பனையை நிறுத்தி, தேங்காய் எண்ணெய் பயன்பாட்டை கூடுதலாக்கிட வேண்டும். மேலும் சத்துணவு கூடங்கள், அரசின் விடுதிகளிலும் பயன்படுத்திட நடவடிக்கை எடுத்திடவேண்டும் என்று தமிழக அரசை கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு ஆறிக்கையில் கூறியுள்ளார்.

# விவசாய விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை சட்ட உத்திரவாதம் வழங்கிடுக

## ஐக்கிய விவசாயிகள் முன்னணி டிராக்டர் பேரணி!



விவசாயிகளின் விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயம் செய்யும் சட்டத்தை வலியுறுத்தி நாடு முழுவதும் ஜன.26 அன்று மாவட்ட தலைநகரங்களில் டிராக்டர் பேரணிக்கு ஐக்கிய விவசாய முன்னணி சங்கம் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டது.

விலை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம், மின்சார சட்ட திருத்த மசோதாவை ரத்து செய்ய வேண்டும், டெல்லி போராட்டத்தில் உயிர் நீத்த 714 விவசாயிகளுக்கு நினைவிடம் அமைத்திட வேண்டும், போராட்டத்தின் போது இறந்த விவசாயிகளின் குடும்பத்திற்கு இழப்பீடு வழங்க வேண்டும், டெல்லி விவசாயிகள் போராட்டத்தின் மீதும், நாடு முழுவதும் விவசாயிகள் மீதும் போடப்பட்ட வழக்குகளை திரும்பப் பெற வேண்டும், ஒன்றிய அரசு எழுத்து பூர்வமாக எழுதிக் கொடுத்த உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும், உத்திர பிரதேசம் லக்கி பூர் கேரி விவசாயிகள் படுகொலைக்கு காரணமான ஒன்றிய இணை அமைச்சர் அஜய் மிஸ்ரா தேனியை பதவி நீக்கம் செய்ய வேண்டும், 60 வயதை பூர்த்தி செய்த அனைத்து விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் மாதம் ரூ.6000 ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

**திருவாரூர்:** திருவாரூர் புதிய பேருந்து நிலையத்திலிருந்து ரயில் நிலையம் வரை நடைபெற்ற டிராக்டர் பேரணிக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி தலைமை வகித்தார். விவசாய சங்க மாநில பொதுச் செயலாளர் சாமி நடராஜன் (மார்க்சிஸ்ட்) முன்னிலை வகித்தார். நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் வை.செல்வராஜ் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டத்தில் அனைத்து விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பில் வத்திராயிருப்பில் முத்தாளம்மன் திடலில் டிராக்டர் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தவிச மாவட்ட செயலாளர் சௌந்திரபாண்டியன் தலைமை வகித்தார். சிபிஐ தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, சிபிஎம் மாவட்ட செயலாளர் அர்ச்சுனன், தென்னை விவசாயிகள் சங்க முத்தையா, சிபிஎம் விச விஜயமுருகன்,பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, எஸ்.பழனிக்குமார், கோவிந்தன் உள்பட ஏராளமனோர் கலந்து கொண்டனர். விருதுநகர் அண்ணா சிலை அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தவிச முருகன் தலைமை வகித்தார். ஏஐடியுசி தமிழ்நாடு மீனவர் சங்க மாநில பொதுச்செயலாளர் சின்னதம்பி தொடங்கி வைத்துப் பேசினார். வாவிச காளிராஜ், சிபிஐ பாலமுருகன், சக்கணன், செல்வம்,சுவாமிநாதன், முனியசாமி, முத்துக்குமார், மாதர் சங்க மாரீஸ்வரி, சுப்பாராஜ் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் மணிமண்டபம் அருகே துவங்கிய பேரணிக்கு ஐக்கிய விவசாயிகள் முன்னணி தஞ்சை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் என். வி.கண்ணன் தலைமை வகித்தார். தமிழ்நாடு விவசாய சங்கத்தின் மாநில துணைத்தலைவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டெல்லி பாபு பேரணியை துவக்கி வைத்தார்.

பேரணியில் விவசாய சங்க நிர்வாகிகள் வீரமோகன், பழனிராஜன், திருநாவுக்கரசு உள்ளிட்டார் முன்னிலை வகித்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி, சிபிஎம் மாவட்ட செயலாளர் சின்னைபாண்டியன், தி.க.பொதுச்செயலாளர் ஜெயக்குமார், விசிக மாவட்ட செயலாளர் சொக்காரவி உள்ளிட்டோர் பங்கேற்றனர். விவசாயிகள் பேரணி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்னதாக மேலவஸ்தாசாவடி ரவுண்டானா அருகில் காவல் துறையால் தடுத்து நிறுத்தப்பட்டது. அங்கு கோரிக்கைகளை விளக்கி விவசாய சங்க நிர்வாகிகள் பேசினர்.

**திருவள்ளூர்:** திருவள்ளூர் தேரடியில் இருந்து துவங்கிய பேரணி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முடிவடைந்தது. ஐக்கிய விவசாயிகள் முன்னணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெ.அருள், வி.ச.மாவட்டத் தலைவர் ஜி.சம்பத், ம.சி.சுரேஷ்குமார் ஆகியோர் தலைமை தாங்கினார். டிராக்டர் பேரணியை பி.துளசி நாராயணன் தொடங்கி வைத்தார். இதில் தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பிரதாப் சந்திரன், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் பி.வி.செந்தில், கட்சியின் திருவள்ளூர் நகரச் செயலாளர் டி.லோகநாதன், விவசாய சங்கத் தலைவர் என்.ஜீவா, கே.ஆறுமுகம் ஆகியோர் பங்கேற்றனர்.

**மதுரை:** மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் ஐக்கிய விவசாயிகள் முன்னணி மாவட்ட ஒருங்கிணைப்பு குழு சார்பில் நடைபெற்ற டிராக்டர் பேரணிக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சந்தனம் தலைமை தாங்கினார். தமிழ்த் தேச மக்கள் முன்னணியின் தலைவர் மீ.த.பாண்டியன், தமிழ்நாடு விவசாய சங்கத்தின் தலைவர்களின் ஒருவரான ரவிவர்மா, ஏஐடியுசி செயலாளர் சேது, சிபிஐ புறநகர் மாவட்ட செயலாளர் முத்துவேல், கரும்பு விவசாயிகளின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நாகஜோதி உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர். டிராக்டர்கள் பேரணியாக திருமங்கலம் சந்தைப்பேட்டையிலிருந்து புறப்பட்டது.

**காஞ்சிபுரம்:** ஐக்கிய விவசாயிகள் சங்கம் கூட்டமைப்பு சார்பில் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற பேரணிக்கு கே.நேரு தலைமை தாங்கினார். பத்துக்கும் மேற்பட்ட டிராக்டர்கள், 100க்கும் மேற்பட்ட ஸ்கூட்டர் ஊர்வலமாக சென்று ரங்கசாமி குளம் அருகில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஏ.மூர்த்தி, விவசாயிகள் கூட்டமைப்பு மாநில ஒருங்கிணைப்பாளர் பெ.சண்முகம் உள்ளிட்டோர் பேசினர்.

**கள்ளக்குறிச்சி:** கள்ளக்குறிச்சியில் ஐக்கிய விவசாயிகள் முன்னணி சார்பில் நடைபெற்ற பேரணிக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஏ.வி.ஸ்டாலின்மணி தலைமை தாங்கினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் ஆர். ராமசாமி பேரணியை தொடங்கி வைத்து பேசினார். கள்ளக்குறிச்சி ஏ.கே.டி. தனியார் பள்ளி திடலில் இருந்து பேரணி புறப்பட்டு முக்கிய வீதிகள் வழியாக கலெக்டர் அலுவலகம் வந்தடைந்தது. இதில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் டி.ஏழுமலை, மாவட்ட பொருளாளர் எம்.சி.ஆறுமுகம், மாவட்ட துணை தலைவர்கள் ஏ.அய்யனார், வி.நாகராஜன், பி.மணி, மாவட்ட துணை செயலாளர் எம்.வி.ஏழுமலை, வட்டசெயலாளர்கள் பி.தெய்வீகன், ஏ.செல்லமுத்து, முனியன், விவசாயிகள் சங்க மாவட்ட அமைப்பாளர் ஏ.சுப்பிரமணி மாவட்ட துணை அமைப்பாளர் கலியபெருமாள் உள்ளிட்ட ஐக்கிய விவசாயிகள் முன்னணியினர் கலந்து கொண்டனர்.



அடிமைசாசனம் கேட்கும் ஒப்பந்ததாரர்!

# தொழிலாளர்கள் காலவரையற்ற உண்ணாவிரதம்!

## தமிழ்நாடு அரசு தலையிட்டு தீர்வு காண ஏஐடியுசி வலியுறுத்தல்!




தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச்செயலாளர் ம.இராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் தூய்மை பணியாளர்கள், பாதுகாவல் பணியாளர்கள் என 132 ஒப்பந்த தொழிலாளர்கள் பல்லாண்டுகளாக பணியாற்றி வருகின்றனர். இவர்கள் கடந்த 2022 மே மாதம் முதல் QPMS என்ற குவாலிட்டி பிராபர்டி மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் (பி) லிட்., என்ற ஒப்பந்த நிறுவனத்தின் கீழ் பணியாற்றி வருகின்றனர்.

தமிழ்நாடு அரசின் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்திற்கும், QPMS ஒப்பந்த நிறுவனத்திற்கும் ஏற்பட்ட ஒப்பந்தப்படி, ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயித்த குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்பட வேண்டும். அதன்படி, இவர்களுக்கு 2021–2022 ஆம் ஆண்டுக்கு நாளொன்றுக்கு ரூ.693ம், 2022–2023ஆம் ஆண்டுக்கு நாளொன்றுக்கு ரூ.707ம் ஊதியமாக வழங்கப்பட வேண்டும். ஆனால், QPMS ஒப்பந்த நிறுவனம் நாளொன்றுக்கு ரூ.310 வீதமே ஊதியம் வழங்கி வருகிறது. ஆகவே, மாவட்ட ஆட்சியர் நிர்ணயித்த குறைந்தபட்ச ஊதியத்தை வழங்கக்கோரி தொழிலாளர்கள் போராடி வந்தனர்.

இந்நிலையில், நாளொன்றுக்கு சுமார் ரூ.395 வீதம் மாதம் ரூ.11,840 ஊதியம் வழங்கப்படும் என கடந்த 21.12.2022 அன்று ஒரு 18(1) ஒப்பந்தம் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தெரியாமல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்த ஒப்பந்தத்தில் நாளொன்றுக்கு சுமார் ரூ.300 குறைவாக ஊதியம் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இது சட்ட விரோத ஒப்பந்தம் மட்டுமல்ல, தொழிற்தாவா சட்டப்படியே கூட ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு பொருந்தாது. ஆனால் இந்த சட்டவிரோத ஒப்பந்தத்தை ஏற்க மறுத்ததற்காக ஏ.கல்பனா உள்ளிட்ட 6 தொழிலாளர்களுக்கு வேலை வழங்க மறுக்கப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து தொழிலாளர்கள் தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்து, கடந்த 25.01.2023 அன்று ஈரோடு வருவாய் கோட்டாட்சியர், ஈரோடு நகர காவல் துணைக் கண்காணிப்பாளர், அரசு மருத்துவமனை கண்காணிப்பாளர் மற்றும் உறைவிட மருத்துவ அலுவலர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் QPMS ஒப்பந்த நிறுவனத்திற்கும், ஏஐடியுசி தொழிற்சங்கத்திற்கும் இடையில் ஒரு சமரச உடன்பாடு ஏற்பட்டது. அதாவது வேலை மறுக்கப்பட்ட மற்றும் ஆதரவாக போராட்டத்தில் ஈடுபட்ட 16 தொழிலாளர்களுக்கும் முழுச் சம்பளத்துடன் 30.01. 2023 முதல் பழையபடி வேலை வழங்கப்படும் என்றும், 15 தினங்களுக்குள் தொழிற்சங்கத்தின் ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகள் மீது பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும் QPMS நிறுவனம் கடிதம் மூலம் உறுதிமொழி அளித்தது.

ஆனால், தான் அளித்த உறுதி மொழியை நிறைவேற்ற தொழிலாளர்களுக்கு பல்வேறு நிபந்தனைகளை விதித்து வந்த ஒப்பந்த நிறுவனம் மொத்தத்தில் அடிமை சாசனம் எழுதித் தருமாறு அடம்பிடிக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலேயே கொத்தடிமை முறை ஒழிக்கப்பட்டது என்பதும் அரசியல் அமைப்புச் சட்டம் கொத்தடிமை முறையில் இருந்து தொழிலாளர்கள் தற்காத்துக்கொள்ளும் உரிமையை அடிப்படை உரிமையாக ஏற்றுக் கொண்டுள்ளது என்பதையும் கூட ஏற்க மறுக்கும் அளவுக்கு சட்டத்தை மீறும் வாய்ப்பும், துணிச்சலும் கொண்டதாக ஒப்பந்ததாரர் நிறுவனம் திகழ்கிறது. இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு சென்றும் பலனேதும் இல்லை.

ஆகவே, QPMS ஒப்பந்த நிறுவனத்தின் நேர்மையற்ற, சட்ட விரோத, தொழிலாளர் விரோத, பழிவாங்கும் நடவடிக்கைகளைக் கண்டித்து, 31.01.2023 காலை 10.00 மணி முதல் ஈரோடு அரசு மருத்துவமனை வளாகத்தில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களும், தமிழ்நாடு ஏஐடியுசி செயலாளரும், தொழிற்சங்கத்தின் தலைவருமான எஸ்.சின்னசாமி தலைமையில் காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொழிலாளர்களை சுரண்டுவது யாரொருவருவருக்கும் பிறப்புரிமை அல்ல; சுரண்டலில் இருந்து தற்காத்துக் கொள்வது அரசியல் அமைப்புச் சட்டம் தொழிலாளர்களுக்கு வழங்கிய அடிப்படை உரிமை என்பதை இந்த ஒப்பந்த நிறுவனத்திற்கு உணர்த்தி தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற செய்ய, தமிழ்நாடு அரசும், மருத்துவத்துறையும் உடனடியாக தலையிட்டு தக்க தீர்வு காண முன்வர வேண்டும் என்று தமிழ்நாடு ஏஐடியுசி சார்பில் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தல்:

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தேர்தல் பணிக் குழு அமைப்பு

ஈரோடு: ஈரோடு கிழக்குத் சட்டமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தல் தயாரிப்பு பணிகள் குறித்த சிறப்புக் கூட்டம் ஜன.29 அன்று ஈரோட்டில் கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் சி.எம்.துளசிமணி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கட்சியின் சார்பிலான தேர்தல் பணிக்குழு அமைக்கப்பட்டது. இப் பணிக்குழுவின் பொறுப்பாளராக கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.டி.பிரபாகரன் தேர்வு செய்யப்பட்டார்.

மேலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் தேசிய குழு உறுப்பினர் த.ஸ்டாலின் குணசேகரன், மூத்த வழக்கறிஞர் ப.பா.மோகன், மாநில பழங்குடி மக்கள் சங்கத் தலைவர் வி.பி.குணசேகரன், கட்சியின் முன்னாள் ஈரோடு மாவட்டச் செயலாளர் கே.ஆர்.திருநாவுக்கரசு, பவானிசாகர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.சுந்தரம், கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் டி.ஏ.மாதேஸ்வரன், மாநில விவசாயிகள் சங்க துணைச் செயலாளர் சி.எம்.துளசிமணி, கட்சியின் ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.மோகன்குமார், ஈரோடு வடக்கு மாவட்டத் துணைச் செயலாளர் ஜி.வெங்கடாசலம், ஏஐடியுசி தொழிற்சங்க மாநிலச் செயலாளர் எஸ்.சின்னச்சாமி, கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டத் துணைச் செயலாளர் எம்.குணசேகரன், ஈரோடு தெற்கு மாவட்டப் பொருளாளர் என்.ரமணி உள்ளிட்ட 53 பேர் கொண்ட பணிக் குழு அமைக்கப்பட்டது.

## ஜனசக்தி வளர்ச்சி நிதி

கரூர் மாவட்டம், தாந்தோனி ஒன்றியம், கொக்கம்பட்டி தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க முன்னணி தோழர் வி.சுப்பிரமணியன் – லதா தம்பதியினரின் மகன் எஸ்.விக்னேஷ்வரன் – மேல லட்சுமணம்பட்டி ஏ.சந்தானம் – பெரியக்காள் தம்பதியினரின் மகள் எஸ்.கோகிலவாணி ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி ஜன.23 அன்று தாந்தோனிமலை டி.வி.சரஸ்வதி மஹாலில் நடைபெற்றது. த.ஒ.வா.இ. கரூர் மாவட்டச் செயலாளர் பி.பாலன், வி.தொ.ச. கரூர் மாவட்டச் செயலாளர் ஆர்.தங்கவேல், இளைஞர் பெருமன்ற கரூர் மாவட்டச் செயலாளர் எம்.லட்சுமிகாந்தன், வி.தொ.ச. தாந்தோனி ஒன்றியச் செயலாளர் எஸ்.செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் ஜனசக்தி வளர்ச்சி நிதி ரூ.1000 மணமக்கள் சார்பில் வழங்கப்பட்டது.

# மே மாதம் மதுரையில் வழக்கறிஞர்கள் சங்க மாநாடு




இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநில வழக்கறிஞர்கள் கூட்டம் தஞ்சாவூர் அலுவலக கூட்ட அரங்கில் ஜன.28 அன்று நடைபெற்றது.

கட்சி யின் மாநில நிர்வாக குழு உறுப்பினர் வழக்கறிஞர் மு.அ.பாரதி தலைமையேற்றார். மாநில செயலாளர் இரா.முத்தரசன் கூட்டத்தை துவக்கி வைத்து பேசினார். மாநில செயற்குழு உறுப்பினர்கள் டி.எம்.மூர்த்தி, வை.சிவபுண்ணியம், மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் முத்து.உத்திராபதி, கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் கோ.பாண்டியன், ஏஐடியுசி மாநிலச் செயலாளர் சி.சந்திரகுமார் உள்ளிட்டோர் பேசினார்கள். மாநிலம் முழுவதிலிருந்தும் 200க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் பங்கேற்றனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, வழக்கறிஞர் பிரிவு மாநில மாநாட்டை, மதுரையில் 2023 மே மாதத்தில் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. இந்தியாவின் அனைத்து மொழிகளிலும் உச்ச நீதிமன்ற தீர்ப்புகள் வெளியிடப்பட வேண்டும் என்ற அறிவிப்பை கூட்டம் வாழ்த்தி வரவேற்றது.

இதேபோன்று மாநில உயர் நீதிமன்றங்களில், அந்தந்த மாநில மொழியில் வழக்காடுவதையும், தீர்ப்புகள் எழுதப்படுவதையும் ஏற்று அங்கீகரிக்க வேண்டுமென கூட்டம் வலியுறுத்தியது.

கீழமை நீதிமன்றங்கள் உட்பட அனைத்து நீதிமன்றங்களிலும், நீதிபதிகள், நடுவர்களை நியமனம் செய்யாமல் ஏறத்தாழ பாதி நீதிமன்றங்கள் செயல்படாத நிலை உள்ளது. இதனால் பல்லாயிரக்கணக்கான வழக்குகள் தீர்வுக்கு வராமலேயே நிலுவையில் உள்ளன. தமக்கான நீதி கிடைக்கும் என நம்பி வழக்கு தொடுத்த மக்கள் பல ஆண்டு காலம் பொருளின்றி நீதிமன்றங்களுக்கு அலைய நேரிடுகிறது. நீதி வழங்குவதைக் காலதாமதம் செய்வது, நீதி மறுக்கப்படுவதாகும். எனவே அனைத்து காலிப் பணியிடங்களையும் உடனடியாக நிரப்ப வேண்டும்.

தற்காலிக கட்டிடங்களில் இயங்கும் நீதிமன்றங்களுக்கு புதிய கட்டிடங்களை உடனடியாக கட்ட வேண்டும். போதிய அளவில் வழக்கறிஞர் அலுவலகங்கள், நூலகங்கள் உள்ளிட்டவை உருவாக்கப்பட வேண்டும் என கூட்டம் வலியுறுத்துகிறது என்பன உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாற்றுக் கட்சியைச் சேர்ந்த

# 54 பேர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்



திருச்சி பெரிய மிளகு பாறையில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் மேற்கு பகுதி செயலாளர் இரா.சுரேஷ் முத்துசாமி தலைமையில் நடைபெற்ற இணைப்பு விழா நிகழ்ச்சியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி மாநகர் மாவட்ட குழு உறுப்பினர் சி.சந்திர பிரகாஷ் தலைமையில் கிளை செயலாளர்கள் மௌலானா, ராமசாமி, ரமேஷ், பிரேமா, புவனா, மாரியம்மா உள்ளிட்ட 54 பேர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர். மேலும் இதில் மாதர் சங்கத்தைச் சேர்ந்த எல்.லலிதா, இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தைச் சேர்ந்த எஸ். காஜா, தர்மா, சிஐடியு ஆட்டோ சங்கத்தைச் சேர்ந்த எஸ்.ஆசிக் அலி ஆகியோரது தலைமையிலும் தங்களது சங்க நிர்வாகிகளோடு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வெகுஜன அமைப்பில் இணைத்துக் கொண்டனர்.

ஏஐடியுசியின் மாவட்ட பொதுச் செயலாளர் க.சுரேஷ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.சிவா ஆகியோர் சால்வை அணிவித்து வரவேற்று சிறப்புரையாற்றினார். நிகழ்விற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டத் துணைச் செயலாளர் சி.செல்வகுமார், மாதர் சங்க நிர்வாகிகள் க.ஆயிஷா, வை.புஷ்பம் ஈஸ்வரி, மேற்கு பகுதி துணைச் செயலாளர் க. முருகன், பொருளாளர் பி.ரவீந்திரன் மற்றும் கிளை செயலாளர்கள் துரைராஜ், சரன்சிங் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இறுதியாக மாவட்ட குழு உறுப்பினர் க.இப்ராகிம் நன்றி கூறினார்.

# நூல் நயம்

## எழுதுகோல் சிறுகதைச்சரம்




சின்ன சின்ன இழைகளால் பின்னப்படும் பட்டு சேலைகளைப் போல், சிறுசிறு சம்பவங்களால் பின்னப்பட்டது எழுதுகோல் சிறுகதைச்சரம் எனும் இந்நூல். நூல் ஆசிரியர் ஞா.சிவகாமி ஓய்வு பெற்ற தலைமைச் செயலக அரசு அலுவலர். வாசிப்பு பழக்கமும், வாசிப்பதை யோசிக்கும் பழக்கமும், யோசிப்பதை எழுதும் பழக்கமும் உடையவர். அவர் தொடுத்த சரமே இந்த எழுதுகோல் சிறுகதைச்சரம்.

பெண் பிள்ளைகளை பெற்றவர்கள் அவர்களை படிக்க வைக்க முடியாமல் படுகிற தவிப்பு, அதனால் ஏற்படுகிற வேதனையும் பெற்றோருக்கு சொல்லி மாளாது. எதிர்பாராமல் ஏற்படுகிற நோய்கள் அதனால் ஏற்படுகிற வேலை இழப்பு, வருமான இழப்பு போன்றவற்றால் பிள்ளைகளின் படிப்பு பாதியிலே நிறுத்தப்படுகிற போது துன்பம் இரட்டிப்பாகும். அப்படி துன்பப்படுகிற ஒரு குடும்பத்திற்கு எதிர்பாராத விதமாக அந்த பிள்ளை படிக்கிற பள்ளியின் ஆசிரியர். தனது வறுமை நிலையிலும் அவர் தனது வருவாயில் ஒரு பகுதியை அந்த குழந்தையின் படிப்புக்காக செலவழிக்கிற போது ஏற்படும் இன்பத்திற்கு அளவேது? கடவுளுக்குத் தரும் காணிக்கை விட ஓர் ஏழைக்குத் தரும் கல்வி உயர்வானது என்னும், அந்த ஆசிரியரின் வாக்கு அச்சரம் லட்சம் பெரும். இதுவே எழுதுகோல் சிறுகதையின் சாரமாகும்.

‘அன்பே சிவமப்பா, அப்பா இல்லாத நானு வெறும் சவம் அப்பா ‘ சிறுகதைக்குள்ளே அழகான கவிதைகளையும் வைத்துள்ளார் நூலாசிரியர். ஒவ்வொரு குழந்தைகளுக்கும் தந்தை எவ்வளவு முக்கியம் என்பதை இந்த அப்பா சிறுகதையில் எடுத்து கூறியுள்ளார். அப்பாவின் உழைப்பு தானே ஒவ்வொரு குழந்தைகளையும் உயர்த்துகிறது. அப்பாவின் வியர்வையால் நனைந்த வேர்க்கடலை உப்பு கரித்தாலும் அதுவும் தனி ருசி தானே.

இந்த சரத்தில் உள்ள ஒவ்வொரு கதைகளும் ஒவ்வொரு ரகம். ஒவ்வொன்றும் தனது வாழ்க்கை அனுபவங்களை மற்றவருக்கு எடுத்து சொல்லுகிறது. எளிய நடை, இனிய முறையில் எழுதப்பட்டுள்ளது இந்நூலை அனைவரும் வாங்கி படிக்க வேண்டும்.

– இன்சுவை பாரதி

நூலாசிரியர் : ஞா. சிவசாமி
பக்கம் : 196 விலை : 100
வெளியீடு : மணிமேகலை பிரசுரம் , 7, தனிகாசலம் சாலை, தியாகராய நகர், சென்னை 17

## தமிழ்- சமஸ்கிருதச் செவ்விலக்கிய உறவுகள்




தமிழ், சமஸ்கிருத செவ்விலக்கிய உறவுகள் என்னும் தலைப்பிலான இந்நூல், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக தமிழ்ப் பிரிவின் முழு ஒத்துழைப்போடு, தமிழ் சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளிலும் இடம்பெறும் தேர்வு செய்யப்பட்ட பெண்பாற் புலவர்களின் பாடல்களை ஆய்வு பரப்பாக வரையறுக்கப்பட்டடு நூலாசிரியர் ஆய்வுப் பணியை தொடங்கும்போது, தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளுக்கு இடையான ஆய்வை பேராசிரியர் ஜார்ஜ் ஹார்ட் செய்துள்ளதை அறிந்து, தேடத் தொடங்கிய போது கிடைத்த ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பே இந்நூல் என நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழுக்கும், சமஸ்கிருதத்திற்கும் இடையே உள்ள உறவை அறிவது என்பது, கலப்பு மணத் தம்பதியரின் உறவு முறையை பற்றி அறிந்து கொள்ளும் முயற்சி போன்றதாகும்.இந்திய பண்பாட்டின் சிகரங்களாக விளங்கும் இரு வேறு இலக்கியக் கருத்துக் களஞ் சியங்களை அலசும் முயற்சியாகும் இது.

பிராக்கிருதம் பேசப்பட்ட தென்கோடி பகுதியில், திராவிட மற்றும் ஆரிய மொழிகளின் தொடர்பு அமைகிறது.இன்றும் கூட இப்பகுதி வட மற்றும் தென்னிந்திய மரபின் கலவையாக காட்சியளிக்கிறது. சதாவாகனர் காலத்தில் மராட்டிய, ஆந்திர பகுதிகளை உள்ளடக்கியதாக ஆரிய, திராவிட மொழிகளை பேசுவதாக இப்பகுதி அமைந்துள்ளது. மகாராஷ்டிராவின் பண்பாடு என்பது கி.பி.முதலாம் நூற்றாண்டுகளில் ஆரியம், தக்காணம் (அல்லது திராவிடம்) ஆகியவற்றின் கலப்பாகவே காணப்பட்டது. தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளும் தங்களுக்குள் பகிரப்பட்டுள்ள மரபுகள், யாப்பு, உத்தி முறைகள் முதலியவற்றை ஒரு பொதுவான மூலத்தில் இருந்து பெற்றுக் கொண்டன. ஒன்று மற்றொன்றிலிருந்து நேரடியாக பெறவில்லை என்பதை அறிய முடிகிறது. தமிழ், சமஸ்கிருதத்தில் இருந்து கடன் பெற்றிருக்க வாய்ப்பில்லை ஏனெனில் பல மரபுகள் முதலில் தமிழிலே காணப்படுகின்றன. சமஸ்கிருதத்திற்கு சொந்தமான யாப்பு அமைப்பு கிடையாது . ஆனால் தமிழுக்கு உண்டு . இதனோடு தொடர்புடைய பிற கூறுகளும் சமஸ்கிருத எதிரிணையோடு ஒத்து அமைவதில்லை. சமஸ்கிருதமும், தமிழிருந்து கடன் பெற்று இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் சமஸ்கிருத புலவர்கள் தமிழ் மரபை அறிந்திருக்கவில்லை என்பது தெளிவாகிறது.

இவ்விரு இலக்கியங்களுக்குமான அமைப்பும், இவை நேரடியாக கடன் பெற்றவை என சுட்டுவதற்கு போதுமானதாக இல்லை என நூல் ஆசிரியர் குறிப்பிடுகிறார். ஆய்வாளர்கள் தமிழ், சமஸ்கிருத செவ்விலக்கிய உறவுகளை அறிந்து கொள்ள இந்நூல் பெரிதும் உதவும் அனைவரும் வாங்கி படிக்க வேண்டும்.

–சமரன்

நூலாசிரியர் : ஆங்கிலம்: ஜார்ஜ் எல். ஹார்ட் தமிழில்: டி.கமலக்கண்ணன்
பக்கம் : 70 விலை: 90
வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–50

15 ம் பக்கத் தொடர்ச்சி

## வேலூர் மண்டலக் கூட்டம் 25.01.2023:

வேலூர் மாவட்டச் செயலாளர் லதா, ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் பி.ஆர்.சுப்பிரமணியன், திருப்பத்தூர் மாவட்டம் சார்பில் ஏ.சி.சாமிக்கண்ணு, வேணுகோபால், பூபதி, வெங்கடேஷ், கிருஷ்ணகிரி மாவட்டம் சார்பில் நூர்முஹமது, டேவிட்ராஜ், முஹமது ஹாசிப், எஸ்.முல்லா, ஆசிரியர் அரங்கம் சார்பில் மணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அனைத்து கூட்டங்களிலும் ஜனசக்தி வடிவமைப்பு, செய்திகளைத் திரட்டுதல், ஈர்க்கும் வகையிலான கட்டுரைகள் பெறுதல் உள்ளிட்ட விபரங்களை டி.எம்.மூர்த்தி விளக்கிப் பேசினார். அறிவியல் வளர்ச்சியின் காரணமாக அச்சிடப்படும் இதழ்கள் சுருங்கி, காட்சி ஊடகமாக ஆன்லைன் தொலைக்காட்சி, யூடியூப், ஃபேஸ்புக், வாட்ஸ் அப் என விரிவடைவதையும், ஜனசக்தி இதழை புதிய ஊடகங்களில் வாயிலாக கொண்டு வருவதற்கும், மேம்படுத்துவதற்கும் எடுக்கப்படும் முயற்சிகள் குறித்து த.லெனின் எடுத்துரைத்தார். ஜனசக்தி காலண்டர், சிறப்பிதழ், பாக்கிகள் குறித்தும், அஞ் சல் மூலமாக ஜனசக்தியை அனுப்புவதில் ஏற்படும் இடையூறுகள் மற்றும் அவற்றை எதிர்கொள்ளும் வழிமுறைகள் பற்றியும் இளசை எஸ்.கணேசன் விளக்கினார்.

தற்போதைய அரசியல் சூழல் பற்றியும், அதில் நமது பத்திரிகையின் தேவை குறித்தும், உரிய ஏற்பாடுகளை செய்து முடிந்த அளவு விரைவாக நாளிதழாக ஜனசக்தியைக் கொண்டு வருவது பற்றியும், மாவட்ட வாரியாக ஜனசக்தி சந்தாக்களை அதிகரிப்பதற்கான திட்டங்கள் குறித்தும் உரிய தரவுகளோடு இரா.முத்தரசன் விரிவாக எடுத்துரைத்தார்.

இதற்குப் பின்னர், கூட்டங்களில் பங்கேற்ற தோழர்கள் தமது கருத்துக்களை முன்வைத்தனர். அந்தக் கருத்துக்களை வகைமைப்படுத்தி, செயல்படுத்த படிப்படியாக ஏற்பாடுகள் செய்யப்படும் என உறுதி அளிக்கப்பட்டது.

ஐந்து மண்டலக் கூட்டங்களில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

### 1. சந்தா சேர்ப்பு இயக்கம்:

2023 பிப்ரவரி 1ஆம் நாள் தொடங்கி பிப்ரவரி 28வரை ஜனசக்தி சந்தா சேர்ப்பு இயக்கத்தை அனைத்து கட்சிக் கிளைகளும் நடத்த வேண்டும். மாநிலக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் குழு உறுப்பினர்கள், இடைக்குழு உறுப்பினர்கள் அனைவரும் ஆயுள் சந்தா அல்லது ஆண்டு சந்தா செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு கட்சிக்கிளையும் ஐந்து சந்தாக்களை விட அதிகமான ஆண்டு சந்தா செலுத்த வேண்டும். தனி மாவட்டக்குழு உறுப்பினர்கள் அனைவரும் ஆயுள் சந்தா செலுத்த வேண்டும்.

கட்சிக்கு வெளியில் இடதுசாரி அரசியல் ஆதரவாளர்கள், பிற கட்சியினர், மக்கள் பிரதிநி திகள் ஆகியோரிடமும் சந்தா வசூலிக்க வேண்டும்.

இதன்படி ஒவ்வொரு மாவட்டமும் வசூலிப்பதற்கான சந்தா இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. சந்தா வழங்கும் விழாக்களை பிப்ரவரி இறுதி வாரத்தில் ஒவ்வொரு மாவட்டமும் நடத்தி வசூலித்த சந்தாக்களை ஒப்படைக்க வேண்டும்.

கட்சி நடத்தும் இலக்கிய இதழான ‘தாமரை’க்கும் இதே காலத்தில் சந்தா வசூலிக்க வேண்டும். இதற்கென மாவட்டங்கள் ஏற்றுக் கொண்டுள்ள எண்ணிக்கை இலக்கைத் தாண்டியும் வசூலித்து விழாவில் ஒப்படைக்க வேண்டும்.

நாளிதழ் துவக்க தேவைப்படும் தொகையை முன்னதாகவே வசூலித்து வைப்பு நிதியில் சேர்க்கும் வகையில், மாவட்டத்திற்கு 100 ஆயுள் சந்தாக்களை சேர்க்க வேண்டும்.

### 2. பொறுப்பாளர், நிருபர், புகைப்பட கலைஞர்களை தேர்வு செய்தல்

ஜனசக்தி பொறுப்பாளர்களை இன்னும் தேர்வு செய்யாத சில மாவட்டங்கள் உள்ளன. காலதாமதமின்றி உடனே தேர்வு செய்து பெயரை, அலைபேசி எண்ணை ஜனசக்திக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு நிருபர், புகைப்பட கலைஞரை நியமிக்க வேண்டும். அவர்கள் எழுதுவதிலும், செய்தி சேகரிப்பதிலும், புகைப்படங்களை எடுப்பதிலும் ஆர்வமுள்ளவராகவும், கட்சிக் கட்டுப்பாடு கொண்டோராகவும் இருக்க வேண்டும்.

இவர்களுக்கு மண்டல அளவிலான பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு அச்சு, காட்சி ஊடகங்களில் வெற்றிகரமாக இயங்குவது பற்றி திறன் வாய்ந்தவர்கள் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்யப்படும்.

### 3. ஜனசக்தி, தாமரை வாசகர் வட்டம்:

ஜனசக்தி, தாமரை இதழ்களைப் படித்த பின்பு அவற்றின் உள்ளடக்கம், வடிவமைப்பு ஆகியவை பற்றி விவாதித்து, கருத்துக்களை நம் இதழ் ஆசிரியர்களுக்கு தெரிவிக்கும் வகையில் ஜனசக்தி, தாமரை வாசகர் வட்டங்களை அமைக்க வேண்டும். அவை முறையாக, தொடர்ச்சியாக இயங்குவதை மாவட்டக் கட்சி கவனத்தில் கொண்டு உறுதிப்படுத்த வேண்டும்.

### 4. காட்சி ஊடகப் பயிற்சி:

இதழியலில் ஆர்வமுள்ள, சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகிற இளைஞர்களுக்கு, செய்தி சேகரித்தல், வீடியோ பதிவு செய்தல், எடிட் செய்யும் வழிமுறைகள், பதிவேற்றம் உட்பட டிஜிட்டல் மற்றும் மொபைல் ஊடகப் பயிற்சி அளிக்கும் திட்டம் உள்ளது. இத்துறையில் பணியாற்றும் சிறந்த தொழில்நுட்ப வல்லுனர்களைக் கொண்டு இப்பயிற்சி தரப்படும்.

இதற்கு கட்சி உறுப்பினராக இருந்தாக வேண்டும் என்ற அவசியம் இல்லை. மனிதத்தை நேசிப்பவராகவும், இடதுசாரி அரசியல் பார்வை கொண்டவராகவும் இருந்தால் போதுமானது. அவர்களைக் கண்டறிந்து, பெயர், தொலைபேசி எண் பட்டியலை மாநிலத் தலைமைக்கு, மாவட்டச் செயலாளர்கள் விரைவில் அனுப்பி வைக்க வேண்டும்.

### 5. மாவட்டச் சிறப்பிதழ்கள்:

மாவட்டத்தின் சமூக, அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை தரும் மாவட்டச் சிறப்பிதழ்கள் வெளியிட வேண்டும். இதற்கு கணிசமான விளம்பரத்தை அந்த மாவட்டம் திரட்டித்தர வேண்டும். இதற்கான தேதியை முடிவு செய்து ஜனசக்திக்கு தெரிவிக்க வேண்டும்.

### 6. வாரம் ஒரு விளம்பரம்:

ஒவ்வொரு இதழுக்கும் கால்பக்கத்துக்கு குறையாத ஒரு விளம்பரத்தை, வாரத்திற்கு ஒரு மாவட்டம் வீதம் திரட்டித்தர வேண்டும். இவ்வகையில் ஓர் ஆண்டுக்கு ஒரு விளம்பரத்தை மாவட்டக்குழு வழங்கும் இது நிதித் தட்டுப்பாட்டை போக்க உதவும்.

### 7. ஜனசக்தி பாக்கி:

ஜனசக்தி முகவர், காலண்டர், சிறப்பிதழ் மற்றும் விளம்பர பாக்கிகளை பிப்ரவரி மாதம் 20ஆம் தேதிக்குள் தந்துமுடித்து விட அனைத்து மாவட்டங்களும் ஒப்புக் கொண்டன. கால நீட்டிப்பு கேட்காமல் நிலுவைத் தொகைகளை வழங்க வேண்டும்.

மேற்சொன்ன மண்டலக் கூட்டங்களில் பங்கேற்காத மாவட்டங்கள் மற்றும் நேரடி தனி மாவட்டக்குழுக்களின் செயலாளர்கள் மற்றும் ஜனசக்தி பொறுப்பாளர்களின் கூட்டம் விரைவில் நடத்தப்படும். தவிர்க்காமல் வந்து கலந்து கொள்ள வேண்டும்.

ஜனசக்தி, தாமரை சந்தா இயக்கத்தை வெற்றிகரமாக நடத்தி முடிக்க மாவட்டக் கூட்டங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். ஆயுள், ஆண்டு சந்தாக்களை இலக்கைத்தாண்டி வசூலிக்க ஊக்குவிக்க வேண்டும்!

## 1200 கர்ப்பிணி தாய்மார்களுக்கு சீர்வரிசை



தளி சட்டமன்றத் தொகுதி கெலமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சார்பில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு திருவிழாவில் 1200 கர்ப்பிணி தாய்மார்களுக்கு தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் சீர்வரிசை வழங்கி வாழ்த்துரை வழங்கினர்.

மண்டலக் கூட்டங்களின் முடிவுகள்:

# ‘ஜனசக்தி’ ஜனங்களின் சக்தியாகட்டும்!



டி.எம்.மூர்த்தி

## ஒரே மாதத்தில் 50,000 சந்தா!

ஜனசக்தி இதழின் விற்பனை, வடிவமைப்பு, உள்ளடக்கம் ஆகியவற்றை மேலும் மேம்படுத்துவதற்கான கூட்டங்கள் ஜனவரி 19 முதல் 25 வரை நடத்தப்பட்டன.

இக் கூட்டங்களில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், ஜனசக்தி ஆசிரியர் டி.எம்.மூர்த்தி, பொறுப்பாளர்கள் த.லெனின், இளசை கணேசன் ஆகியோர் மாநில மையத்திலிருந்து பங்கேற்றனர்.

மதுரை, ஈரோடு, சென்னை, தஞ்சாவூர், வேலூர் ஆகிய இடங்களில் நடந்த இந்த ஐந்து மண்டலக் கூட்டங்களுக்கு மாவட்ட செயலாளர்கள், மாவட்ட ஜனசக்தி பொறுப்பாளர்கள், மாவட்டங்களுக்குப் பொறுப்பேற்கும் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

கலந்து கொண்ட தோழர்களின் விபரம் வருமாறு:

### மதுரை மண்டலக் கூட்டம் 19.01.2023:

கன்னியாகுமரி மாவட்டச் செயலாளர் தா.சுபாஷ்சந்திரபோஸ், சிவகங்கை மாவட்டச் செயலாளர் கண்ணகி, ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் என்.முருகேசன், தேனி மாவட்டச் செயலாளர் கே.பெருமாள், ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் வே.பரமேஸ்வரன், தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் பி.கரும்பன், ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் த.சுப்பிரமணி, இராமநாதபுரம் சார்பில் கே.சுப்பிரமணியன், விருதுநகர் ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் எஸ்.பழனிக்குமார், மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் பி.முத்துவேல், ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் கே.நாகஜோதி, மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.முருகன், ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் இரா.முருகன், தென்காசி மாவட்டச் செயலாளர் டி.இசக்கிதுரை, ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.சமுத்திரக்கனி, திருநெல்வேலி மாவட்டச் செயலாளர் செ.லட்சுமணன், ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் ஏ.முத்துக்கிருஷ்ணன், தனி 2ஏ மாவட்டம் சார்பில் ஆர்.பார்த்தசாரதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் மண்டலம் சார்பில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர்கள் எம்.ரவி, டி.ராமசாமி, மாநில கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் ப.காளிதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ஈரோடு மண்டலக் கூட்டம் 20.01.2023:

கரூர் மாவட்டச் செயலாளர் கே.என்.நாட்ராயன், ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.ராஜேந்திரன், ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.டி.பிரபாகரன், ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் என்.ரமணி, ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் சு.மோகன்குமார், ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் எஸ்.கந்தசாமி, சேலம் மாவட்டச் செயலாளர் ஏ.மோகன், ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் டி.வி.கருணைதாஸ், திருப்பூர் மாநகர் மாவட்டச் செயலாளர் எஸ்.ரவிச்சந்திரன், ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் காட்டே ராமசாமி, திருப்பூர் புறநகர் மாவட்டச் செயலாளர் கே.எம்.இசாக், ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.ஷாஜகான், கோவை மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி, ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் பெ.மௌனசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் மண்டலம் சார்பில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் எம்.ரவி, கட்சியின் மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சென்னை மண்டலக் கூட்டம் 21.01.2023:

கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் கு.ராமசாமி, ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் மு.கலியபெருமாள், தென் சென்னை மாவட்டச் செயலாளர் எஸ்.கே.சிவா, ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் வி.கே.கோபாலன், வடசென்னை மாவட்டச் செயலாளர் த.கு.வெங்கடேஷ், ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் ஜி.சுப்பிரமணியன், மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் பா.கருணாநிதி, ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் மு.வரதன், திருவள்ளூர் மாவட்டச் செயலாளர் கே.கஜேந்திரன், காஞ்சிரபுரம் மாவட்டச் செயலாளர் பா.கார்த்திக், செங்கல்பட்டு மாவட்டச் செயலாளர் ஏ.ராஜ்குமார், ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் சேகுவேராதாஸ், கடலூர் மாவட்டச் செயலாளர் பி.துரை, ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் முருகையன், விழுப்புரம் மாவட்டச் செயலாளர் ஆ.சௌரிராஜன், ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.முருகன், தனி (வங்கி) மாவட்டச் செயலாளர் ஜி.முரளி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் மண்டலம் சார்பில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் ம.ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டார்.

### தஞ்சை மண்டலக் கூட்டம் 20.01.2023:

திருச்சி மாநகர் மாவட்டச் செயலாளர் எஸ்.சிவா மற்றும் சுரேஷ்முத்துசாமி, திருச்சி புறநகர் சார்பில் மு.சிவராமன், தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் மு.அ.பாரதி, ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் ஏ.ராஜேந்திரன், தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளர் முத்து உத்திராபதி, ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் பாலசுப்பிரமணியன், திருவாரூர் மாவட்டச் செயலாளர் வை.செல்வராஜ், ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் கே.ஆர்.ஜோசப், நாகப்பட்டினம் மாவட்டச் செயலாளர் சிவகுரு பாண்டியன், ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் கே.பாஸ்கர், மயிலாடுதுறை ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் மா.பிரபாகரன், அரியலூர் மாவட்டச் செயலாளர் இராமநாதன், ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் ராஜா பெரியசாமி, பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் ஜெயராமன், புதுக்கோட்டை ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் மீராமைதீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் மண்டலம் சார்பில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர்கள் வை.சிவபுண்ணியம், பி.பத்மாவதி, மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் எம்.செல்வராசு எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டனர்.



மதுரை மண்டலக் கூட்டம்



ஈரோடு மண்டலக் கூட்டம்




சென்னை மண்டலக் கூட்டம்



தஞ்சை மண்டலக் கூட்டம்



வேலூர் மண்டலக் கூட்டம்

தொடர்ச்சி 14ம் பக்கம்

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 04.02.2023 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# மாணவர் பெருமன்ற மாவட்ட மாநாடுகள்

**அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாவட்ட மாநாடுகள் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வருகின்றன. இதில் பெருந்திரளான மாணவர்கள் எழுச்சியோடு பங்கேற்றனர்.**



**திருவாரூர்:** திருவாரூர் மாவட்ட கல்வி வளர்ச்சி மாநாடு 30.01.2023 அன்று மாவட்டத் தலைவர் ஜெ.பி.வீரபாண்டியன், பூசலாங்குடி தலைவர் ர.சுபிதா, ஆர்த்தி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.பாலமுருகன் இரங்கல் தீர்மானம் வாசித்தார். மாவட்டப் பொருளாளர் எம்.நல்லசுகம் வரவேற்புரையாற்றினார்.

மாநிலத் தலைவர் மௌ.குணசேகர் மாநாட்டை தொடங்கி வைத்து உரையாற்றிட, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் வை.செல்வராஜ் நிறைவுரையாற்றினார். பேராசிரியர் முனைவர் அ.முருகானந்தம், விரிவுரையாளர் எஸ்.ஆறுமுகம், கருத்துரை வழங்கினர். விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலாளர் பிஎஸ். மாசிலாமணி, இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் துரை.அருள்ராஜன், தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட துணை செயலாளர் எம்.நாகராஜன், ஏஐடியூசி மாவட்ட துணை செயலாளர் எஸ்.செல்வம், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாவட்ட செயலாளர் சு.பாலசுப்ரமணியன் மாநாட்டு அறிக்கை முன்மொழிந்து பேசினார்.

மாநாட்டில், மாவட்டத் தலைவராக ஜோ. பாரதசெல்வன், துணைத் தலைவர்களாக எஸ்.சிவனேஷ், வீ.கனகராஜ், பா.ஆர்த்தி, செயலாளராக ஜெ.பி.வீரபாண்டியன், துணைச் செயலாளர்களாக சே.அருண், ப.ஆகாஷ், மு.மணிபாரதி, பொருளாளராக தோழர் க.கோபி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். உலக கோப்பை யோகா போட்டியில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் பெற்ற திருவாரூர் யோகா சகோதரிகள் க.தர்ஷினி, க.ஹரிணி ஆகியோருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

மாவட்டத்தில் அரசு வேளாண்மை கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரி தொடங்கப்பட வேண்டும், குடவாசல் அரசு கலைக் கல்லூரிக்கு உடனடியாக நிரந்தரக் கட்டிடம் கட்டப்பட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**மதுரை புறநகர்:** மதுரை புறநகர் மாவட்ட மாநாடு 27.01.2023 அன்று மேலூரில் மாவட்டத் தலைவர் ரா.விக்ரம் தலைமையில் நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் பி.முத்துவேல், மாவட்ட துணைச் செயலாளர் க.மெய்யர், மேலூர் தாலுக்கா செயலாளர் பி.சுரேஷ்குமார், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் கிரிஷ் பாக்கியம் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். மாணவர் பெருமன்ற மாநில தலைவர் மௌ.குணசேகர் சிறப்புரையாற்றினார்.

கட்சியின் மாநில கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் பா.காளிதாஸ் நிறைவுறையாற்றினார்.

மாநாட்டில் மாவட்டத் தலைவராக எம்.ஜெகநாதன், துணைத் தலைவர்களாக க.சேதுபாண்டி, கே.பவினா, பி.மதுமிதா, செயலாளராக ரா.விக்ரம், துணைச் செயலாளர்களாக பி.சுரேஷ் கண்ணன், கே.மதுமிதா, எஸ்.ரவிக்குமார், பொருளாளராக விஜய் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரிக்கு நிதி ஒதுக்கி கட்டுமானப் பணிகளை உடனடியாக துவங்க வேண்டும், மேலூர் அரசு கலைக் கல்லூரியில் புது விடுதி அமைக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**வடசென்னை:** வடசென்னை மாவட்ட 5வது மாநாடு 25.01.2023ஆம் தேதி விக்கி தலைமையில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் த.அன்பரசு கொடியேற்றி மாநாட்டை துவக்கி வைத்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் ஜெய்சங்கர் வாழ்த்துரை வழங்கினார். மாநாட்டில், 25 பேர் கொண்ட மாவட்டக்குழு தேர்வு செய்யப்பட்டது. மாவட்டத் தலைவராக இரா.இராமசாமி, துணைத் தலைவர்களாக சுஜிதா, அவினாஷ், மாவட்டச் செயலாளராக வசந்தபாரதி, துணைச் செயலாளர்களாக விக்கி, பார்த்தசாரதி, கௌசிகா, பொருளாளராக சதீஷ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நிர்வாகிகள் மற்றும் மாவட்டக் குழுவினரை வாழ்த்தி




கட்சியின் வடசென்னை மாவட்டச் செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி பேசினார்.

**கரூர்:** கரூர் மாவட்ட பேரவைக் கூட்டம் 29.01.2023ஆம் தேதி ஆதித்யா தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டத் தலைவராக கிரிச்சந்திரன், மாவட்டச் செயலாளராக ஆதித்யா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

தொடர்ச்சி 10ம் பக்கம்





செவ்வணக்கம்



திருப்பூர், 15 வேலம்பாளையம் முன்னாள் நகரமன்ற தலைவர்
S.P.மணி
N.சரோஜினி - P.வந்தாமணி
ஆகியோரின் அன்பு தந்தையும்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தோழருமான
சோ.வி.பச்சையப்பன் அவர்கள்
01-02-2023 புதன்கிழமை 12.30 மணியளவில் இயற்கை எய்தினார்
அவருக்கு செங்கொடி தாழ்த்தி அஞ்சலி செலுத்துகிறோம்
கே.சுப்பராயன் MP
இரா.பாலசுப்பிரமணியம்
துணைமேயர், திருப்பூர் மாநகராட்சி
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
முதல் மண்டலக் குழு, திருப்பூர் மாவட்டம்

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.